# ஈழத்து மண் மறவா மனிதர்கள்

வி. ரி. இளங்கோவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து மண் மறவா மனிதர்கள்

## வி. ரி. இளங்கோவன்

தழல் பதிப்பகம்
மதுரை - 625 018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : ஈழத்து மண் மறவா மனிதர்கள்

ஆசிரியர் : வி. ரி. இளங்கோவன்

முதற் பதிப்பு : செப்டம்பர் 2011

விரிவாக்கப்பட்ட
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2018

அச்சாக்கம் : மதுரை ஆர்ட்ஸ் & ஸ்கிரீன்ஸ்,
செல்லூர், மதுரை - 625 002.
செல் : 94434 23802.

வெளியீடு : தழல் பதிப்பகம்,
FF–3, A-பிளாக், ஆர் எஸ்எல் கோல்டன்
அப்பார்ட்மெண்ட்ஸ், திண்டுக்கல் பிரதான சாலை,
விளாங்குடி, மதுரை–625018.

பேச : 0452 / 2669924, 98425 93924.

மின்னஞ்சல் : cholanagarajan@gmail.com

விலை : ₹ 140

Eelaththu Man Marava Manitharkal
(A Collection of Articles)

Author : V. T. Elangovan
First Edition : September 2011
Expanded Second Edition : October 2018
Copyright : Author

Published by: Thazhal Pathippagam
FF-3, A-Block, RSL Golden Apartments, Dindigul Main Road,
Vilangudi, Madurai - 625 018.
Ph: 0452-2669924, 98425 93924.
Email: cholanagarajan@gmail.com

V. T. ELANGOVAN
France.
0033 769046715
vtelangovan @ yahoo. fr

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதற்பதிப்புக்கான அணிந்துரை

திரு. வி. ரி. இளங்கோவன் அவர்களின் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மிக்க மகிழ்வுறுகிறேன். அவர் மறைந்த சில முக்கியமானவர்களின் ஆளுமைகளைப் பற்றி, அவர்கள் மறைந்த சந்தர்ப்பங்களில் எழுதியவற்றை ஒரு தனி நூலாகத் தொகுத்து வெளியிடுகின்றார். காலஞ்சென்ற அப்பெரியார்கள் அனைவரும் வெவ்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்புச் செய்தவர்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தில் அரசியல், இலக்கியம், சமூகம், சமயம், தமிழியல், இதழியல் எனப் பல்துறைகளில் ஆற்றிவந்த தொண்டும், பங்களிப்பும் அப்போதைய தமிழ்ச்சமூகம் நன்கறியும். ஆயினும் அவை பற்றிப் புதிய தலைமுறையினர் அறிந்திட வேண்டிய அவசியம் ஒன்று உண்டு. அதனைக் கருத்திற்கொண்டே திரு. இளங்கோவன் இந்நூல் வெளியீட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்க ஒரு முயற்சியாகும்.

மறைந்த பெரியார்களை மட்டுமன்றி இளந்தலைமுறை யினரையும் கருத்திற் கொண்டு இந்நூலாசிரியர் செயற்பட்டு வருகின்றார். அதனை இந்நூல் மூலம் நன்குணர முடிகிறது. தாம் நன்கு பழகியவர்களதும் அறிஞர்களதும் எழுத்தாளர்களதும் சீரிய பண்புகளை, ஆளுமைகளை, ஆற்றல்களை, தொண்டுகளை இதன் மூலம் நினைவு கூருகின்றார்.

இந்நூலாசிரியர் இளங்கோவன் இலக்கியத்தில் களம் பல கண்டவர். சிறந்த சிறுகதை ஆசிரியர். இளமைக்காலம் முதல் மார்க்சிய சிந்தனையை வரித்துக் கொண்டு, முற்போக்கு இலக்கிய உலகில் பிரகாசித்தவர். பிரான்சில் வாழ்ந்தாலும் தமிழ் வளர்ச்சியிலும் படைப்பிலக்கியப் பணிகளிலும் அக்கறையுடன் செயற்பட்டு வருபவர். இலங்கையின் இலக்கியப் பணிகளைக் கூர்ந்து நோக்கி, இலக்கியச் செல்நெறிகள் பற்றிய விபரமான கிரகிப்புகளைக் கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார்வம் காரணமாகவே இலங்கைக்கு விஜயங்களை மேற்கொள் பவர். அவரது நூல்கள் தொடர்ந்து வெளியிடப்படுவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இந்நூலில் பல பெரியார்களைப் பற்றிய தமது மனப்பதிவுகளை நூலாசிரியர் நன்கு புலப்படுத்தியுள்ளார். இவர்களிற் பலர் எனக்கும் தெரிந்தவர்கள்; தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறிந்தவர்கள். சீனச் சார்பு பொதுவுடைமைக் கட்சியின் ஆசான் என். சண்முகதாசன், பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராசன், நாவலாசிரியர் டானியல் என்றல்லாது மற்றவர்களும் தமது வாழ்நாளில் தத்தமது துறைகளில் தடம் பதித்தவர்கள்.

இவர்களுடைய வாழ்க்கைப் பணிகளையும் ஏராளமான தகவல்களையும் நூலாசிரியர் இந்நூலில் விபரமாக எழுதியுள்ளார். இவர்கள் அனைவரதும் பணிகளைத் தமிழ் மக்கள் நிச்சயமாக நினைவு கூரும் வகையில் நூலாசிரியர் எளிமையான மொழிநடையில் சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார்.

உண்மையில் மேற்சொன்ன பெரியார்களின் சிந்தனைகள், பணிகள், பங்களிப்புப் பற்றி மேலும் விளக்கமான, விபரமான, விரிவான நூல்களின் தேவையை நூலாசிரியர் உணர்த்தியுள்ளார். இளங்கோவின் இவ்வெழுத்து முயற்சிக்குத் தமிழ் கூறும் நல்லுலகு தனது மகத்தான வரவேற்பை வழங்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

பேராசிரியர். சோ. சந்திரசேகரன்

88/3, 37 - வது ஒழுங்கை,
கொழும்பு - 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் அவ்வப்போது என் உணர்வுகளின் வெளிப்பாடாக எழுத்துருப் பெற்றவையாகும்.

சமூகத்தில் பல தளங்களில் பணியாற்றிய என் மனதில் இடம்பிடித்த, நான் நன்கறிந்த, பழகிய மனிதர்கள், பெரியவர்கள், தோழர்கள், நண்பர்கள் குறித்து எனக்குத் தெரிந்தவற்றை, என் அனுபவத்தை, உணர்வைப் பதிவு செய்திட வேண்டுமென்ற வேணவாவில்தான் இவற்றை எழுதினேன்.

இவை பத்திரிகைகளிலும் பல்வேறு இணையத்தளங்களிலும் பிரசுரமாகின.

ஒரு சிலரைப் பார்த்தவுடன் பிடிக்கும். அவர்களுடன் பேச வேண்டும் போலிருக்கும். ஒரு சிலர் பேசினால் பிடிக்கும். எவ்வளவு நேரமானாலும் அவர்களுடன் பேசிக்கொண்டோஅல்லது அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டோ இருக்க வேண்டும் போல் தோன்றும். ஒரு சிலரைப் பார்த்தாலே பிடிக்காது. ஒரு சிலர் வாயைத் திறந்தாலே தூரப் போய்விடுதல் நல்லதுபோல் தோன்றும். இவையெல்லாம் அவரவர் ஆளுமை - தோற்றம் - கவர்ச்சியைப் பொறுத்தது என்பார்கள். விஞ்ஞான ரீதியான அணுகுமுறையின்படி பார்த்தால், மக்களோடு ஒருவரின் சொல் - செயற்பாடு- நடைமுறை வாழ்க்கை எப்படியிருக்கிறதோ அதற்கமைய அவர் மக்கள் மனங்களில் இடம்பிடிப்பார். என் வாழ்க்கை ஓட்டத்தில், மனதில் இடம்பிடித்த மனிதர்கள் - பெரியவர்கள் - தோழர்கள் - நண்பர்கள் பலருண்டு. அவர்களில் பலரை யான் இழந்துவிட்டேன்.

சமூகத்தில் பல தளங்களில் நின்று பணியாற்றிய மனிதர்கள் சிலரைப் பற்றி, புலம் பெயர்ந்து வாழும் இளம் சந்ததியினரும் அறிந்துகொள்ள இந்நூல் ஓரளவு உதவுமென நம்புகிறேன். இந்நூலை வெளியிடும் மதுரை தழல் பதிப்பகத்தாருக்கும் அணிந்துரை நல்கிய பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களுக்கும் என் நன்றி. எனது நூல்களுக்கு என்றும் ஆதரவு தரும் இலக்கிய இரசிகர்கள், தோழர்கள், நண்பர்களது ஆதரவு இந்நூலுக்கும் கிடைக்குமென எதிர்பார்க்கிறேன்.

பிரான்ஸ். - வி. ரி. இளங்கோவன்.

vtelangovan@yahoo.fr

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

1. சர்வதேச புகழ்பெற்ற பொதுவுடமைத் தத்துவ ஆசான் தோழர் சண்முகதாசன் .......... 09

2. 'கம்யூனிஸ்ட்' கார்த்திகேசன் .......... 16

3. அற்புதமான மனிதன் டானியல் .......... 19

4. புதுநெறி காட்டிய பேராசான் கைலாசபதி .......... 32

5. தான் தோன்றிக் கவிராயர், பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன் .......... 36

6. 'சீனத்து'ச் சின்னத்தம்பி .......... 42

7. உலகம் போற்றும் தமிழறிஞர் பேராசிரியர் கா. சிவத்தம்பி .......... 48

8. அறிவுப் பசிக்கு உதவிய ஆர். ஆர். பூபாலசிங்கம் .......... 53

9. மூத்த எழுத்தாளர் காவலூர் இராஜதுரை .......... 59

10. ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ்பெற்ற இலங்கையர் அழகுசுப்பிரமணியம் .......... 63

11. புகழ்பூத்த பேராசிரியர் சிவசாமி .......... 66

12. சாதாரண மக்களின் விடிவுக்காகப் பேனா பிடித்த படைப்பாளி நாவேந்தன் .......... 69

13. ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை .......... 74

14. எல்லோருக்கும் இனிய மனிதன் ஆர். சிவகுருநாதன் .......... 79

15. புத்தக வர்த்தகர், அச்சகவித்தகர், செம்மல் ஆ. சுப்பிரமணியம் .......... 84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மருத்துவக் கலையில் இலக்கியத் தமிழ் கண்ட
வித்தகன் விஸ்வபாரதி ........ 89

17. தொண்டுக்கு ஒரு 'திரு' ........ 94

18. 'முகத்தார்' யேசுரட்ணத்தின் கலைப் பயணம் ........ 100

19. ஈழத்திற்குப் பெருமை சேர்த்த இசையரசன் குலசீலநாதன் ........ 104

20. மக்கள் மனம் நிறைந்த தலைசிறந்த
நிர்வாகி சடாட்சர சண்முகதாஸ் ........ 109

21. கவிஞர் சு. வில்வரத்தினம் – சில நினைவுக்குறிப்புகள் ........ 112

22. பெண்கள் உரிமைகளுக்காகப் பெரிதும்
பாடுபட்ட வேதவல்லி கந்தையா ........ 115

23. நாடு போற்றும் எங்களூர்த் தமிழறிர்கள் ........ 118

I. வித்துவான் சி. ஆறுமுகம் ........ 119

II. வித்துவன் பொன். அ. கனகசபை ........ 121

III. பண்டிதர் வீ. வி. நல்லதம்பி ........ 124

IV. கலாநிதி க. சிவராமலிங்கம் ........ 126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இலங்கையின் யாழ் மண்ணில் - புங்குடுதீவில் பிறந்து, புலம் பெயர்ந்து, பிரான்சு நாட்டில் வசித்துவரும் பல்துறை வித்தகர் தோழர் வி. ரி. இளங்கோவன், இடதுசாரி அரசியலை வட இலங்கையின் மக்களிடையே எடுத்துச் சென்ற இயக்கத்துடன் தன்னை முழுமனதுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டு, வடபுலத்து மக்களிடையே தீண்டாமை ஒழிப்பு உள்ளிட்ட சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில் முனைப்புடன் செயல்பட்டவர்.

அரசியல் - இலக்கியம் - கலை என்று துறைகள் பலவற்றிலும் முழு ஈடுபாடு கொண்ட இளங்கோவன் எழுத்துலகிலும் வகைமைகள் பலவற்றையும் பதிவு செய்த சாதனையாளர். சிறுகதை, கவிதை, கட்டுரை என்று வடிவம் எதுவும் கைவரப்பெற்ற தேர்ந்த எழுத்துக்கு சொந்தக்காரர். வி. ரி. இளங்கோவன் தம் வாழ்நாளில் சந்தித்த, உரையாடிய, உறவாடிய, அறிந்த பெருமக்கள் பலருடைய சிறப்பம்சங்களைத் தமிழ் வாசகப் பரப்புக்கு வழங்கும் உயர் நோக்குடன் இந்தத் தொகுப்பினைக் கொண்டு வருகிறார்கள்.

அவ்வக்காலங்களில் அவர் எழுதிய கட்டுரைகளின் ஒருமித்த தொகுப்பாக வெளிவரும் இந்நூல் முன்பே வெளியானதின் விரிவாக்கப்பட்ட இரண்டாம் பதிப்புமாகும்.

இலங்கை மண்ணில் ஈழப்பகுதியான வடக்கில் தடம்பதித்த மக்கள் நாயகர்களைப் பற்றிய இளங்கோவனின் இந்நூல் தமிழ் வாசகர்களுக்கு சுவையும், பயனும் தரத்தக்கது. இதன் பொருட்டு இதனை வெளியிடுவதில் எமது தழல் பதிக்கம் மிகப்பெருமை கொள்கிறது.

மதுரை
02 அக்டோபர் 2018

**- சோழ. நாகராஜன்**
தழல் பதிப்பகத்திற்காக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# சர்வதேசப் புகழ்பெற்ற பொதுவுடமைத் தத்துவ ஆசான் தோழர் சண்முகதாசன்



இலங்கையின் மூத்த கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரும், சர்வதேசரீதியாக மதிக்கப்படும் 'மாஓ பாதை' கம்யூனிஸ்ட் கட்சிகளின் சிரேஷ்ட ஆலோசகராக விளங்கியவருமான தோழர் என். சண்முகதாசன் காலமான (10. 02. 1993) செய்தி உலகெங்குமுள்ள கம்யூனிஸ்ட் புரட்சிகர சக்திகளுக்கு மிகுந்த வேதனையை அளிப்பதாகும்.

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகதாசன் வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர் சங்கத் தலைவராக விளங்கிய காலம் முதல் புரட்சிவாதியாகச் செயற்பட்டு வந்தவர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பம் முதல் முக்கிய செயல்வீரனாகப் பணிபுரிந்த சண், கட்சியின் தொழிற்சங்கப் பிரிவான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த சண் மாக்ஸிசத் தத்துவங்களை ஏனையோருக்குச் சிறப்பாக எடுத்து விளக்கும் ஆற்றலும், விவாதத்திறமையும் வாய்ந்தவராக மிளிர்ந்தார்.

சண்ணிடம் மாக்ஸிசம் கற்றுக் கொண்டேன் எனப் பெருமைப்பட்ட சில தமிழ், சிங்களப் பிரமுகர்கள் பின்னர் சந்தர்ப்பவாதிகளாக மாறிக் கட்சிக்குத் துரோகமிழைத்து அவதூறு பொழிந்ததும் உண்டு.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஸ்ராலின் - ரொட்ஸ்கி தத்துவார்த்தப் பிரச்சனையின் போதும், பின்னரும் பல்வேறு விவாதங்களை நடத்தி ஸ்ராலின் கொள்கைகளை வலியுறுத்தி முன்னெடுத்துப் புகழ்பெற்றவர் இவர்.

ஸ்ராலின் மறைவின் பின் சோவியத்தின் திரிபுவாதப் போக்கினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிராகரித்தார். ஸ்ராலின், மாஓ கொள்கைகளை முன்னெடுத்தவர்கள் இலங்கை (Ceylon) கம்யூனிஸ்ட் கட்சியினர் எனவும், சோவியத் ரஷ்யா சார்பினர் ஸ்ரீலங்கா (Sri Lanka) கம்யூனிஸ்ட் கட்சியினர் எனவும் அழைக்கப்பட்டனர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக என். சண்முகதாசன் தெரிவுசெய்யப்பட்டார். இக்கட்சியினர் பாராளுமன்றப் பாதையை நிராகரித்துப் புரட்சிகரப் பாதையை முன்னெடுத்தனர். சீனக் கலாசாரப் புரட்சியின் தாக்கம் உலகெங்கும் எதிரொலித்த காலமது. அப்போது சீனா சென்ற சண்முகதாசனுக்கு மிகுந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. தலைவர் மாஓவைச் சந்தித்து உரையாடினார். உலகக் கம்யூனிஸ்ட் தலைவர்களில் தலைவர் மாஓவைப் பலமுறை சந்தித்து உரையாடியதுடன் மாஓவின் பாராட்டுக்களையும் பெற்ற பெருமைக்குரியவர் சண்முகதாசன். இதனால் இவரது கருத்துகளுக்குச் சர்வதேசப் புரட்சிகர சக்திகள் மிகுந்த மதிப்பளித்தனர்.

வடபகுதியில் தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெருமை சேர்த்தது எனலாம். அன்றைய பாராளுமன்றப் பிரதிநிதிகள் தமது பதவிகளையும் தமது வர்க்க நிலைப்பாட்டையும் காப்பாற்றிக்கொள்ள துரோகமிழைத்தவேளை, 1966


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல் யாழ். முற்றவெளிப் பொதுக்கூட்டத்தில் சண் விடுத்த அறைகூவல் வடபகுதியில் ஆலயப் பிரவேசப் போராட்டங்களுக்கும், தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்களுக்கும் உந்துசக்தியாகியது.

சங்கானை - நிற்சாமம், கரவெட்டி, கன்பொல்லை, நெல்லியடி, சுன்னாகம், காங்கேசன்துறை, மட்டுவில், கொடிகாமம் உட்படப் பல இடங்களில் போராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்கள் குறித்து இலங்கை வானொலி மௌனம் சாதித்த வேளைகளில் பீக்கிங் வானொலி உண்மை நிலை குறித்து தொடர்ந்து செய்திகளை ஒலிபரப்பியது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மகத்தான வெற்றிகளைக் கண்டது. சண் தலைமையில் கட்சி இதற்கு உறுதுணையாகவிருந்து பூரண ஆதரவு வழங்கியது.



1969 இல் மே தினம் கொண்டாடத் தடை விதிக்கப்பட்ட போது அத்தனை அரசியல் கட்சிகளும் பின்வாங்கிய நிலையில் தடையை மீறி, பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளாகியும் பின்வாங்காது யாழ்ப்பாணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்பேனியா நாட்டு அதிபர் அன்வர் ஹோசாவுடன் தோழர் சண்.

ஊர்வலமும் கூட்டமும் நடாத்தி வெற்றி கண்டது சண் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியாகும்.

1971 ஏப்ரலில் இடம்பெற்ற 'ஜே. வி. பி.' கிளர்ச்சியின்போது சண்முகதாசன், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், அனுதாபிகள் பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். தென்னிலங்கையில் ஆயிரக்கணக்கான 'ஜே. வி. பி.' இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அரசினால் கம்யூனிஸ்ட் கட்சி சிதறடிக்கப்பட்டது. கட்சிச் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. காட்டிக் கொடுப்பாளர்களை அரசு பயன்படுத்தியது. சுமார் ஒரு வருடத்தின் பின் சண்ணும் மற்றும் சில தோழர்களும் விடுதலையாகினர்.

தலைவர் மாஓசேதுங் மறைவின் பின் சீன ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் சீரழிவுப் பாதையில் செல்கிறார்களென சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பீடத்தையும் அங்கு முன் வைக்கப்பட்ட மூன்று உலகக் கோட்பாட்டையும் சண் கடுமையாக விமர்சித்தார்; நிராகரித்தார். மாஓவின் கொள்கைகளையும் புரட்சிப் பாதையையும் முன்னெடுக்க உலகெங்குமுள்ள மாஓ பாதைக் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். பல்வேறு நாடுகளில் மாநாடுகளை நடாத்தி கொள்கைகளை முன்னெடுக்க ஒத்துழைப்பும் ஆலோசனையும் வழங்கி வந்தார்.

இலங்கையின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரெனவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்மைமிக்கவர் எனவும் மதிக்கப்பட்ட இவர் தொழில் சம்பந்தமான வழக்குகளில் தொழிலாளர் சார்பில் ஆஜராகி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு உதவியுள்ளார். தொழிற்சங்க விடயங்களில் நிபுணராகவும் மாசற்றவராகவும் விளங்கினார் என்பதை எதிரிகளும் ஒப்புக்கொள்வர்.

தமிழ்த் தேசிய இனம் சொந்தக் காலில் நின்று சுயநிர்ணய உரிமைக்காக போராடுதல் தவிர்க்க முடியாதது எனக்குரல் கொடுத்தார். சிங்களப் புரட்சிகர சக்திகளுக்கு இதற்கான விளக்கங்களை அளித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் சங்க சம்மேளனத்தில் பணியாற்றிய விஜயவீரா போன்றோர் இனவாதம் பேசி இரகசிய நடவடிக்கை - கிளர்ச்சியில் ஈடுபட்டமையினால் கம்யூனிஸ்ட் கட்சி, அரசினாலும் சந்தர்ப்பவாதிகளாலும் சிதறடிக்கப்பட காரணமாயிற்று என சண் குறிப்பிட்டுள்ளார். பின்னரும் பல்வேறு சந்தர்ப்பவாதிகள், காட்டிக்கொடுப்பாளர்களினாலும் கட்சியின் வளர்ச்சி தடைப்பட்டது. மதிப்புக்குரிய தோழர் சண் என்று அழைத்த சிங்களப் பிரமுகர்கள் சிலர் பின்னர் இனவாதத் தொனியோடு நாகலிங்கம் சண்முகதாசன் என்று தம்மை விளித்ததாக சண் வருத்தத்தோடு கூறியுள்ளார்.

இலங்கையின் தலைசிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பலரும் அன்று சண்முகதாசன் தலைமையிலான கட்சியின் உறுப்பினர்களாக, அனுதாபிகளாக, ஆதரவாளர்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கைலாசபதி, கே. டானியல், இளங்கீரன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எச். எம். பி. மொகைதீன், சில்லையூர் செல்வராசன், செ. கணேசலிங்கன், என். கே. ரகுநாதன், நீர்வைப் பொன்னையன், எம். கே. அந்தனிசில், செ. யோகநாதன், யோ.பெனடிக்றபாலன், சுபத்திரன், புதுவை இரத்தினதுரை உட்படப் பலர் அன்று இந்தப் பாதையில் நடை போட்டவர்கள் எனக் குறிப்பிடலாம்.

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட சண் இறுதிக்காலத்தில் இங்கிலாந்திலுள்ள மகளுடன் தங்கியிருந்தபோது 74வது வயதில் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்.

சர்வதேச தொழிற்சங்க அலுவலகங்களில் ஆயிரக்கணக்கான டொலர் சம்பளத்தில் பணிபுரிய அழைப்புகள் கிடைத்தும், கொள்கையிலிருந்து கொஞ்சம் வழுவிக் கோடீஸ்வரனாக வாழ வழியிருந்தும் கொண்ட கொள்கைக்காக இறுதிவரை சாதாரண மனிதனாகவே வாழ்ந்தவர். இவரது மனைவியும் இறுதிவரை இவருக்கு உறுதுணையாகவிருந்து கட்சிப் பணியாற்றியவர்.

இவரது தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளிலான மாக்ஸிச விளக்க நூல்கள் கட்டுரைகள், வாழ்க்கை வரலாறு நூல் என்பன புகழ்பெற்றவை. அரசியல் ஆர்வலர்களால் அவசியம் படிக்கப்பட வேண்டியவை. சர்வதேசப் புகழ்பெற்ற ஒரு நேர்மையான அரசியல் ஆசானும் தொழிற்சங்கவாதியுமான சண்முகதாசன் மறக்கப்பட முடியாத மனிதனாவார்.

– 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# 'கம்யூனிஸ்ட்' கார்த்திகேசன்



இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவர்.

பல்கலைக்கழகப் படிப்பு முடித்து ஆங்கிலச் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றவர். அக்காலம் முதல் கட்சிப் பணியாற்றியவர்.

கட்சியின் உத்தியோகப்பூர்வ வாரப்பத்திரிகையான 'போர்வார்ட்'டின் (Forward) ஸ்தாபக ஆசிரியர்.

பல நூறு மாணவர்களை அறிவுலகிற்கு இட்டுச் சென்ற நல்லாசிரியர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சாளர் - எழுத்தாளர், கல்லூரி அதிபராகவும் கடமையாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கட்சியால் பணிக்கப்பட்டு 1946இல் யாழ்ப்பாணம் வந்து கட்சியை அறிமுகப்படுத்தியவர். அன்று யாழ் விக்ரோறியா வீதியில் அமைந்த தனது வாடகை வீட்டையே கட்சி அலுவலகமாகப் பாவித்தவர்.

தோழர்கள் சு. வே. சீனிவாசகம், வீ. ஏ. கந்தசாமி, ஆர். பூபால சிங்கம், எம். சி. சுப்பிரமணியம், இராமசாமி ஐயர் ஆகியோர் இவருடன் இணைந்து கட்சியை வடபகுதியில் ஸ்தாபித்துப் பணியாற்றினர்.

பிற்காலத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களான கே. டானியல், டொமினிக் ஜீவா, எஸ். பொன்னுத்துரை, நீர்வைப் பொன்னையன் ஆகியோர் இவரது ஆளுமைக்குட்பட்டார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் இலக்கியவாதியுமான ப. ஜீவானந்தம் 1947ம் ஆண்டில் இந்தியாவில் தலைமறைவாகி இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் இவரது இல்லத்திலேயே சில காலம் வாழ்ந்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

அன்று ஏழை மக்கள், மாணவர்கள், இளைஞர்களின் ஆதர்ச மனிதனாக விளங்கியவர்.

1964-ம் ஆண்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பிளவடைந்தபோது இவர் சீனச்சார்பு நிலையெடுத்த கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டார்.

1966-ம் ஆண்டளவில் கட்சியின் ஆதரவுடன் ஆரம்பமாகிய தீண்டாமை ஒழிப்புப் போராட்ட நடவடிக்கைகளுக்குத் தலைமை கொடுத்தவர்களில் ஒருவர். இவருடன் வீ. ஏ. கந்தசாமி, கே. டானியல், எம். ஏ. சி. இக்பால், சூ. மார்க், கே. ஏ. சுப்பிரமணியம், எஸ். ரி. என். நாகரத்தினம், முத்தையா, சலீம் ஆகியோர் போராட்டத்திற்குத் தலைமை வகித்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

சுரண்டல் அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து முழு மனித குலமும் விடுதலை பெற வேண்டும் என்ற உன்னதநோக்குடன் பொதுவுடமை இலட்சியத்தைக் கடைப்பிடித்த மு. கார்த்திகேசன் இலங்கையில் சிறுபான்மை இனமான தமிழர்கள் தமது நியாயமான உரிமைகளை இழந்திருப்பது குறித்தும் பெரிதும் கவனம் செலுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன ஒடுக்குமுறையும் ஒருவகை வர்க்கச் சுரண்டலே என்று நம்பிய அவர் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தினார்.

1919-ம் ஆண்டு யூன் மாதம் 25-ம் திகதி மலாயாவின் 'தைப்பிங்'கில் பிறந்த இவர் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் திகதி யாழ்ப்பாணத்தில் மாரடைப்பால் மரணமானார்.

இவரது மகள் ராணி சின்னத்தம்பி - கணவர் வீ . சின்னதம்பி (பாரதிநேசன்) ஆகியோர் சீனாவில் 16 ஆண்டுகளுக்கு மேலாக பீக்கிங் வானொலி - அயல்மொழிப் பதிப்பகம் ஆகியவற்றில் பணியாற்றியுள்ளனர்.

மக்கள் பணியாற்றிய கார்த்திகேசன் எம் மக்களால் மறக்கப்பட முடியாத மாமனிதர் ஆவார்..!

– 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# அற்புதமான மனிதன் டானியல்



டானியல் ஓர் அற்புதமான மனிதன்.

பாட்டாளி வர்க்க இலட்சியத்தின் வெற்றிக்காகத் தன்னை அர்ப்பணித்து இறுதிமூச்சுவரை வாழ்ந்த சீரோன்.

என் கல்லூரி நாட்களிலேயே டானியல் சிறுகதைகளை வாசித்திருந்தேன். அந்தக் காலத்தில் நடந்த பல போராட்டங்களின் போதெல்லாம் டானியல் நாமம் பேசப்பட்டதை நான் அறிவேன். 1969-70 காலத்தில் 'தமிழன்' வார ஏட்டின் ஆசிரியராக, எனது மூத்த சகோதரர் நாவேந்தனின் வேண்டுகோளுக்கிணங்க யான் கடமையாற்றிய நேரத்திலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சண்) வடபிரதேசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


டானியலுடன் வி. ரி. இளங்கோவன்...

பிரமுகர்கள், எழுத்தாளர்களுடன் எனக்கு ஓரளவு தொடர்பு இருந்தது. அபிமானமும் இருந்தது.

திறமைமிக்க எழுத்தாளர்கள் பலர் அந்த அணியில் இருந்ததாலும், மக்கள் பிரச்சனைகள் சம்பந்தமான அவர்களது போராட்ட நடவடிக்கைகளும் என்னை அவர்கள்பால் ஈர்த்திருந்தது. அத்துடன் மார்க்ஸிச நூல்கள் வாசிப்பும், 'தொழிலாளி' பத்திரிகை தந்த போதமும் என்னை அந்தப் பாதைக்கு ஈர்த்தன. ஆனாலும் 1972ஆம் ஆண்டளவில் தான் எனது மூத்த சகோதரர் நாவேந்தன் மூலம் டானியலுடன் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் கிடைத்தது.

நாவேந்தனின் இலக்கியப் பணி வெள்ளிவிழாவில் கலந்து கொள்ள ஏழாலைக்கு வந்திருந்த டானியலுடனும், கவிஞர் புதுவை இரத்தினதுரையுடனும் நிறையவே பேசினேன். பின்னர் புதுவை இரத்தினதுரை தொழில் நிமித்தம் எனது ஊரான புங்குடுதீவில் தங்கியிருந்தபோது தினசரி மாலைப் பொழுதுகள் இலக்கியப் பொழுதுகளாக அமைந்தன. அக்காலத்தில் தீவுப்பகுதியில் பல இலக்கியக் கூட்டங்களை ஒழுங்கு செய்து நடத்தியது ஞாபகம். பல்வேறு சவால்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் பல்வேறு இடங்களிலும் கருத்தரங்குகள் நடத்தினோம்.

இக்கூட்டங்களில் பிரதம பேச்சாளராக டானியல் கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் கவிஞர் புதுவை இரத்தினதுரை, கவிஞர் வ. ஐ. ச. ஜெயபாலன், புலவர் ஈழத்துச் சிவானந்தன், நாவேந்தன், சு. வில்வரத்தினம் உட்படப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பல இளந்தலைமுறை எழுத்தாளர், இலக்கிய இரசிகர்கள் உருவாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேடையில் கே. டானியல், கிருஷ்ணபிள்ளை, எஸ். ரி. என். நாகரட்னம்

இக்கருத்தரங்குகள் உந்துசக்தியாக அமைந்தன.

1974ல் திருமலையில் நடைபெற்ற புரட்சிகர கலை இலக்கிய எழுத்தாளர் மாநாட்டில் டானியல், சில்லையூர் செல்வராசன், செ. கணேசலிங்கன், என். கே. ரகுநாதன், புதுவை இரத்தினதுரை, நல்லை அமிழ்தன், திருமலை நவம் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட இளந்தலைமுறை இலக்கிய அணியுடன் நிறையவே பேசியது ஞாபகம். இவ்வாறு டானியலுடனான தோழமை வளர்ந்தது. கலை இலக்கிய - அரசியல் போராட்டமென எந்த நடவடிக்கையில் டானியல் இறங்கினாலும், அதில் முன்னணியில் நிற்கும் ஒருவனாக என்னை அவர் நெறிப்படுத்திச் சென்றார். இதன் தாக்கம் கலை இலக்கிய அரசியல் பிரமுகர்களிடையேயும் எதிரொலித்தது.

திறமையறிந்து தட்டிக் கொடுத்து, அரவணைத்துச் செல்லும் தோழமை, நட்புணர்வு, மனிதாபிமானம் அவருடன் பழகிய யாராலும் மறந்துவிட முடியாதது. ஒரு இராஜதந்திரிக்குரிய திறமையோடும், தலைமைத்துவத் தன்மையோடும் பல்வேறு சந்தர்ப்பங்களில், இலக்கிய, அரசியல், சமூக விடுதலைப் போராட்டச் சந்தர்ப்பவாதப் போக்குகளை அவர் முறியடித்திருக்கிறார்.

சிறுவயது முதல் அரசியல் தொடர்புள்ளவனாக ஈழத்தின் பல பகுதிகளுக்கு நான் சென்றுவந்திருந்த போதிலும், டானியலுடன் சேர்ந்து நான் வடபகுதியின் குச்சுக் குடிசைகள் நிறைந்த கிராமங்கள் உட்படப் போகாத கிராமங்களே இல்லை எனலாம். கலை இலக்கிய, அரசியல் நடவடிக்கையென எதற்கு புறப்பட்டாலும் உடன் என்னை அழைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் கலை இலக்கியப் பெருமன்ற நிர்வாகிகள் கூட்டத்தில் கே. டானியல், வி. ரி. இளங்கோவன்

அவர் வழக்கம். அவர் கலந்து கொண்டு பேசும் அதிகமான கூட்டங்களில் எனக்கும் பேசவோ அல்லது கவியரங்கில் கலந்து கொள்ளவோ இடம் கிடைக்கும். நான் கிராமங்களை அவருடன் சேர்ந்து படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

1981 தை 17, 18 ஆம் திகதிகளில் சென்னை 'சி. எல். எஸ்' (C.L.S.) நடத்தும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு டானியலுக்கு அழைப்பு வந்தது. ஏற்கெனவே இந்தியா, சீனா செல்ல சந்தர்ப்பங்கள் வாய்த்தபோதும் அவற்றைப் புறக்கணித்துவிட்டவர் என அறிந்திருந்தேன்.

பூபாலசிங்கம் புத்தகசாலையில் என்னைக் கண்ட 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா 'டானியலின் 'பஞ்சமர்' இம்முறை சி. எல். எஸ். கருத்தரங்கில் இடம்பெறவுள்ளதாக அறிகிறேன். எனக்கும் அழைப்பு வந்துள்ளது. டானியலைக் கட்டாயம் வரச் சொல்லுங்கள். சிவத்தம்பியும் வருவார் என நினைக்கிறேன்' என்றார். இதனை டானியலுக்குச் சொல்லி, சென்னை செல்லுங்கள் என வலியுறுத்தினேன்.

தனிப்பட்ட ரீதியாக தனக்கு மாத்திரமன்றி, எமது இலக்கிய அமைப்பான 'மக்கள் கலை இலக்கியப் பெருமன்ற'த்திற்கு அழைப்பு அனுப்புமாறு சென்னைக்கு கடிதம் எழுதினார். அதன்படி அமைப்பின் தலைவரான டானியலுக்கும் பொதுச் செயலாளரான எனக்கும் அழைப்பு வந்தது. பல சிரமங்களின் மத்தியில் பாஸ்போர்ட் - விசா பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை 'சி. எல். எஸ். கருத்தரங்கல் (1981) கே. டானியல், கலாநிதி சிவத்தம்பி, வி. ரி. இளங்கோவன்

சென்னை பயணமானோம்.

பேராசிரியர் சிவத்தம்பி சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். டொமினிக் ஜீவாவும் வந்திருந்தார். சி. எல். எஸ். - இயக்குனர் பாக்கியமுத்து வரவேற்று ஆவன செய்து உதவினார். பேராசிரியர் சிவத்தம்பி தலைமையில் 'பஞ்சமர்' நாவல் (முதலாம் பாகம்) தனி அமர்வில் விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த அமர்வில் பஞ்சமர் நாவல் குறித்து கட்டுரை சமர்ப்பித்துப் பேசினேன். டானியல் தனது இலக்கிய அனுபவம் குறித்து பேசினார். விளக்கமளித்தார். கட்டுரையும் சமர்ப்பித்தார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட எழுத்தாளர் பலரும் டானியலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவருடன் கலந்துரையாடினர். கேரளாவிலிருந்து வந்திருந்த சிறந்த எழுத்தாளர் நீல. பத்மநாபன், 'சிகரம்' செந்தில்நாதன், அக்னிபுத்திரன் உட்படப் பலர் மிக பாசத்தோடு டானியலோடு உரையாடினர். ராஜம் கிருஷ்ணன், தி. க. சி. கவிஞர் கிருஷ்ணமூர்த்தி, வல்லிக்கண்ணன், சி. சு. செல்லப்பா, பேராசிரியர் சஞ்சீவி, அசோகமித்ரன் ஆகியோருட்பட பலர் கலந்துரையாடினர்.

தபால் மூலமாக நீண்ட காலம் டானியலோடு தொடர்பு கொண்டிருந்த தஞ்சை பிரகாஷ் தஞ்சாவூருக்கு அழைத்திருந்தார். அக்னிபுத்திரன் வீட்டிற்கு அழைத்து உபசரித்தார். கவிஞர் இன்குலாப் அக்னிபுத்திரன் வீட்டிற்கே வந்து டானியலோடும் என்னோடும் நீண்டநேரம் உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை 'சி. எல். எஸ்.' கருத்தரங்கில் சி. சு. செல்லப்பா, கலாநிதி சிவத்தம்பி, வல்லிக்கண்ணன், பசு கவுதமன், கே. டானியல், வி. ரி. இளங்கோவன், டொமினிக் ஜீவா... ......

யாடினார். பேராசிரியர் நாகநாதன் வீட்டிற்கு அழைத்து உரையாடினார். அசோகமித்திரனும் வீட்டிற்கு அழைத்து உபசரித்தார். பா. செயப்பிரகாசம் உட்பட மற்றும் பல தோழர்கள் அழைத்துச் சென்று கலந்துரையாடினர். 'தாமரை' சஞ்சிகையில் பணியாற்றும் ரவீந்திரதாஸின் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்ற அழைத்தனர். இக்கூட்டத்தில் கல்யாணசுந்தரம், தா. பாண்டியன், இயக்குனர் பாலச்சந்தர், நடிகர் ராஜேஷ் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். 'தாமரை' சோமுவின் நிலையறிந்து சிறு உதவியளித்து ஆறுதல் கூறினார்.

தஞ்சை சென்ற எம்மை ப்ரகாஷ் வரவேற்று உபசரித்தார். யாழ்ப்பாணம் வந்திருந்த போது பழகிய பசு. கௌதமன் சென்னை கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாடியது மாத்திரமன்றி தஞ்சையில் தம் வீட்டிற்கு அழைத்து உரையாடினார்.

எழுத்தாளர் சி. எம். முத்து, கவிஞர் விச்வநாதன் உட்பட பலர் தினசரி சந்தித்துக் கலந்துரையாடினர். டானியலின் வேண்டுகோளுக்கிணங்க கீழவெண்மணிக்கு ப்ரகாஷ் எம்மை அழைத்துச் சென்றார். அங்கு உயிருடன் கொளுத்தப்பட்ட ஏழை மக்களின் நினைவுச் சமாதிக் கல்லைப் பார்த்துக் கவலையுற்றார் டானியல். பல மணி நேரம் அங்குள்ள ஒடுக்கப்பட்ட கிராமத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை சி. எல். எஸ். நடாத்திய கருத்தரங்கில் கலந்துகொண்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி, சி. எல். எஸ். நண்பர் வட்ட அமைப்பாளர் தி. பாக்கியமுத்து, பேராசிரியர் எஸ். சஞ்சீவி, சி. எல். எஸ். செயலாளர் டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ், டொமினிக் ஜீவா, திருமதி சிவத்தம்பி, ராஜம் கிருஷ்ணன், சரஸ்மதி ராம்நாத், தி. க. சிவசங்கரன், வி. ரி. இளங்கோவன், கே. டானியல், கோமல் சுவாமிநாதன், சி. சு. செல்லப்பா, சோ. சிவபாதசுந்தரம், நீல. பத்மநாபன், சிதம்பர ரகுநாதன், விஜயபாஸ்கரன், மலர்மன்னன், செந்தில்நாதன், அசோகமித்திரன், அக்கினிபுத்திரன் ஆகியோருடன் மற்றும் சில எழுத்தாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் அ. மார்க்ஸ் வீட்டில் அஞ்சலி

மக்ளைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார். தஞ்சையில் பல இலக்கிய நண்பர்கள் சந்தித்தனர்.

பின்னர் புதுக்கோட்டை பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி தம்பதிகளின் அழைப்பின்பேரில் அங்குசென்று கலந்துரையாடினார். அடுத்து இராமேஸ்வரம் தலைமன்னார் வழியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது இன்றும் ஞாபகமிருக்கிறது.

1986-ல் மருத்துவ சிகிச்சைக்காகவும், கலை இலக்கிய நண்பர்களைச் சந்திக்கவும் தமிழகம் செல்லும்போது என்னையும் வருமாறு வலியுறுத்தி அழைத்தார். அதன்படி அங்கு சென்று, சென்னை, மதுரை, தஞ்சை ஆதியாம் இடங்களில் மருத்துவ சிகிச்சை அவருக்கு அளிக்கப்பட உடன் நின்று கவனித்து வந்தேன். சென்னை, தஞ்சை, பாண்டிச்சேரி, கும்பகோணம் ஆதியாம் இடங்களில் இலக்கியக் கருத்தரங்குகளில் டானியல் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் மார்க்ஸ், பொதியவெற்பன், இரவிக்குமார் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளைச் செய்தனர். பல பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், முற்போக்காளர்கள் டானியலைத் தேடிவந்து உரையாடினர். மருத்துவமனைகளில் தங்கியிருந்தபோதும் நள்ளிரவு வரை இத்தகைய சந்திப்புகள் நீண்டன.

அவரது ‘கிட்னி’ முற்றாகச் செயலிழந்திருந்தது. இரத்த அழுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செ. கணேசலிங்கன் அஞ்சலி. அருகில் வி. ரி., சஞ்சயன்.

அதிகரித்திருந்தது. நீரிழிவு நோயின் பாதிப்புக்கள் யாவும் அதிகரித்திருந்தன. 'இத்தகைய நிலையிலிருப்போர் மயக்க நிலையில் இருப்பர், இவரால் எப்படி உலாவ முடிகிறது. உறுதியாகப் பேச முடிகிறது' என டாக்டர்களே டானியலின் உறுதியைப் பார்த்து வியந்தனர்.

இறுதியாக தஞ்சை தங்கசாரதா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வேளை 1986 பங்குனி 23 ஆம் திகதி காலை 8.40 மணியளவில் என் கையை இறுகப் பற்றியவாறு 'தம்பி... தம்பி...' என ஏதோ சொல்ல விழைந்து முடியாத நிலையில் அவர் உயிர் பிரிந்தது. ஒரு கணம் செய்வதறியாது திக்கித்து நின்றேன். விம்மி வெடித்து அழுதேன். டாக்டர்கள் தேற்றினர். தகவல் அனுப்புமாறு சொன்னார்கள். மறுகணம் பேராசிரியர் மார்க்ஸ் குடும்பம், வேல்சாமி ஆகியோருக்கு தகவல் அனுப்பினேன்.

டானியலின் உடலை மார்க்ஸ் வீட்டிற்குக் கொண்டு சென்றோம். உடன் கொழும்பில் சில்லையூர் செல்வராசன், தம்பி வி. ரி. தமிழ் மாறன், என். சண்முகதாசன் ஆகியோருக்கும், யாழ்ப்பாணத்தில் டானியல் குடும்பத்தாருக்கும், சென்னையில் செ. கணேசலிங்கன் உட்படப் பலருக்கும் தகவல் தெரிவித்தேன்.

கணேசலிங்கன் சென்னையிலிருந்து வந்து சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தஞ்சாவூரில் கே. டானியல் கல்லறை

கலங்கிப் போயிருந்த எனக்குத் தேறுதல் சொன்னார். பேராசிரியர் அ. மார்க்ஸ் வீட்டில் இறுதி அஞ்சலிக்காக டானியலின் உடல் வைக்கப்பட்டிருந்தது. முதுபெரும் எழுத்தாளர்கள் எம். வி. வெங்கட்ராம், கரிச்சான்குஞ்சு, கலாநிதி து. மூர்த்தி, பேராசிரியர் இராமசுந்தரம், வே.மு. பொதியவெற்பன், ஜமாலன், பொ.வேல்சாமி, நா. விச்வநாதன், தஞ்சை ப்ரகாஷ், தஞ்சை ராமமூர்த்தி, நெல்லியடி சிவம், சஞ்சயன் ஆகியோர் உட்படப் பலர் இறுதி அஞ்சலி செலுத்தினர். 24 ஆம் திகதி மாலை முந்நூறுக்கு மேற்பட்ட கலை இலக்கிய அரசியல் நண்பர்கள் பின் தொடரச் செங்கொடி போர்த்தப்பட்ட டானியல் உடல் தஞ்சை இராஜகோரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

அங்கு சிலிக்குயில் பதிப்பக அதிபர் வே. மு. பொதியவெற்பன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், அரசியல் தோழர்கள் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். ஈற்றில் சிந்தும் கண்ணீரோடு அனைவர்க்கும் நன்றி தெரிவித்துப் பேசினேன்.

ஒரு புரட்சியாளனுக்கான அனைத்து மரியாதைகளுடனும் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்படவுள்ளதெனவும், அவரது படைப்புகள் யாவும் தொடர்ந்து அங்கு வெளியிடப்படவுள்ளன என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கப்பட்டது.

1990 கார்த்திகை மாதம் தஞ்சை சென்ற யான் நேரே டானியல் சமாதிக்குச் சென்று பார்த்தேன். நினைவுச்சின்னம் அழகுற அமைக்கப்பட்டிருந்தது. தூறும் மழையில் நனைந்தவாறு நீண்டநேரம் அங்கிருந்துவிட்டு மார்க்ஸ் வீடு திரும்பினேன்.

தமிழகத்தில், கூட்டங்களில் எனது உரைகளைக் கேட்ட நண்பர்கள், அவற்றைப் பாராட்டி டானியலுக்குச் சொன்னபோது, அவர் சொன்ன வார்த்தைகள் என் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுவதாகவுள்ளது என ஒரு நண்பர் தெரிவித்தார்.

'இளங்கோவுடன் தான் 1981-ல் சென்னை வந்தேன். 'சி. எல். எஸ்.' கருத்தரங்கிலும் மற்றும் சில கூட்டங்களிலும் அவன் பேச்சின் பின்னர் பலர் பஞ்சமர் முதல் பாகத்தைப் படிக்க ஆவலுற்றனர். பஞ்சமர் இரண்டாம் பாகமும் சேர்த்து இங்கு வெளியிட அழைப்புகளும் வந்தன. அவனோடு வருவது நாலைந்து பேரோடு வருவதுபோல் எனக்குத் தெம்பு தரும். ஒரு நல்ல தோழனாய், பெற்ற மகன்போல என்னைக் கவனமாய்க் கவனித்துக் கொள்ளும் வைத்தியனாய், இலக்கிய -அரசியல் பேச்சாளனாய் எனக்குப் பெரிதும் உதவி. அவனோடு இங்கு வருவதில் மாத்திரமல்ல, அங்கு நாட்டில் கூட எங்கும் அவனோடு போவதில் எனக்குத் தெம்பு அதிகம்'- என்றவாறு அவர் நண்பர்களிடம் கூறியிருந்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்தில் கோட்பாட்டு ரீதியாகப் பிரிவுகள், பூசல்கள், பூகம்பங்கள் ஏற்பட்டபோதெல்லாம் சரியான கொள்கை வழியில் துணிச்சலோடு செயற்பட்டவர். போராட்டப் பாதையை முன்னெடுத்தவர்.

கம்யூனிஸ்ட் கட்சி (மாஓ) பொதுச்செயலாளர் என். சண்முகதாசன் டானியல் மறைவு குறித்து எழுதும்போது, 'இந்த நாட்டின் இலக்கிய இயக்கத்திற்குப் பேரிழப்பு. நான் நல்ல தோழனை, அன்புள்ள நண்பனை இழந்துள்ளேன். அவர் அஞ்சாத போராளி, உண்மையுள்ள தோழர்' என இறுதி மரியாதை செலுத்தினார்.

சகல ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்தவர். கடின உழைப்பால் உயர்ந்தவர். இறுதிவரை உழைத்துக் கொண்டிருந்தவர், எழுதிக் கொண்டிருந்தவர். இறுதி நேரத்தில் கூட அவர் எழுதி முடித்து மார்க்ஸ் வீட்டு மேசை மீது விட்டுச் சென்ற குறுநாவல் 'சாநிழல்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கே. டானியல் முதலாமாண்டு நினைவாஞ்சலிக் கூட்டத்தில்
வி. ரி. இளங்கோவன், எம். ஏ. சி. இக்பால், சு. மார்க் (1987)

'பஞ்சமர்' இரண்டாம் பாகம் நாவலைத் திருத்தி அச்சுக்கு ஏற்றவகையில் எழுத பல நாட்கள் விடிகாலைவரை அவருடன் இருந்து உதவியது ஞாபகம். முதலில் எழுதிய பிரதியை வைத்துக் கொண்டு அழகாகக் கதையை அவர் சொல்லிக்கொண்டுபோக யான் அழகான கையெழுத்தில் அதனைச் எழுதி முடித்தேன். பின்னர் அதனை 'சுருக்கெழுத்துத் தந்தை' இராமலிங்கத்திடம் கொண்டுபோய்க் கொடுத்து நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றிய கோபால் மூலம் தட்டச்சில் பதித்து எடுத்து வந்து கொடுத்தேன். அப்பிரதிகளே தஞ்சைக்கு அனுப்பப்பட்டு 'பஞ்சமர்' இரண்டு பாகங்களும் சேர்த்து ப்ரகாஷ் மூலம் முதலில் அச்சாகி வெளிவந்தது. அவ்வாறே 'கோவிந்தன்', 'அடிமைகள்' நாவல்களும் தட்டச்சில் பதித்து அச்சுப்பதிப்புக்கெனத் தமிழகம் அனுப்பப்பட்டன.

அடித்தளச் சமூகத்தில் பிறந்த, ஐந்தாம் வகுப்பு வரை படித்த, அறிவுஜீவிகள் என்று சொல்லப்பட்டவர்களின் மேதைத்தனமான போலித்தனங்களை வன்மையாகச் சாடிய டானியலின் படைப்புகளை 'உன்னத இலக்கியம்' எனப் போற்றுகிறார்கள். பல்கலைக்கழகங்களில் ஆய்வு செய்கிறார்கள். ஜப்பானில் கூட பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. 'சொல் அகராதி'க்கு டானியல் படைப்புகளிலிருந்து சொல் சேகரிக்கிறார்கள். 'எங்கள் போராளி', 'எங்கள் மகன்', என ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளங்களில் சுமக்கிறார்கள்.

மனிதாபிமானம்மிக்க அற்புதமான மனிதனை, நண்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்துவிட்டோம் என அவரைத் தெரிந்தவர்கள் இன்றுவரை கவலைப்டுகிறார்கள். புலம்பெயர்ந்த இளந்தலைமுறை படைப்பாளிகள், வாசகர்கள் வடபகுதியில் முன்னர் எங்கள் இனத்தின் வாழ்க்கை மறுபக்கத்தை, மறைக்கப்பட்ட வரலாறு,- உண்மை எப்படி இருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள டானியலின் படைப்புகளை அவசியம் படித்துப் பார்க்க வேண்டும்.

'வரலாற்றைப் படைத்த நீ வரலாறாகிவிட்டாய்' எனப் பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிட்டது போல டானியல் நாமம் வரலாற்றுப் புகழோடு நீடு வாழும்.

– பங்குனி, 1994





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# புதுநெறி காட்டிய பேராசான் கைலாசபதி



திறனாய்வுத்துறையில் ஒளிவிளக்காகத் திகழ்ந்த பேராசிரியர் கைலாசபதியின் எழுத்துக்களை இன்றைய இளம் படைப்பாளிகள் அவசியம் படித்திட வேண்டும்.

இலக்கியவாதியாக, பத்திரிகை ஆசிரியனாக, பல்கலைக்கழக ஆசானாக, நிர்வாகியாக அத்தனை துறைகளிலும் தமது ஆளுமையை, இளம்வயதிலேயே, நிரூபித்து, அழியாத், தடம்பதித்துச் சென்றவர் கைலாசபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கியத் திறனாய்விலே சமூகவியல் நோக்கினை வலியுறுத்தியவர்.

இலக்கியம் படித்து இரசிப்பதற்கு மட்டுமே உரியதென்ற 'கலை கலைக்காக' கோட்பாட்டை வன்மையாகக் கண்டித்தார்.

உருவத்தைவிட உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் வேண்டுமெனவும் இலக்கியத்திற்குச் சமூகப்பணி இருக்கிறதெனவும் வலியுறுத்தினார்.

இக்கருத்துக்களால் வந்த எதிர்வாதங்களை துணிவுடன் எதிர்கொண்டு தகர்த்தெறிந்தார்.

இக்காலத்தில் அவ்வப்போது பத்திரிகை - சஞ்சிகை - வானொலி - மேடைகள் பலவற்றிலும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றை அறிய முயல்வோர்க்குப் பாடங்களாக உதவிடும் எனலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராக பணிபுரிந்தவர்.

1950-ம் ஆண்டுகளில் எழுதத் தொடங்கியவர், 1960-ம் ஆண்டுகளில் தமிழ்த் திறனாய்வுத்துறையில் ஒரு புது நெறி காட்டிய சக்தி வாய்ந்த மனிதனாக முத்திரை பதித்தார்.

1982 டிசம்பர் 6 -ம் திகதி சிந்திப்பதை நிறுத்தும் வரை முற்போக்கு இலக்கியம் குறித்தும் அதன் வளர்ச்சிக்கான பணிகள் குறித்தும் ஓயாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்துச் செயற்பட்டு வந்தார்.

அன்று எழுத்தாளர்கள் பலரும் தமது படைப்புகள் குறித்து கைலாசபதி என்ன கருதுகிறார் என அறிவதில் ஆர்வங் கொண்டிருந்தனர். கைலாசபதியிடம் தமது நூல்களுக்கு அணிந்துரை பெற்றுக் கொள்வதை பெருமைக்குரியதாகப் பல படைப்பாளிகள் கருதினர்.

தமிழ் எழுத்தாளர்தம் படைப்புகளின் வழியை - திசையை நிர்ணயிக்கும் பணியை கைலாசபதி தன் ஆளுமைக்குட்படுத்தியிருந்தார் என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழகத்துப் பத்திரிகைகள் - சஞ்சிகைகள் அவரது எழுத்துக்களை விரும்பிப்பெற்று பிரசுரித்தன.

தாமரை, சாந்தி, சரஸ்வதி, செம்மலர், தீக்கதிர், ஜனசக்தி, ஆராய்ச்சி மற்றும் பல ஏடுகள் அவரது கட்டுரைகளை விரும்பியேற்றுப் பிரசுரித்தன.

தமிழ் இலக்கிய விமர்சனத் துறையிலும், சமூக ஆய்வுகளிலும் முழுமையாக அர்ப்பணித்து இயங்கிய பேராசிரியர் கைலாசபதி இரத்தப் புற்றுநோய் காரணமாக தம் 49-ஆவது வயதில் (06. 12. 1982) காலமாகியமை இலக்கிய உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவரது நாமம் இலக்கிய உலகில் அழியாது நீடித்து நிலைக்கும்.

**நூலுருவில் வெளிவந்த அவரது இலக்கியத் திறனாய்வு நூல்கள்... ...**

1. இரு மகாக் கவிகள்
2. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்
3. தமிழ் நாவல் இலக்கியம்
4. ஒப்பியல் இலக்கியம்
5. அடியும் முடியும்
6. இலக்கியமும் திறனாய்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாரதி நூல்களும் பாட பேத ஆராய்ச்சியும்

8. திறனாய்வுப் பிரச்சினைகள்

9. சமூகவியலும் இலக்கியமும்

10. கவிதை நயம் (இணையாசிரியர்)

11. இலக்கியச் சிந்தனைகள்

12. ரமில் கீரோயிஸ்ற் பொயற்றி (ஆங்கிலம்)

இவரது மறைவின் பின் அவரது ஆளுமை - பணிகள் குறித்தும் பல நூல்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# தலைமகன் கைலாசபதி



பழமைச் சேற்றுக்குள்
குழைந்திட்ட தமிழை
செந்நீரால் கழுவிச்
செகத்திடை வைத்தவன்..

விமர்சன விளக்கினை
மினுக்கித் துடைத்துச்
செஞ்சுடர் ஒளிரச்
சிறப்பாய்த் தூண்டியவன்..

ஒப்பியல் ஆய்வு செய்து
ஓரிடம் தனக்கே பெற்றுத்
தப்பின்றித் தமிழ் கடைந்த
தலைமகன் கைலாஸ்..

செந்தீயின் நாவாக
செந்தமிழின் குரலாக
வந்த தமிழ்ப் பேரறிஞன்
வாழ்வான் நின்று..!

– 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# தான்தோன்றிக் கவிராயர், பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன்



'தேனாகப் பொன்நிலவு திகழ்கின்ற ஓரிரவில்
தெய்வத்துள் தெய்வம், என் தா
யானாள் எம் மனைமுற்ற மணல் திருத்தி அன்பொடு தன்
அருகணைத் தென் விரலைப் பற்றி
'ஆனா' என்றோரெழுத்தை அழித்தழித்தம் மணல் மீது
அன்றெழுதப் பயிற்ற, இன்றோ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேனாவைப் பிடித்தெழுதும் உரையெழுத்தும் கவியெழுத்தும்
தலையெழுத்தாய்ப் பிழைப்பாய்க் கொண்டேன்
நானான போதும் தம் நாளாந்தச் சோற்றுக்கும் ஆடைக்கும்
நலிவோர்க்காய்ப் பொருதஎன் வா
ளானாளே தமிழ் என்றிங்கன்ப ரெல்லாம் போற்றுகின்ற
ஆச்சி உனை முதலில் அடிபணிந்தேன் போற்றி'

ஈழத்தில், கிராமங்கள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை இடம்பெற்ற விழாக்களில் ஏராளமான கவியரங்குகளுக்குச் சில்லையூர் செல்வராசன் தலைமை தாங்கியுள்ளார். அக்கவியரங்குகளின் போது மேடையில் சில்லையூர் எழுந்து தமிழ் வாழ்த்தாய் - தாய் வாழ்த்தாய் மேற்கண்ட பாடலை முதலில் உருகிப் படிப்பார். அவரது கண்கள் கலங்கும். கண்ணீர் ததும்பும், சபையும். அவரோடு சேர்ந்து உருகும். கண் கலங்கும். பின்னர் அவருக்கே உரித்தான கணீர் குரல் 'நல்லார் வதிகின்ற யாழ்ப்பாணக் கோடியிலே...' என்று ஓங்கி ஒலிக்கத் தொடங்கும். சபை அவர் பின்னாலே போகும். இதனை அன்று கேட்ட, பார்த்த மக்கள், இன்றும் அந்த மக்கள் கலைஞனை மறந்திருக்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானொலி காலத்துச் சகபாடிகளுடன்...
சில்லையூர் செல்வராசன், கே. எஸ். நடராஜன், கா. சிவத்தம்பி, 'சானா' சண்முகநாதன் ஆகியோர்.

கவியரங்குகளின்போது கவிஞர்களை அறிமுகப்படுத்தும் அவரது பாணி தனித்துவமானது. நகைச்சுவையோடு பொருள் பொதிந்திருக்கும்.

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சிகளில், இலங்கையிலும் கடல் கடந்து மற்ற நாடுகளிலும் அதிக மக்களால் கேட்கப்பட்டு, பாராட்டுப் பெற்ற நிகழ்ச்சிகளான 'தணியாத தாகம், கோமாளிகள் கும்மாளம் போன்றவற்றையும், 'அத்தானே அகத்தானே.... நல்ல குடும்பம், 'ஊருக்கொரு கிராமிய வங்கி வந்ததால்...' போன்ற பாடல்களையும் 'சின்ன ராணியே... ஓ என் சின்ன ராணியே... போன்ற துள்ளிசைப் பாடல்களையும் 'கண்மணி ஆடவா..' போன்ற சினிமாப் பாடல்களையும் எந்தக் கிராமத்து மக்களும் மறந்திருக்கமாட்டார்கள்.

சில்லையூரின் பன்முகப் பணிகளில், அவரது அரசியல் பாதையை அவர் காலமாகிய பின்னர் எவரும் சரி வரச் சொல்லவில்லை. எனினும் கலாநிதி சி.மௌனகுரு ஓரளவு கூறியுள்ளதை ஒலிநாடா ஒன்றில் கேட்க முடிந்தது.

அறுபதுகளின் நடுப்பகுதியில் சர்வதேசிய ரீதியாக பாதிப்பு ஏற்படுத்திய ரஷ்ய - சீன பிளவு காரணமாக இலங்கையிலும் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவளித்து வந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவி கமலினியுடன் சில்லையூர்...

சங்கத்திலும் இந்தப் பிளவு எதிரொலித்தது. புரட்சிப் பாதையை வலியுறுத்திய, மாஓ பாதைய ஏற்றுக் கொண்ட சில்லையூர் செல்வராசன், கே. டானியல், என்.கே. ரகுநாதன் போன்றோர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆற்றல் மிகுந்த பல எழுத்தளார்கள் இவர்களோடு திரண்டனர். இளம் படைப்பாளிகளுக்கு இந்தப் பாதையினரே நம்பிக்கை கொடுப்பவர்களாக மிளிர்ந்தார்கள். டானியல், சில்லையூர் போன்றோர் மக்கள் செல்வாக்குப் பெற்ற தனித்துவம் மிக்க படைப்பாளிகளாக மதிக்கப்பட்டனர். இதற்கு அரசியல் அணியும் உறுதுணையாகவிருந்தது. 1966 அக்டோபர் முதல் ஏற்பட்ட 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின்' போராட்ட எழுச்சிக்கு உந்து சக்தியாக இந்தப் படைப்பாளிகள் செயற்பட்டார்கள். வடபகுதியெங்கும் கருத்தரங்குகள் நடைபெற்றன. இதையொட்டி நடைபெற்ற விழாக்களில் இடம்பெறும் கவியரங்குகளுக்கு சில்லையூர் தலைமை தாங்கி எழுச்சியூட்டியதை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

'தொழிலாளி, தாயகம், வாகை, மக்கள் இலக்கியம்' மற்றும் இலக்கிய சஞ்சிகைகளில் எழுச்சியூட்டும் கவிதைகளை இவர் தொடர்ந்து எழுதினார். புனை பெயர்களிலும் பல கவிதைகளை அப்போது எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலையில் நடைபெற்ற 'புரட்சிகர கலை இலக்கியப் படைப்பாளிகள்' மாநாட்டின் தலைமைக்குழுவில் இடம்பெற்று நெறிப் படுத்தினார். வடபகுதிக்கு சில்லையூர் வந்தால் அவரோடு இளங்கவிஞர் குழாமே சூழ்ந்திருக்கும். அவரது அன்புக்குரிய புதுவை இரத்தினதுரை, வி. ரி. இளங்கோவன், நல்லை அமிழ்தன், நந்தினி சேவியர், தேவி பரமலிங்கம், பாஷையர் தேவதாசன், பொன் பொன்ராசா உட்படப் பல கவிஞர்களோடு சில்லையூர் பாட்டும் சர்ச்சையுமாக மகிழ்ந்திருப்பார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஓ) பொதுச் செயலாளர் என். சண்முகதாசனோடு சில்லையூர் நெருங்கிப் பழகியவர். கட்சி ஆதரவோடு நடக்கும் கூட்டங்களில் இடம்பெறும் கவியரங்குகளுக்கு சில்லையூர் தலைமை தாங்கிச் சிறப்பித்தார் - கலை இலக்கிய கருத்தரங்குகளில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் உற்ற தோழர் சில்லையூர் செல்வராசன். தமிழகத்திற்கு மருத்துவ சிகிச்சைக்காகச் செல்லும் பொருட்டு கொழும்பு வந்த டானியலும், வி. ரி. இளங்கோவனும் சண்முகதாசன் வீட்டில் தங்கியிருந்த பின்னர் தமிழகம் புறப்படுவதற்கு முதல் நாள் (1986 தை 29) இரவு சில்லையூரின் அழைப்பின்பேரில் அவர் வீட்டில் தங்கினர். காலையில் விமான நிலையம் புறப்படுவதற்கு என டாக்ஸியில் ஏறுகையில் 'பத்திரமாய் போய்ச் சேர்ந்து வருத்தத்தைக் குணப்படுத்திக் கொண்டு வாங்கோ...' என்று சில்லையூரும் மனைவியும் கூறும்போது, 'வந்து சேர்ந்தா கண்டு கொள்ளுங்கோ' என்று டானியல் கூற, சில்லையூர் கண்கலங்கி திக்கித்து நின்றார். இது அவர்களின் தோழமை, நட்பு, .... பாசம்... பின்னர், டானியல் திரும்பி வராமலே தஞ்சாவூரில் காலமாகிவிட்டமை குறிப்பிடத்தக்கது.

கவிதை, இசைப்பாடல், நாட்டுக்கூத்து, பத்திரிகைத்துறை, விமர்சனம், புனைகதை, ஒலிபரப்பாளர், மேடை - வானொலி - திரைப்பட தொலைக்காட்சி எழுத்தாளர், நடிகர், பாடகர், தொடர்புசாதன ஆலோசகர், விளம்பரத்துறையாளர் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) எனப் பல்துறையிலும் தனித்துவம் மிக்கவராக மிளிர்ந்தவர் சில்லையூர்.

தமிழ், சிங்களப் படங்களில் மாத்திரமல்ல அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாட்டினர் தயாரித்த ஆங்கிலப் படங்களிலும் அதிக ஊதியம் பெற்று நடித்த ஈழத்தவர் சில்லையூர் தான்.

அதிக குறுந்திரைப் படங்களை பிரதி எழுதித் தயாரித்தவர் இவர். விவசாயம் சம்பந்தமான இவரது 'கமம்' குறும்படம் பேர்லின் படவிழாவில் பாராட்டுப் பத்திரம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐம்பதுகளின் பிற்பகுதியில் பம்பாய் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இவர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். 1988-இல் இந்தியா போபால் நகரில் 'ஆசியக் கவிதை விழா'வில் தமிழ் கூறும் நல்லுலகின் ஒரே தமிழ்ப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். தனது அறிவு, ஆற்றலினால் அதிக ஊதியம் பெற்றவர் சில்லையூர். தோழமை நட்பைப் பெரிதும் மதித்தவர். எந்த நேரமும் நண்பர்கள், தோழர்கள் சூழவிருந்ததால் அவர் மகிழ்ச்சியில் திளைப்பார். அதிக ஊதியம் பெற்றவர் என்றாலும் அவர் விட்டுச் சென்றது விலைமதிக்க முடியாத அவரது படைப்புகள்தான்!

'ஈழத்து தமிழ் நாவல் வளர்ச்சி, தணியாத தாகம் திரைப்படச் சுவடி, ஞானசவுந்தரி (கூத்துப் பிரதித் தொகுப்பு), ஊரடங்கப் பாடல்கள் (கவிதை), ரோமியோ ஜூலியற், தலைவர்கள் வாழ்க மாதோ (கவிதை) சில்லையூர் செல்வராசன் கவிதைகள் (தொகுதி - 1) என்பன இதுவரை வெளிவந்த சில்லையூரின் நூல்களாகும். அச்சேற இன்னும் எத்தனையோ படைப்புகள் காத்திருக்கின்றன.

கௌரவ கலாநிதிப் பட்டம், மக்கள் பணியாளர், மக்கள் எழுத்தாளர் கே. டானியலுக்கு வழங்கப்பட வேண்டும் என முன்னர் யாழ்.பல்கலைக்கழக அதிகார வட்டத்திலேயே குரல் எழுப்பப்பட்ட தாயினும் அது அமுக்கப்பட்டுவிட்டதாக செய்திகள் கசிந்தன. யார் யாருக்கோ, என்ன தேவைகளுக்காகவோ பட்டங்கள் வழங்கப்படும் இன்றைய உலகில், ஒரு பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன் கவனத்திற்குரியவராகத் தென்படாதது வியப்பல்ல.

மக்கள் இதயங்களில் அந்த மகத்தான கலைஞன் காலங்கடந்தும் வாழ்வான்.

– ஐப்பசி, 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# 'சீனத்து'ச் சின்னத்தம்பி



கடந்த செவ்வாய் இரவு (17.4.2001) 11 மணியளவில் அலறிய தொலைபேசி இனந்தெரியாத நெஞ்சுவலியோடு கூடிய மனவருத்தத்தைத் தந்தது. இலண்டனிலிருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி இரவுச் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்ட செய்தியொன்றை, நண்பரொருவர் இலண்டனிலிருந்து தொலைபேசியில் கூறினார். கடந்த சில மாதங்களுக்கு முன்புதான் என் தாயையும், பின்னர் எனது மூத்த சகோதரர் நாவேந்தனையும் இழந்து துன்பம் தோய்ந்திருந்த எனக்கு, அருமைத் தோழர், நண்பர், சகோதரர் எனப் பாசத்தோடு எம்முடன் நீண்ட காலம் பழகிய வீ. சின்னத்தம்பி வட்டுக்கோட்டையில் மரணமாகிய செய்தி மிகுந்த கலக்கத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவருத்தத்தையும் தந்துவிட்டது. இதனை எழுதும்போதும் எனக்கு ஏற்பட்டுள்ள இனந்தெரியாத நெஞ்சுவலி குறையவில்லை.

சீன பீக்கிங் வானொலி தமிழ் ஒலிபரப்பாளராகவும், அயல்மொழிப் பதிப்பக மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றிவிட்டு நாடு திரும்பியிருந்த சின்னத்தம்பி தம்பதிகளின் முன்னால்... அன்பான பேச்சும், புன்னகையும், தேநீரும்... ஆ...

எத்தனை நாட்கள் - எத்தனை பொழுதுகள் அவருடன் இணைந்து கலை இலக்கிய, அரசியல் பணிபுரிந்தமை எல்லாம் நினைவுக்கு வருகிறது. வட்டுக்கோட்டையில் யான் வசித்த காலத்தில் தினசரி மாலைப் பொழுதுகள் அவரைச் சந்திக்கத் தவறுவதில்லை. மற்றும் காலத்திலும், கலை இலக்கிய அரசியல் காரியாலயம் போன்று விளங்கிய மக்கள் எழுத்தாளர் கே.டானியலின் 'ஸ்ரார் கராஜ்ஜில் அவரை அடிக்கடி சந்தித்ததுண்டு.

1981ஆம் ஆண்டு ஜனவரி நடுப்பகுதியில் சென்னை 'சி. எல். எஸ்.' இலக்கியக் கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்றிருந்த வேளை, அந்த வாரமளவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சீனாவிலிருந்து வந்திருந்த சின்னத்தம்பி, டானியலையும் என்னையும் சென்னையில் சந்தித்தார். 'மூன்று உலகக் கோட்பாடு' இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினால் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு, சீன அரசு சீர்குலைவுப் பாதையில் செல்கிறதெனவும், மாஓவின் கருத்துக்கள் அங்கு பின்தள்ளப்படுகின்றன. மாஓ பாதையாளர்கள் சிறைப்பிடிக்கப்படுகிறார்கள் என விளக்கம் அளிக்கப்பட்டிருந்த நேரமது..!

சென்னையில் டானியலைச் சந்தித்த சின்னத்தம்பி நீண்டநேரம் அரசியல் விவாதத்தில் ஈடுபட்டார். அக்காலகட்டத்தில் சீனாவில் நடைபெற்றுவந்த மாற்றங்களை விபரித்தார். அலுவலகங்கள் தோறும் காட்சியளித்த தலைவர் மாஓவின் படங்கள் எவ்வாறு மாயமாய் மறைந்து கொண்டிருந்தன என்பதை அவர் வேதனையோடு சொல்லிக் கொண்டிருந்தமை இன்றும் ஞாபகம். தொடர்ந்து சென்னையில் பல நண்பர்களைச் சந்தித்து அரசியல் விவாதத்தில் ஈடுபட்டார்.

பின்னர் சீனா திரும்பிய சின்னத்தம்பி ஒரு சில மாதங்களிலேயே சீனாவிலிருந்து குடும்பத்துடன் நாடு திரும்பிவிட்டார். தொடர்ந்து அங்கு கடமையாற்ற வசதியிருந்தும் மனச்சாட்சிக்கு விரோதமாகக் கடமையாற்ற முடியவில்லையென அங்கு கல்வி கற்றுக் கொண்டிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனாவில் சின்னத்தம்பி குடும்பம்....

பிள்ளைகளையும், அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டார். நாடு திரும்பியிருந்த சின்னத்தம்பி தம்பதிகளின் 16 வருட சீன அனுபவங்கள் குறித்து பேட்டி கண்டு பத்திரிகைக்கு அனுப்பியது இன்றும் நினைவிலுள்ளது. அவ்வேளை 'தொழிலாளி' பத்திரிகை, மக்கள் கலை இலக்கியப் பெருமன்றப் பணிகளில் ஈடுபட்டிருந்த எனக்கு அவர் பெரிதும் உதவினார். 'மக்கள் இலக்கியம்' சஞ்சிகையின் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றினார்.

பின்னர் 1983-இல் யான் ஐக்கிய நாடுகள் தொண்டராகத் தெரிவு செய்யப்பட்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் கடமையாற்றச் சென்றிருந்த காலத்தில், ஒரு சில மாதங்கள் அவரைச் சந்திக்கவில்லை. 1984ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் யான் நாடு திரும்பியிருந்தவேளை, நாட்டில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள், இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுவந்த போராட்ட எழுச்சி, தேசிய இனம் சுயநிர்ணய உரிமைக்காக எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி போராடுதல் முற்போக்கானதே எனச் சிங்கள மக்களுக்குச் சண்முகதாசன் அளித்துவந்த விளக்கம் என்பன உட்பட எத்தனையோ விடயங்கள் குறித்து அவருடன் விவாதித்ததுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய 'அமைதிப் படை' வந்திருந்த காலம், யாழ். மக்கள் நல்லூர் கோவிலிலும் மற்றும் இடங்களிலும் இடர்ப்பட்டவேளை, பல்கலைக்கழகமும் தாக்குதல்களுக்குள்ளாகி இருந்த நேரத்தில் வட்டுக்கோட்டைக் கிராமத்தின் ஒரு பகுதிதான் ஓரளவு தாக்குதல் குறைந்த இடமாக இருந்தது. இதனால் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், டாக்டர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் உட்படப் பலர் இங்கு வந்து குவிந்தனர்.

இவ்வேளை சகல புத்திஜீவிகளையும் சந்தித்து, எல்லோரையும் ஒன்றுகூட்டி ஏகோபித்த குரலில், 'இந்தியப் படையின் தாக்குதல்களை உடனே நிறுத்த வேண்டும், மக்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்ப உடனே அனுமதிக்க வேண்டும் என்பது போன்ற அத்தியாவசிய கோரிக்கைகளை, இந்தியா உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் பலருக்கும் அனுப்ப வேண்டும் எனச் சிந்தித்து முன்னணியில் நின்று சின்னத்தம்பி செயற்பட்டார். அவருடன், எழுத்தாளர் ஐ.சாந்தன் மற்றும் ஒரு சிலருடன் யானும் வட்டுக்கோட்டையில் குவிந்திருந்த சகல புத்திஜீவிகளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒன்றுகூட்ட உதவினோம்.

அன்று தென்னிந்தியத் திருச்சபை பேராயராக விளங்கிய அம்பலவாணர், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், உப அதிபராகக் கடமையாற்றிய இன்றைய பேராயர் எஸ். ஜெபநேசன் உட்படப் பலரையும் சந்தித்துப் பேசினோம். யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒன்றுகூடி எடுக்கப்பட்ட தீர்மானங்களை உலக நாட்டுத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியில் சின்னத்தம்பி பெரிதும் பங்களித்தார்.

புகழ்பெற்ற கம்யூனிஸ்ட் அறிஞர்களில் ஒருவரான கார்த்திகேசன் விட்டுச் சென்ற பணிகளை மகள் இராணியும் கணவர் சின்னத்தம்பியும் தொடரத் தவறில்லை. எந்த வேளையிலும் அவர்கள் வீட்டில் விருந்தினர் இருப்பார்கள். அவர்கள் எந்த இனம், சாதி, சமயம், உத்தியோகம், தராதரம் என்ற பேதம் அந்த வீட்டில் கிடையாது. எல்லோருக்கும் உபசாரம் ஒரேவிதமாகத்தானிருக்கும். எந்த முற்போக்கான விடயங் களுக்கும் அங்கு ஆலோசனை, ஆதரவு ஒத்துழைப்பு கிடைக்கும்.

டானியலின் தொழிலகத்தில் சில வருடங்கள் நிர்வாகப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். டானியலின் மறைவின் பின்னர், யுத்தக் கெடுபிடிகளும் அதிகரித்த சூழ்நிலையில் தொழிலகச் செயற்பாடுகள் முடங்கின. வீட்டு நிலைமை கருதிச் சில வருடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனாவில் வி. சின்னத்தம்பி, ராணி சின்னத்தம்பி தம்பதிகள்...

யாழ் 'உதயன்' தினசரிப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார்.

இலங்கையில் வெளியாகும் பத்திரிகைகள் பலவற்றிலும் கலை இலக்கிய, அரசியல் கட்டுரைகளை இளமைக்காலம் முதல் இறுதிக்காலம் வரை எழுதி வந்தார். தமிழ், ஆங்கிலம், சிங்களம், சீன மொழிகளை அறிந்திருந்த சின்னத்தம்பி இம்மொழிகளில் காத்திரமான பல கட்டுரைகளை எழுதிச் சர்ச்சைக்குரிய எழுத்தாளராகப் பலரின் கவனத்தை ஈர்த்தார்.

இவர் எழுதி வெளியிட்ட 'ஓ கனடா' என்ற நாவலும் 'மக்கள் நேசன் கார்த்திகேசன் மாஸ்ரர்' என்ற நூலும் நல்ல வரவேற்பைப் பெற்றன. இவர் எழுதி வைத்துள்ள 'சீன அனுபவ டையரி' சர்வதேச அரசியல் சித்தாந்தப் போராட்டங்களை விமர்சிப்பதாகவும், கலை இலக்கிய, அரசியல் பாதையை நெறிப்படுத்தும் அனுபவப் பதிவுகளைக் கொண்டதாகவும் இருக்கிறது.

'தம்பி' என்று நண்பர்களாலும், பொதுமக்களாலும் அன்பாக அழைக்கப்பட்ட இவரது 'மணிவிழா' சில மாதங்களுக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் சிறப்புற நடைபெற்றதெனச் செய்திகள் தெரிவித்தன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பத்திரிகையாளர்கள் - எழுத்தாளர்கள், உயர் அதிகாரிகள், பொதுநலத் தொண்டர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு சின்னத்தம்பியின் பணிகளைப் பாராட்டி வாழ்த்துக் கூறினர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சீனாவில் வசிக்கும்போது பிறந்த மகளுக்கு சீனோதயா என்றும், ஸ்ரீலங்காவை மறக்காது அடுத்த மகளுக்கு சிறிஉதயா எனவும் பெயரிட்டு பாசத்தோடு வளர்த்தார். அண்மையில்தான் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய டாக்டர் சீனோதயாவுக்குத் திருமணம் நடந்தது. கணவரும் டாக்டராவார்.

திடீரென ஏற்பட்ட நெஞ்சவலி சின்னத்தம்பியின் உயிரைப் பறித்துவிட்டது. இறுதி அஞ்சலி வட்டுக்கோட்டை இல்லத்தில் செவ்வாய் கிழமை (17. 4. 2001) நடைபெற்றது. முன்னேற்பாட்டின்படி அவரது கண்கள் தானம் செய்யப்பட்டன. அன்றே உடல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குக் கொடுக்கப்பட்டது.

நாட்டு நிலைமை கருதி, வெளிநாடு வருமாறு உறவினர் பலர் அழைத்தும் இவர் அந்த அழைப்புகளை நிராகரித்திருந்தார். என்றும் மண்ணையும், மக்களையும் நேசித்த இவர் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் தாய் மண்ணைவிட்டு இடம்பெயராது வாழ்ந்து முடித்தார்.

அடக்கமான, அன்பான வார்த்தைகளோடு முகம் மலர எவரையும் மதித்து வரவேற்கும் பண்பும், கொடுமைகளைச் சாடும் துணிச்சலும், சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக என்றும் குரல்கொடுக்கும் மனிதாபிமானியுமான சின்னத்தம்பியின் பணிகள் போற்றத்தக்கவை.

அவரது நாமம் நின்று நிலைக்கும்.

– 18. 4. 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# உலகம் போற்றும் தமிழறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி



உலகம் போற்றும் தமிழ்ப் பேரறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் மறைவுச் செய்தி, தமிழியல் ஆய்வாளர்கள், சிந்தனையாளர்கள், கலை இலக்கியவாதிகள் அனைவர்க்கும் அதிர்ச்சியையும், வேதனையையும் கொடுத்துவிட்டது.

கடந்த நூற்றாண்டின் தமிழ்த் திறனாய்வு உலகில் இலங்கையின் இரட்டையர்கள் எனப் பெயர் பெற்ற கைலாசபதி, சிவத்தம்பி ஆகிய இருவரையும் தமிழக ஆய்வாளர்கள், கலை இலக்கியவாதிகள் நிமிர்ந்து பார்க்க வேண்டிய நிலை வந்தது. மார்க்ஸிச நெறிவழி இவர்களது திறனாய்வுப் போக்குகள், உருவமா உள்ளடக்கமா..? வாதப் பிரதிவாதங்கள், தேசிய இலக்கியம், இழிசனர், இலக்கியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முற்போக்குவாதம் முதலியன குறித்த வாதப் பிரதிவாதங்கள் போன்றவற்றில் இருவரும் தீவிர பங்கு கொண்டு இலக்கிய உலகினை வியப்புடன் பார்க்க வைத்தனர். பண்டித மரபுவாதிகளின் கடுந்தாக்குதல்களை எதிர்கொண்டனர். இவர்கள் காட்டிய புதிய பாதை வரலாறாகித் தொடர்கிறது.

பேராசான் கைலாசபதியோடு உறுதுணையாக நின்று, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினை வழிநடத்திச் சென்றார் பேராசிரியர் சிவத்தம்பி.

தமிழ் அவைகளில், எந்த ஆய்வாளருக்கும், புலமையாளருக்கும் பதில் சொல்லும் ஆற்றல், ஆளுமையுள்ளவராக, நிகரற்ற பெருமனிதனாக அவர் விளங்கினார்.

அவரது அறிவுத்திறன், ஆற்றல், ஆளுமையை 1981ம் ஆண்டு தை மாதம் சென்னையில் 'சி. எல். எஸ். ' நடத்திய இலக்கியக் கருத்தரங்கின்போது என்னால் உணர முடிந்தது. இலக்கியவாதிகள் நிறைந்திருந்த அவையிலே, அவர் தலைமை தாங்கி நடத்திய அமர்வில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் எழுத்தாளர் கே. டானியலுடன் மேடையிலிருந்து கவனித்தது இன்றும் எனக்கு ஞாபகம்.

தோழமைப் பெரிதாக மதித்த பெருமகன் அவர். கே. டானியல் காலமாகியபோது, "வரலாற்றைப் படைத்த நீ வரலாறாகிவிட்டாய். உன் மறைவால் நாங்கள் படும்வேதனை உனக்குத் தெரியும். தோழமையுணர்ந்த உனக்கு எங்கள் உணர்ச்சி புரியாதுவிடாது" என்றவாறு கண்ணீர் சிந்த எழுதியிருந்தார்.

அந்த உணர்வுதான், இன்று அவரை இழந்துள்ள கலை இலக்கியத் தோழர்கள் அனைவர்க்கும் உள்ளது.

தஞ்சை பல்கலைக்கழகத்தில் அவர் சிறப்புப் பேராசிரியராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் தஞ்சையில் வாழ்ந்த பேராசிரியர் அ. மார்க்ஸ், பேராசிரியர் இராமசுந்தரம் போன்ற பலருடன் அவர் நெருங்கிப் பழகியமையை அறிய முடிந்தது.

இன்று புகழ்பெற்ற ஆய்வாளராகவும், சிறந்த விமர்சகராகவும் பேராசிரியர் அ. மார்க்ஸ், விளங்குவதற்குப் பேரறிஞர் சிவத்தம்பியின் வழிகாட்டுதல்களும் உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலும் இன்று புகழ்பெற்று விளங்கும் ஆய்வாளர்கள் கலை இலக்கியவாதிகள் பலரும் அவரினதும், பேராசான் கைலாசபதி அவர்களினதும் வழிகாட்டுதல்கள் வழிவந்தவர்களாவர்.

அறுபதுகளின் நடுப்பகுதியில் அரசியல் கோட்பாட்டுவழி கம்யூனிஸ்ட் கட்சி பிளவடைந்தது. பின்னர் அதன் தாக்கத்தால் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் பிளவுற்றது. அரசியல்வழி பேராசிரியர் கைலாசபதி சீனச் சார்பினரானார். பேராசிரியர் சிவத்தம்பி ரஷ்ய சார்பினராகவே விளங்கினார்.

கே. டானியல், சில்லையூர் செல்வராசன், என். கே. ரகுநாதன் உட்பட பலர் சீனச் சார்பினராக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்தும் வெளியேறினர். பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்தும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கு உறுதுணையாக விளங்கினார்.

இறுதிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கோட்பாட்டுக்கு வலுச்சேர்ப்பராக எழுதியும் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்டைய இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான அனைத்தையும் இணைத்துப் பார்க்கும் புலமை மரபு கொண்டவர் பேராசிரியர் சிவத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்று எம் தமிழர் மத்தியில் வாழ்ந்தவர்களுள் சிந்தனையாலும் செயலாலும் மேற்கிளம்பி ஆளுமைப் பொலிவாக உயர்ந்து நின்றவர் பேராசிரியர் சிவத்தம்பி.

கடந்த தை மாதம் (2011) கொழும்பில் நடைபெற்ற சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சிறப்புரையாற்றிய போது அவரை இறுதியாகக் காண முடிந்தது. அவரது இழப்பு தமிழ் ஆய்வுத்துறைக்கும், கலை இலக்கியத்துறைக்கும் பேரிழப்பாகி எல்லோரையும் கலங்க வைத்துவிட்டது.

**பேராசிரியர் சிவத்தம்பியின் நூல்கள் சில...**

1. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்.
2. இலக்கியமும் கருத்து நிலையும்.
3. பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி
4. தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. யாழ்ப்பாணம் : சமூகம், பண்பாடு, கருத்துநிலை

6. தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்

7. ஈழத்தில் தமிழ் இலக்கியம்

8. அரங்கு ஓர் அறிமுகம்

9. தமிழ்ப் பண்பாட்டில் சினிமா

10. தமிழ்ச் சமூகமும் பண்பாட்டில் மீள் கண்டுபிடிப்பும்.

11. இலக்கியமும் வாழ்க்கையும்

12. இலக்கணமும் சமூக உறவுகளும்

13. நாவலும் வாழ்க்கையும்

14. தமிழில் இலக்கிய வரலாறு

15. கார்த்திகேசு சிவத்தம்பியின் நேர்காணல்கள்

– 10. 07. 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# அறிவுப் பசிக்கு உதவிய ஆர். ஆர். பூபாலசிங்கம்



தற்போதைய யாழ். நவீன சந்தைக் கட்டிடம் அப்போது கட்டப்படவில்லை. அந்த இடத்தில் தான் அன்றைய பஸ் நிலையம் அமைந்ததிருந்தது. அதற்கு மேற்குப் புறமாகக் கஸ்தூரியார் வீதியின் ஆரம்பம். அதனருகாமையில் மேற்குப்புறமாகத் தகரக் கூரைகளுடன் வரிசையாகப் பல கடைகள். அதிகமானவை குளிர்பானம், பிஸ்கட் முதலியன விற்கப்படும் கடைகள். அவற்றின் நடுவே ஒரு புத்தகசாலை.

அந்தப் புத்தகசாலையின் உள்ளேயும், வாசலிலும் தினசரி பல இலக்கியவாதிகள், ஆசிரியர்கள், அரசியல் பிரமுகர்களைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே ஓர் உயர்ந்த கறுப்பு உருவம், வெள்ளை வேட்டி, அதற்கேற்ற வெள்ளை நாசனல் - சேட், சிவப்பு நிற 'மவ்ளர்'. தோளில் - சிலவேளை நாரியில் இறுக்கக் கட்டியபடி, சில வேளை நெற்றியில் சந்தனப்பொட்டு, பளிச்சிடும் வெண்ணிறப் பற்கள் தெரிய சிரிக்கும் அழகு, அன்பாகப் பண்பாகப் பேச்சு. ஆமாம்... அவர் தான் அந்தப் புத்தகசாலையின் உரிமையாளர் ஆர். ஆர். பூபாலசிங்கம்.

அறுபதுகளின் முற்பகுதி எனக்கு பன்னிரண்டு - பதின்மூன்று வயதிருக்கும். வாரவிடுமுறை தினங்களில் அல்லது பாடசாலை விடுமுறை நாட்களில் எனது மூத்த சகோதரர் நாவேந்தனின் அழைப்பின்பேரில் புங்குடுதீவிலிருந்து யாழ். வந்து அந்தப் புத்தகசாலையில் அவரைச் சந்திப்பதற்காகக் காத்துநிற்பேன்.

நாவேந்தன் அண்ணர் அங்கு வந்ததும் "எப்படி... நாவேந்தன்..." என முதலில் புத்தகசாலை உரிமையாளர் நலம் விசாரிப்பார். இருவரும் சில விடயங்களைப் பற்றி பேசிக்கொள்வர். பின்பு அங்கு நிற்கும் சக எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோருடன் அண்ணர் உரையாடிக் கொள்வார். சில பத்திரிகைகள் - நூல்களை எடுததுப் பார்ப்பார். வாங்கிக் கொள்வார். அவ்வேளை யானும் சில நூல்களை - பத்திரிகைகளை அங்கு புரட்டிப் பார்த்துக் கொண்டிருப்பேன்.

இப்படியாகப் பத்திரிகை - புத்தகங்களைப் புத்தகசாலையின் உள்ளே நின்று எடுத்துப் பார்ப்பதுவும், தேவையானவற்றை வாங்கிக் கொள்வதுவுமான பழக்கம் பூபாலசிங்கம் புத்தசாலையில், யான் நாட்டைவிட்டுப் புறப்படும்வரை தொடர்ந்தது எனலாம்.

அந்தக் காலத்தில் இரசிகமணி கனக செந்திநாதன், சு. இராஜநாயகம், கே. டானியல், டொமினிக் ஜீவா, அம்பி, தேவன் - யாழ்ப்பாணம், நந்தி, தில்லைச்சிவன், சொக்கன், முருகையன், சோமகாந்தன், காரை சுந்தரம்பிள்ளை, அகஸ்தியர் ஆகியோரையும் பின்னர் அறுபதுகளின் பிற்பகுதியில் செ. யோகநாதன், தெணியான், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் ஆகியோருட்படப் பல பேராசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் அந்தப் புத்தக சாலையில் தான் பல தடவைகள் பார்த்திருக்கிறேன் - பேசியிருக்கிறேன்.

கஸ்தூரியார் வீதியின் ஆரம்பத்தில் - ஆஸ்பத்திரி வீதியில் இருந்த, எமது ஊரைச் சேர்ந்தவரின் உணவகமான 'பிருந்தாவனம் ஹோட்டல்' பிரசித்திப் பெற்றது. அதன் உரிமையாளர் பொன்னையா தமிழரசுக் கட்சியின் தீவிர விசுவாசி. எனது சகோதரரின் நண்பர். ஆரம்பக் காலத்தில் தீவகத்தில், குறிப்பாகப் புங்குடுதீவில் தமிழரசுக் கட்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்திய நாவேந்தன் அண்ணருக்கு உறுதுணையாக நின்ற மனிதர். 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் நடந்த வேளை சத்தியாக்கிரகிகளுக்கு உணவளித்த பிரமுகர்.

அந்த உணவகத்தில் குடும்பமாக அமர்ந்து உணவருந்த தனித்தனியாகச் சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்த ஒதுக்கிடங்களில் எனது சகோதரர் நாவேந்தன், அடுத்த சகோதரர் துரைசிங்கம் ஆகியோர் அமர்ந்து பூபாலசிங்கம் புத்தக சாலையில் வாங்கிவந்த பத்திரிகைகளை, புத்தகங்களை வாசித்தவாறு தேநீர் அருந்துவர். பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், செய்திகள் எழுதிக் கொண்டிருப்பர். யானும் அதில் கலந்து கொள்வேன்.

பின்னர் மீண்டும் அருகிலுள்ள புத்தக சாலைக்குத் திரும்பி தாம் சந்திக்க வேண்டியவர்கள் - எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் அங்கு வந்தார்களா எனக் கண்டு பேசி மகிழ்வர்.

அவ்வாறு கலை இலக்கிய, அரசியல்துறை சார்ந்த சகலரும் சந்திக்கும் - பேசிக்கொள்ளும், சில வேளை புரிந்துணர்வோடு விவாதித்துக்கொள்ளும் - சர்ச்சைப்படும் இடமாகப் பூபாலசிங்கம் புத்தகசாலை விளங்கியதை யான் அன்று பாடசாலை மாணவப் பருவத்திலேயே பார்த்திருக்கிறேன். மிக இளம் வயதிலேயே கலை இலக்கிய, அரசியல் பிரமுகர்கள் பலரையும் பார்த்துப் பேசும் சந்தர்ப்பங்கள் எனக்கு சகோதரர் நாவேந்தன் மூலம் பூபாலசிங்கம் புத்தக சாலையிலேயே அதிகமாகக் கிடைத்தது எனலாம்.

அந்தக் காலத்தில் பல்வேறு அரசியல் முரண்பாடு கொண்டவர்களும் அந்தப் புத்தகசாலையில் சந்தித்துக் கொள்வர். விவாதித்துக் கொள்வர். அவ்வேளை எனது சகோதரர் தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பீரங்கியாக - அவர்களின் இலக்கியப் பிரதிநிதியாக விளங்கியவர். அக்கட்சியின் நட்சத்திரப் பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் நாவேந்தன், புதுமைலோலன் ஆகியோர் விளங்கினர் என விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

ஆர். ஆர். பூபாலசிங்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். இருப்பினும் மற்றக் கட்சிகளின் பிரமுகர்கள் - இலக்கியவாதிகள் எவராயினும் அவரது புத்தகசாலைக்கு வரத் தவறியதில்லை. காரணம்... பூபாலசிங்கம் அவர்களின் அன்பும் பண்பும் நிறைந்த பேச்சு - உபசரிப்பு. அத்துடன் அன்று மார்க்ஸிச நூல்களை இந்தியாவிலிருந்தும், கொழும்பிலிருந்தும் உடனுக்குடன் பெற்று வாசிக்க பூபாலசிங்கம் புத்தசாலையே உதவியாக விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸிசக் கருத்துக்களைப் பரப்பும் பத்திரிகைகளை விநியோகித்ததின் காரணமாகப் பொலிசாரின் தாக்குதல்களுக்கும் பூபாலசிங்கம் அவர்கள் ஆளாகியுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குப் பிரதேச சுயாட்சியே ஏற்றது எனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களை வலியுறுத்தவும் அவர் தவறியதில்லை.

கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்ட காலத்தில் அவர் கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ சார்பாகத் தம்மை இனங்காட்டி நின்றார். அதன் தலைவர்களுடன் அவருக்கு நெருங்கிய தோழமை உறவு இருந்தது. இருப்பினும் அன்று பலம்பெற்றிருந்த சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினருடன் அவர் நேரடியாக எவ்வேளையிலும் முரண்பட்டதில்லை. எல்லோருடனும் அவர் தோழமையைப் பேணத் தவறவில்லை.

யாழ். புதிய பஸ்நிலையம் முன்பாக மூலைக்கடையில் பூபாலசிங்கம் புத்தகசாலை இயங்கியதுடன் அதன் கிளைகளும் நகரின் சில பகுதிகளில் இயங்கின. 1981 ஜூன் முதல் நாளில், தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்குக் கேடு செய்யத் திட்டமிட்டவர்கள் கல்விக்களஞ்சியமாகத் திகழ்ந்த யாழ். பொதுசன நூல்நிலையத்தைத் தீயினால் பொசுக்கியபோது, பூபாலசிங்கம் புத்தகசாலைகளையும் விட்டுவைக்காமைக்குக் காரணம் அவற்றின் முக்கியத்துவமே..! எத்தகைய இழப்புகள் ஏற்படினும், துயர்கள் எதிர்வந்தபோதிலும் துவண்டுவிடாமல் விடாமுயற்சியால் புத்தகசாலையைத் தளிர்க்க வைத்தார்.

நூல்நிலைய எரிப்பை, உண்மை நிலைமைகளைத் தமது கட்சித் தலைவர்கள் மூலம் தென்னிலங்கையில் சிங்கள, ஆங்கில ஏடுகளில் வெளிவர ஆவன செய்தார். யாழ். பொதுசன நூலகத்தின் மீள்விப்புக்கு உதவும் பணிகளையும் மேற்கொண்டாரென அன்றைய மாநகர முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ சார்புத் தலைவர்கள், தமிழக கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்கள், இலக்கியவாதிகள் யாராகினும் யாழ்ப்பாணம் வந்தால் அவர்களுக்குப் பூபாலசிங்கம் அவர்களின் வீட்டில் நிச்சயமாக உபசரிப்பு நிகழும். அவரது சொந்த ஊரான நயினாதீவைச் சேர்ந்தவர்களுக்கும் அவர் முன்மாதிரியானவராக, பெருமைக்குரியவராக, உதவுகின்ற பரோபகாரியாகத் திகழ்ந்தார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கலை இலக்கிய, அரசியல்வாதிகள் அத்தனைபேரினதும் அறிவுப்பசிக்குப் பூபாலசிங்கம் புத்தகசாலை ஓர் சத்திரமாகவே விளங்கியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதுகளின் பிற்பகுதியில் அப்புத்தகசாலையில் பத்திரிகை விற்பனைப் பகுதிக்கு யாழூர் துரை என்னும் எழுத்தாளர் பொறுப்பாக இருந்தார். வார மாத சஞ்சிகைப் பகுதிகளைத் தர்மராசா என்ற இளைஞர் பார்த்துக் கொள்வார். நண்பகல் வேளைகளில் தினசரி யான் அங்கு சென்று, அவர்களுக்குப் பக்கத்தில் நின்று, அன்று வந்த சகல பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் மேலோட்டமாகப் பார்த்துவிட்டுத் தேவையானவற்றை வாங்கிக் கொள்வது வழக்கம். அவ்வேளைகளில் மூத்த எழுத்தாளர், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உட்படப் பல எழுத்தாளர்களும், ஆசிரியர்களும் அங்கு வந்து என்னைப் போன்றே அவர்களும் பத்திரிகை - சஞ்சிகைகளை மேலோட்டமாகப் பார்ப்பர்.

பத்திரிகைப் பகுதிப் பொறுப்பாளர் யாழூர் துரைக்கு உதவியாக அவரது மருமகன் ரவி என்ற உயர்தர வகுப்பு மாணவரும் அங்கு சிலவேளை நிற்பார். அவரும் சஞ்சிகைப் பகுதிப் பொறுப்பாளரும் எம்மைப்போன்று தினசரி வந்து பத்திரிகை - சஞ்சிகை வாசிப்போருக்கு 'ஓர் குறிப்புச் சொல்' வைத்துத் தமக்குள் பேசிக் கொள்வர். அது என்னவெனில் (15 / 3) "பதினைந்தின் கீழ் மூன்று" சங்கக்காரர் என்பது. 15 - 0, 3 - C என்பதாகும். அதாவது ஓசியில் (O. C.) எல்லாம் படிப்பவர்கள் என்பதாகும். இது எமக்கும் தெரிந்திருந்தது.

ஒரு நாள் இவ்வாறு அவர்கள் தமக்குள் பேசிக்கொள்ளும்போது யான், "தம்பியவை... நீங்க... சின்னப் பிள்ளைகள்... நாங்க... எத்தனையோ வருசமா இப்படித்தான் வந்து பார்க்கிறனான்கள்... உங்களுக்குத் தெரியாவிட்டால் உள்ளே முதலாளி இருக்கிறார்... கேட்டுத் தெரிஞ்சு கொள்ளுங்கோ..." என்று சிரித்துக் கொண்டே கூறினேன்... அருகில் டொமினிக் ஜீவா புன்முறுவலோடு ஏதோவொரு சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

அன்று மாலை தோழர் பூபாலசிங்கம் அவர்களிடம்... "தம்பியவை... அவர்கள் இலக்கியவாதிகள்... எங்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள்... அவர்கள் எதை எடுத்து வாசித்தாலும் ஒன்றும் சொல்லாமல் பண்பாக நடந்து கொள்ளுங்கள்" என்று சொன்னாராம்.

இந்தப் பண்பு - தோழமை தான் தோழர் பூபாலசிங்கம் அவர்களைச் சகல இலக்கியவாதிகள் மனதிலும் பதியவைத்தது.

பாரிஸில் அறிவுசார் தமிழ் புத்தகசாலையாக விளங்குவது 'அறிவாலயம் புத்தகசாலை'. இதன் உரிமையாளர் நண்பர் சிவதாஸ். சில வேளைகளில் யான் அங்கு பத்திரிகை - சஞ்சிகைகளை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோட்டமாகப் பார்க்கும் போது சிவதாஸ் பலர் முன்னிலையிலும் பகிடியாக, “இது என்ன யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலை என்ற நினைப்போ...?” என்பார். அப்போது யானும் அவருக்குப் பகிடியாக அதிரடி மறுமொழி சொல்வதுண்டு. அந்தளவுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை இலக்கிய வாசகர்களின் விருப்பங்களை நிறைவேற்ற உதவும் கூடமாக விளங்கியதை யாவரும் அறிந்திருந்தனர்.

மரணம் நிச்சயமானதுதான். என்றாலும் இலக்கிய நெஞ்சங்களையெல்லாம் தோழர் பூபாலசிங்கம் அவர்களின் மரணம் துயரில் ஆழ்த்திவிட்டது என்பது உண்மை...!

தமிழறிஞர் ஒருவர் குறிப்பிட்டதுபோல, சிறுகக்கட்டி பெருக வாழ்ந்த பூபாலசிங்கம் அவர்களுக்குப் புத்திர சந்தானமும், புத்தக சந்தானமும் புகழ்பாடும் எச்சங்களாய் உள்ளன என்பது யாவரும் அறிந்ததே..!

தந்தையின் பணியை, அவரது விடாமுயற்சி, ஊக்கம், பரோபகாரம் யாவற்றையும் மனதில்கொண்டு அவரது மூத்த புதல்வர் ஸ்ரீதரசிங் இன்று முன்னெடுத்து வருகிறார். தந்தையின் பெயர் சொல்லும் புத்தக நிறுவனங்களை ஆலவிருட்சமாய் தளிர்க்க வைத்து, கொழும்பு, யாழ்ப்பாணம், லண்டன் நகரங்களில், ஸ்ரீதரசிங் சகோதரர்கள் நற்பணிகளுக்கும் உதவி நின்று புகழீட்டி வருகிறார்கள்.

தோழர் பூபாலசிங்கம் நாமம் என்றும் நீடித்து நிலைக்கும்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# மூத்த எழுத்தாளர் காவலூர் இராஜதுரை



இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான காவலூர் இராஜதுரை அவுஸ்திரேலியா சிட்னி நகரில் கடந்த 2014 அக்டோபர் 14 -ம் திகதி (14 - 10 - 2014) செவ்வாய்க்கிழமை 83 -வது வயதில் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார்.

பொதுசனத் தொடர்புத் துறையில் ஈடுபடுவோர் பலர். ஆயினும், அத்துறையின் பலத்தையும் பலவீனத்தையும் மட்டுமல்ல, அதன் நுட்பங்களையும் உணர்ந்து, தம் முத்திரை பதிப்போர் ஒரு சிலரே. அந்த ஒரு சிலருள் 'பல்கலைவேந்தர்' சில்லையூர் செல்வராசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலூர் இராஜதுரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இருவரும் இரட்டையர்கள் போன்று மிகுந்த நட்புடன் இயங்கி வந்தவர்கள்.

'விளம்பரத்துறை' என்ற தனது நூலில், 'விளம்பரத் துறையில் சில்லையூர் செல்வராசன்' என்ற தலைப்பில் காவலூர் இராஜதுரை எழுதியுள்ள கட்டுரை ஊடகத்துறையில் ஈடுபடுவோர்க்கு விளம்பரத்துறை குறித்த தகவல் தரும் சிறந்ததோர் கட்டுரையாகும்.

காவலூர் இராஜதுரையின் கதை வசனத்தில் அவரது மைத்துனர் தயாரித்து புகழ்பெற்ற இயக்குனர் தர்மசேன பத்திராஜா இயக்கிய 'பொன்மணி' திரைப்படம் இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களில் கவனத்திற்குரியதாகும்.

சர்வதேசத் திரைப்பட விழாக்களிலும் இத்திரைப்படம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத் தயாரிப்பின்போது யாழ்நகரில் காவலூர் இராஜதுரையோடு சில நாட்கள் செயற்பட்டமை ஞாபகத்தில் நிற்கிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக எழுபதுகளில் அவர் கடமையாற்றிய போது 'கிராமவளம்' மற்றும் கிராமிய நிகழ்ச்சிகளுக்காக, அவருக்கு உதவியாக நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு முதல் வடபகுதியின் பல கிராமங்களுக்கும் சென்று ஒலிப்பதிவுகளை மேற்கொண்டமையும், புங்குடுதீவில் எங்கள் வீட்டில் அவர் தங்கியிருந்து 'பொன்மணி' திரைப்படத் தயாரிப்புக் குறித்தும் கலை இலக்கிய விடயங்கள் குறித்தும் நிறையவே பேசிக்கொண்டமையும் இன்றும் மனதில் பசுமையாக இருக்கின்றது.

அவர் யாழ்நகர் வந்தால் 'மக்கள் எழுத்தாளர்' கே. டானியலின் விருந்தினராக உபசரிக்கப்படுவார்.

அந்நாட்களில் யான் கொழும்பு செல்லும்போதெல்லாம் சில்லையூரையும் காவலூரையும் சந்தித்து நிறையவே பேசிக்கொள்வதுண்டு.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கிராமிய நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றிய அ. சிறிஸ்கந்தராசாவின் (தற்போது கனடாவில் வசிக்கிறார்) கொழும்பு வீட்டிலும் நாம் எல்லோரும் சந்தித்துக்கொள்வதுண்டு.

'பொன்மணி' திரைப்படத்தின் பாடல்களையும் சில்லையூர் செல்வராசனே எழுதினார். அப்பாடல்கள் இரசிகர்கள் மனதில் பெரிதும் இடம்பிடித்த பாடல்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகைத்துறை, ஒலிபரப்புத்துறை, விளம்பரத்துறை, திரைப்படம், தொலைக்காட்சித்துறை, சிறுகதை, நாவல், விமர்சனம் எனப் பல்துறைகளிலும் நீண்டகாலம் காவலூர் இராஜதுரை இயங்கியவர். தமிழில் விளம்பரத்துறை குறித்த நூலை முதன்முதலில் எழுதி வெளியிட்டவர்.

1978 -ம் ஆண்டு ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வேலையிலிருந்து விடுபட்டுத் தனிப்பட்ட முறையில் விளம்பர நிறுவனமொன்றை நிறுவிய காவலூர் இராஜதுரை, குறுகிய காலத்தில் முன்னணி விளம்பர நிறுவனங்களுடன் போட்டியிட்டுச் சர்வதேச நிறுவனங்கள் பலவற்றுக்கும்கூட பிரதிநிதி நிறுவனமாக வெற்றிகரமாக நடத்தியவர்.

அவர் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்பும் அவரது 'வசீகரா' விளம்பர நிறுவனத்தை அவரது மகன் சிறந்த முறையில் நடத்திவருகிறார்.

காவலூர் இராஜதுரை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மூத்த உறுப்பினராகச் செயற்பட்டு வந்தவர். புலம்பெயர்ந்த பின்பு அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் மூத்த உறுப்பினராகவும் செயற்பட்டார். இச்சங்கத்தினர் அவரது பணிகளைப் பாராட்டிக் கௌரவித்துள்ளார்கள்.

'குழந்தை ஒரு தெய்வம்', 'ஒருவகை உறவு' (சிறுகதைத் தொகுதிகள்) 'வீடு யாருக்கு' (குறுநாவல்) 'விளம்பரத்துறை' - தோற்றம் - வளர்ச்சி - ஆதிக்கம் என்பன அவரது குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

அவுஸ்திரேலியா சிட்னி நகரில் குடும்பத்துடன் வசித்துவந்த அவர், ஒரு சில வருடங்களுக்கு முன்பு அன்பொழுக நீண்ட கடிதமும் தனது நூலொன்றும் எனக்கு அனுப்பியிருந்தார். 2006 -ம் ஆண்டு வெளிவந்த எனது சிறுகதைத் தொகுதி குறித்தும் சிலாகித்து எழுதியிருந்தார்.

அந்நாட்களில் தொலைபேசி மூலம் அவருடன் உரையாட முடிந்தது. பின்னர் அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தொலைபேசியில் உரையாடுவது அவருக்குச் சிரமமாகவிருக்கும் எனவும் நண்பர் முருகபூபதி சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகபூபதியுடன் தொலைபேசியில் பேசும்போதெல்லாம் காவலூரின் உடல்நலம் குறித்து விசாரித்துக் கொள்வேன். அவுஸ்திரேலியா செல்லும் போது நிட்சயம் காவலூரைப் போய்ப் பார்த்துவர வேண்டுமென நினைத்திருந்த எனக்கு, அவரது இழப்புச் செய்திதான் கிட்டியது. நண்பர் முருகபூபதி தான் செய்தி தெரிவித்தார்.

அன்பாகவும் பண்பாகவும் பழகிய அன்னாரின் இழப்பு கவலைக்குரியது. இலங்கையின் தமிழ்க் கலை இலக்கிய வரலாற்றில் அவரது நாமம் நிலைத்து நிற்கும்..!

– 15 . 10 . 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

# ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ்பெற்ற இலங்கையர் அழகு சுப்பிரமணியம்



எழுபதுகளின் முற்பகுதியில் ஓர் நாள். யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் எனது மூத்த சகோதரர் நாவேந்தனுடன் பேசியவாறு சென்று கொண்டிருந்தேன்.

எதிர்த்திசையில் நடுத்தர வயதான ஒருவர் - ஆனால் வயதானவர் போன்று ஓரளவு தளர்ந்த உடல்வாகு. மேற்கத்தைப் பாணியில் உடை. கொஞ்சம் கசங்கியிருந்தது.

அவர் நாவேந்தனைக் கண்டதும் கைகொடுத்து சில நிமிடங்கள் அன்பாகப் பேசினார். பின்னர் கையசைத்துவிட்டு வேகமாக அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியிலுள்ள 'கொழும்பு ரெஸ்ரோறன்ற்' க்குள் நுழைந்தார்.

அவர் யார் என நாவேந்தனிடம் கேட்டேன்.

"இவர்தான் அழகு சுப்பிரமணியம். சட்டம் படித்த பாரிஸ்டர். ஆங்கிலத்தில் சிறுகதைகள் எழுதி உலகப் புகழ்பெற்றவர். இங்கிலாந்திலிருந்து வந்து இங்கு வாழ்கிறார்" என்றார். பின்னர் அவர் குறித்து அதிகம் அறிந்துகொண்டேன்.

அழகு சுப்பிரமணியம் - ஆங்கில இலக்கியத்துறையில் உலகப் புகழ்பெற்ற இலங்கையர், சட்டத்துறையில் பாரிஸ்டர் பட்டம் பெற்று வழக்கறிஞராகத் தொழில் புரிந்த இவர் இலக்கியத்துறையைப் பெரிதும் நேசித்தார்.

நீண்டகாலமாக இங்கிலாந்தில் வாழ்ந்த இவர் 'இன்டியன் றைற்றிங்' என்ற காலாண்டுச் சஞ்சிகையின் இணையாசிரியராகவும் 'இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின்' இணைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியரும் விமர்சகருமான பால்ரர் அலன் - "எமது கருத்துப்படி அழகு சுப்பிரமணியம் ஓர் அற்புதமான எழுததாளராவார். இவரைப் போன்ற மிகச்சிறந்த எழுத்தாளர்களின் மூலமே மேற்குலகில் வாழும் நாங்கள் கீழைத்தேசங்களைத் தரிசிக்கிறோம். இவருடைய படைப்புகள் பெரும்பாலும் இலங்கைப் பின்னணியிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இதே போன்று ஆங்கிலேயே வாழ்க்கைப் பகைப்புலத்தில் ஆங்கிலேயர்களுக்கே சவால்விடக்கூடிய முறையிலும் இவர் சில கதைகளை எழுதியுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய இலக்கியப் படைப்புகள் யேர்மன் - பிரெஞ்சு - ரஸ்யன் மொழிகளிலும் - பல இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

'த பிக் கேர்ள்' (The Big Girl) என்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பு 1964ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு 'குளோசிங் ரைம் அன்ட் அதர் ஸ்ரோறீஸ்' (Clossing Times & Other Stories) இருவடைய மறைவிற்குப் பின்பு இவருடைய மனைவியால் வெளியிடப்பட்டது.

இவரது ஒரேயொரு நாவல் 'மிஸ்டர் மூன்' (Mr. Msoon) கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது. ஆனால் இதன் தமிழாக்கம் 'மல்லிகை'ள மாத சஞ்சிகையில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'லவ்லி டே' (Lovely Day) என்ற சிறுகதை 'மிகச்சிறந்த இந்தியச் சிறு கதைகள்' என்ற ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

'த மதமற்றிஸன்' (The Mathematician) என்ற சிறுகதை 'உலக இலக்கி யத்தின் உன்னதச் சிறுகதைகள்' என்ற தலைப்பில் 'கைடல்பேர்க்' நகரில் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1915ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 1973ம் ஆண்டு உடுப்பிட்டியில் காலமானார்.

அழகு சுப்பிரமணியத்தின் தந்தையார் புகழ்பெற்ற நீதிபதியாவார்.

அழகு சுப்பிரமணியம் சிறுகதைகளில் பன்னிரண்டு சிறுகதைகளைத் தெரிந்தெடுத்துத் தமிழில் மொழிபெயர்த்து ராஜ ஸ்ரீகாந்தன் 'நீதிபதியின் மகன்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

ஆங்கில இலக்கியத்துறையில் ஈழத்திற்குப் புகழ் சேர்த்த இவர் நாமம் இலக்கிய வரலாற்றில் அழியா இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# புகழ்பூத்த பேராசிரியர் சிவசாமி



எங்கள் குடும்ப விருட்ச விழுதொன்று சரிந்தது..!

பேராசிரியர் - கலாநிதி விநாயகமூர்த்தி சிவசாமி (08 - 11 - 2014) யாழ்பாணத்தில் காலமானார்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட சிவசாமி வரலாறு - வடமொழி இலக்கியங்களில் ஆழத் தடம்பதித்தவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்துறைப் பேராசிரியராக விளங்கியதோடு நுண்கலைத்துறையிலும் மிக்க ஆற்றல் படைத்தவராகத் திகழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்.

இவரது 'சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள்' என்றநூல் பாராட்டுப் பெற்றதாகும்.

இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினை இந்நூல் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

திராவிடர் ஆதி வரலாறும் பண்பாடும், தென்னாசிய சா ஸ்திரிய நடனங்கள் - ஒரு வரலாற்று நோக்கு, தமிழும் தமிழரும், இந்துப் பண்பாடு அன்றும் இன்றும், The Sanskrit Tradition of the Sri Lankan Tamils, Some aspects of south Asian epigraphy, Concise Sanskrit - Tamil Dictionary என்பன இவரது குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

அடக்கமும் அமைதியும் கொண்டவராக, எல்லோரோடும் கனிவாகப் பேசிப் பழகிய பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவராகக் கடமையாற்றியவர்.

பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிப் புகழ்பெற்றவர். ஆரியர் - தமிழர் வரலாறு குறித்து நூல்களை எழுதியுள்ளார். சமஸ்கிருதம், வரலாறு, நுண்கலைகள், தமிழ் இந்துப் பண்பாடு எனப் பல்துறைகளிலும் ஆய்வுகளை மேற்கொண்டவர்.

1974-ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது வரலாறு மற்றும் சமஸ்கிருத விரிவுரையாளராக நியமனம் பெற்றார். பின்னர் சமஸ்கிருதத் துறைத் தலைவராக உயர்வு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசை, நடனம் பற்றிய இவரது ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப் பட்டுக் 'கலா மஞ்சரி' என்ற பெயரில் 1983-ல் வெளியிடப்பட்டது.

இவரது ஆய்வுப் பணிகளின் பேறாக 1996-ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சமஸ்கிருதப் பேராசிரியராக இவரை நியமித்தது.

1999-ல் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

ஓய்வின் பின், வாழ்நாள் பேராசிரியர் கௌரவமும் வழங்கப்பட்டது.


பிரமச்சாரியராகவே வாழ்ந்து பணி செய்த பேராசிரியர் சிவசாமி 81-வது வயதில் யாழ்ப்பாணத்தில் உயிர்நீத்தார்.

புங்குடுதீவுக் கிராமம் பல கல்விமான்களை - புத்திஜீவிகளை, சட்டத்துறை அறிஞர்களை, எழுத்தாளர்களைப் பெற்றிருக்கிறது.

அந்த வரிசையில் ஓர் புத்திஜீவியாகத் திகழ்ந்த பேராசிரியர் சிவசாமி, அவரது பணிகளின் மூலம் மக்கள் மனங்களில் மறக்கப்பட முடியாத மனிதராக என்றும் நிலைத்திருப்பார்.

– 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்பர் குடும்த்தினருடன் நாவேந்தன்... (1964)

நிதர்சனமாகக் காண முடிகிறது. நாவேந்தன் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். த. திருநாவுக்கரசு என்பது இவரது இயற்பெயராகும்.

இவரது பேச்சாற்றலைக் கண்டு அன்று தமிழரசுக்கட்சித் தலைவர் 'கோப்பாய்க் கோமான்' கு. வன்னியசிங்கம் 'நாவேந்தன்' என்று பாராட்டினார். அன்றுதொட்டு நாவேந்தன் என்னும் புனைபெயராலேயே ஈழத்திலும் தமிழகத்திலும் நன்கறியப்பட்டவராகத் திகழ்ந்தார்.

தமது பதினைந்தாவது வயதில் 'இந்து சாதனம்' மூலம் எழுத்துத்துறையில் புகுந்த இவர் சிறுகதை, கட்டுரை, நாவல், கவிதை, விமர்சனம் எனப் பல்வேறு துறைகளில் தமது எழுத்தாற்றலைப் புலப்படுத்தியுள்ளார்.

'சுதந்திரன்' பண்ணையில் வளர்ந்த எழுத்தாளர்களுள் நாவேந்தனுக்குச் சிறப்பிடமுண்டு. சுதந்திரன் பத்திரிகையிலேயே அவரது பெரும்பாலான படைப்புக்கள் பிரசுரமாகியுள்ளன.

நாவேந்தனின் தமிழ் நடை தனித்துவமானது. கொஞ்சும் தமிழிலும் குமுறும் எரிமலை நடையிலும் எழுதும் ஆற்றல்மிக்கவராக விளங்கினார். அவர் நடத்திய 'சங்கப்பலகை' இதழில் எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனங்கள் இதற்குத்தக்க சான்றாகும். ஈழத்தில் வெளிவந்த சகல பத்திரிகைகளிலும் அவரது படைப்புக்கள் பல வெளியாகி யுள்ளன. குறிப்பாக சுதந்திரன், வீரகேசரி, தினகரன், தினக்குரல், சிந்தாமணி, இந்து சாதனம், உதயன், உதயதாரகை, சமூகத் தொண்டன், கலைச்செல்வி, நவஜீவன், விவேகி, ஈழகேசரி ஆதியாம் பத்திரிகைகளில் இவரது படைப்புக்கள் பல வெளிவந்துள்ளன.

தமிழகத்துப் பத்திரிகைகளான கவியரசர் கண்ணதாசனின் தென்றல், தென்றல் திரை, உமா, கலைமன்றம், தமிழன் குரல், மணி மொழி, சாட்டை, அறப்போர், தமிழ் சினிமா ஆகியவற்றிலும் இவரது படைப்புக்கள் பல இடம்பெற்றுள்ளன.

கவியரசர் கண்ணதாசனின் அன்புக்குப் பாத்திரமான நாவேந்தனது படைப்புக்கள் அவரது 'தென்றல்' இதழ்களில் முதற்பக்கத்தை அலங்கரித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நாவேந்தன் எழுத்தாளர் மட்டுமல்லர். தலைசிறந்த மேடைப் பேச்சாளராகவும் அரசியல்வாதியாகவும் தொழிற்சங்கவாதியாகவும் ஆளுமைமிக்க அதிபராகவும் மிளிர்ந்தவர்.


தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பீரங்கிகளில் ஒருவராகக் கருதப்பட்டவர். தந்தை செல்வா முதல் தலைவர் ஜீ.ஜீ. வரை இவரது உரைகளைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். தமிழரசுக் கட்சி நடத்திய போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டவர்.

1958 - இல் இடம்பெற்ற சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு வார காலச் சிறைத் தண்டனையையும் அனுபவித்தவர். சிறையி லிருந்து மீண்டதும் தமது சிறை அனுபவங்களைப் படம்பிடித்துக்காட்டும் வகையில் 'ஸ்ரீ அளித்த சிறை' என்னும் நூலை எழுதி வெளியிட்டவர். இந்நூல் பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. இன்றும் இன உணர்வுள்ள இளைஞர்களால் விரும்பிப் படிக்கும் நூலாக விளங்குகின்றது.

தமிழ்க்குரல், சங்கப்பலகை, நாவேந்தன், நம்நாடு ஆகிய பத்திரிகைகளை நடத்தியவர் நாவேந்தன். தமது இறுதிக் காலத்தில் இவர் படைத்த 'மகதலேனா மரியாள்' என்னும் குறுங்காவியம் இவரது புலமைத் திறனுக்கு ஏற்ற எடுத்துக்காட்டாக இலங்குகிறது. தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீனம் இதனை வெளியிட்டுள்ளது.

நாவேந்தன் 'வாழ்வு', 'தெய்வமகன்' ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளைத் தந்துள்ளார். 'வாழ்வு' இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினைப் (1964 -ல்) பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் லங்கா சித்த – ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் நாவேந்தன் சிறப்புரை.

இந்த இரு சிறுகதைத் தொகுதிகளும் 'நாவேந்தன் கதைகள்' என்னும் பெயரில் ஒரே நூலாக அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

மானவீரன் கும்பகர்ணன், சிலப்பதிகாரச் செந்நெறி, தலைவர் வன்னியசிங்கம், நான் ஒரு பிச்சைக்காரன், மாவட்ட சபைகளைப் பகிஷ்கரிப்பது ஏன்..? ஆகிய கட்டுரை நூல்களையும் பெரு நெருப்பு, மண்டோதரி, தாரை முதலான நாடக நூல்களையும் இவர் படைத்துள்ளார்.

நக்கீரன், பண்டிதர் பரசுராமமூர்த்தி, ததீஜீ, ஆம்பலூர்க் கவி அருணகிரிதாசர், மேகநாதன், தீப்பொறி, காண்டீபன் என்னும் புனைபெயர்களில் இவர் எழுதிக் குவித்தவை ஏராளம். அவற்றுள் ஒரு சிலவே நூல்வடிவம் பெற்றுள்ளன. இவரது எழுத்துக்கள் அனைத்தும் நூல் வடிவம் பெறவேண்டும். அதுவே அவருக்கு நாம் ஆற்றும் நன்றிக் கடனாக அமையும்.

சுருங்கக்கூறின் நல்லதோர் தமிழாசானாக, ஆளுமைமிக்க அதிபராக, சீரிய தொழிற்சங்கவாதியாக, மற்றாரும் போற்றும் மேடைப்பேச்சாளராகப், பன்முகத் தன்மை வாய்ந்த படைப்பாளியாக, மின்னல் வேகத்தில் எழுதிக் குவிக்கும் எழுத்தாளராக, பகுத்தறிவு வாதியாகப் பரிமளித்தவர் நாவேந்தன் எனலாம்.

அவரது நினைவு நீடிக்கட்டும்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை



நவீன சமுதாய வளர்ச்சிக்கேற்ப கலைகள் வளர்ச்சி பெற வேண்டும் - மொழி வளம்பெற வேண்டும். கால ஓட்டத்திற்கு - வளர்ச்சிக்கமைய ஒவ்வொரு மொழியிலும் நடைமுறைகள் துரிதமாகச் சாத்தியப்படுவதற்கு செயற்படுத்தப்படுவதற்கு சுருக்கெழுத்துத்துறை அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. இலங்கையிலும் சுயமொழியில் அலுவல்கள் ஆரம்பித்த காலத்தில் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தேவை அவசியமாகப்பட்டது.

தமிழ்மொழியில், தமிழகத்து மூன்று பெரியவர்கள் (எம். சீனிவாசராவ், என். சுப்பிரமணியம், பி. ஜீ. சுப்பிரமணியம்) மூவகைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கெழுத்து முறைகளை உருவாக்கித் தமிழுக்கு அணி செய்தனர். இலங்கைக்கு 1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் இச்சுருக்கெழுத்து முறைகள் எட்டவில்லை. இருப்பினும் 1951 ஆம் ஆண்டில் இலங்கை வானொலி நிலையம் ஒரு தமிழ்ச் சுருக்கெழுத்தாளரையும், இரண்டு தமிழ்த் தட்டெழுத்தாளர்களையும் நியமனம் செய்தது. இதில் ஒரு தட்டெழுத்தாளராக நியமிக்கப்பட்ட சி. இராமலிங்கமே பிற்காலத்தில் 'ஈழத்து தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை' எனப் போற்றப்பட்டார்.

தமிழகத்தில், சி. இராமலிங்கம் சுருக்கெழுத்தை நன்கு கற்றுத்தேறி யிருந்தார். அக்காலத்தில் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் பெரும் பரபரப்போடு சீர்திருத்தக் கொள்கைகளை விதைத்துக் கொண்டிருந்தது. அக்கொள்கைகளாலும் கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களின் பேச்சுவல்லமையாலும் இவர் பெரிதும் கவரப்பட்டார். அதே பாணியில் தானும் பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டார். எவரோடு பேசினாலும் அவரைத் தன்வயப்படுத்தும் திறமை கைவரப்பெற்றவர். தி.மு.க. தலைவர்கள் பலரை நேரில் சந்தித்தும் உரையாடியுள்ளார்.

1952ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசாங்க மொழிகள் கமிஷனின் மேற்பார்வையில் மருதானை ஆனந்தாக் கல்லூரியின் ஒரு பகுதியில் சிங்கள - தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு முதன்முதலாகச் சிங்களச் சுருக்கெழுத்துப் போதிப்பதற்கு ஒருவரும், தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதிப்பதற்கு சி. இராமலிங்கமும் நியமிக்கப்பட்டனர். இந்நியமனத்திற்கென தமிழில் நடத்தப்பட்ட தேர்வில் பலர் போட்டியிட்டும், வேகப் பரீட்சையில் முதன்மையானவராகத் திகழ்ந்ததின் மூலமே இவர் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனந்தாக் கல்லூரியில் தொடங்கப்பட்ட தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு 1959ஆம் ஆண்டிற்குப் பின் நிறுத்தப்பட்டது. ஆனால் யாழ். பல்தொழில்நுட்ப நிறுவனத்தில் (முன்பு கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி) சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இராமலிங்கம் இங்கும் போதனாசிரியராக அனுப்பப்பட்டார். 1974ஆம் ஆண்டு சம்மாந்துறை கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியிலும் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழில் நுட்பக் கல்லூரிகள் மூலம் ஆயிரக்கணக்கானோர் தமிழ்ச் சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி பெற்றுத் தேறினார்.

ஈழத்தில் ஒரு சிலர் ஆங்கிலச் சுருக்கெழுத்து முறையினைத் தழுவி, தனிப்பட்ட முறையில் தமிழ்ச் சுருக்கெழுத்து போதித்து வந்தபோதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்முறைகள் சிறப்படைய முடியாமல் வழக்கொழிந்து போயின. தமிழில், சுருக்கெழுத்துப் பயிற்சிக்கென ஏரம்பமூர்த்தி என்பவரும், சுன்னாகம் ஆனந்தா கலைக் கல்லூரியினரும், திருமதி மகாலெட்சுமி இராமலிங்கமும் ஒவ்வொரு சுருக்கெழுத்துப் பாடநூல்களை வெளியிட்டனர். இராமலிங்கத்தின் உறுதுணையோடு, அவரது மனைவியும் ஈழத்தின் முதல் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற மாணவியுமான மகாலெட்சுமி இராமலிங்கம் வெளியிட்ட நூலே கல்விக் கூடங்களில் சுருக்கெழுத்து மாணவர்க்கான கைந்நூலாக நிலைத்துநிற்க முடிந்தது.

'ஸிலோவன்' ஆங்கிலமுறை, 'பிட்மன்' ஆங்கிலமுறை என்பவற்றைக் கவனத்திலெடுத்து எம்மண்ணின் மொழி வழக்குக்கமைய புதிய குறியீடுகளோடு, சொல்வதெழுதற் பயிற்சிகளையும் உள்ளடக்கியதாக, எம்மொழிக்கு ஓர் அணிகலனாக இந்நூல் விளங்கியது. இராமலிங்கம் போதித்த தமிழ்ச்சுருக்கெழுத்து முறையில் பயிற்சி பெற்றோரே பாராளுமன்றம், நீதிமன்றங்கள், அரச காரியாலயங்கள் தொட்டு சாதாரண கந்தோர் வரை தமிழ்ச் சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர் களாக நிரம்பியிருக்கின்றனர்.

இவர் அறிமுகப்படுத்திய முறையினால் தமிழ்ச் சுருக்கெழுத்தின் வேகம் அதிகரித்துள்ளதை தமிழக தமிழ்ச சுருக்கெழுத்தாளரே பாராட்டினர். 'தமிழ்ச் சுருக்கெழுத்து, என் ஆசிரியரின் கண்டுபிடிப்புகளின் துணையுடன் வேகத்தில் இருமடங்கெய்தி வளம் பெற்றுள்ளது' என அன்று தேசிய அரசுப் பேரவை - அரச அறிக்கை உதவி ஆசிரியரும், இலங்கையில் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களில் அன்று உயர்பதவி வகித்தவருமான எம். ஏ. எம். முகையிதீன் குறிப்பிட்டுள்ளார்.

### வெள்ளிவிழா

1976ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் இராமலிங்கம் அவர்களின் பணியினைப் பாராட்டி வெள்ளிவிழா நடத்தப்பட்டது. அன்று யாழ். வீரசிங்கம் மண்டபம் ஈழத்து தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் - தட்டெழுத்தாளர் பொதுமக்களால் நிரம்பி வழிந்தமை பெருமைக்குரிய தாகும். சிறந்ததோர் வெள்ளிவிழா மலரும் வெளியிடப்பட்டது. எத்துறையிலும் முன்னோடிகள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் - பாராட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டு 'யாழ். ஈழநாடு' மற்றும் கொழும்புப் பத்திரிகைகள் யாவும் கட்டுரைகள், செய்திகள் வெளியிட்டன. தமிழகத் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் பலர், தி.மு.க. தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் அன்பழகன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சுருக்கெழுத்துத் தந்தை சி. இராமலிங்கம் அவர்களின் பணியினைப் பாராட்டி நடத்தப்பட்ட வெள்ளிவிழாவில் சி. இராமலிங்கம் ஏற்புரை... (1976) மேடையில் மேல்நீதிமன்ற நீதிபதி அப்துல் காதர், கலாநிதி வே. பாக்கியநாதன

புகழ்பெற்ற எழுத்தாளர் அகிலன் உட்படப் பலர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சி. இராமலிங்கம் இந்நாட்டிலே பெரும்பணி ஒன்றில் ஈடுபட்டு வந்திருக்கிறார். எத்துறையிலும் முன்னோடிகள் முழுமனதாகப் போற்றப்பட வேண்டியவர்கள். இலங்கையில் தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தையெனக் கருதப்படத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கவர் அன்பர் இராமலிங்கம், அவர் நம்மவரின் மதிப்புக்குரியவர்' - இவ்வாறு பேராசிரியர் க. கைலாசபதி அன்று குறிப்பிட்டுள்ளமை நினைவுகூரத்தக்கது.

'சுருக்கெழுத்துத் தந்தை' கல்வித் துறையினரோடு மாத்திரமல்ல, கலை இலக்கிய, பத்திரிகைத் துறையினர் உட்படப் பல்துறையினரோடு நெருங்கிப் பழகியவர். அவரவருக்குரிய மதிப்பளித்து அவர் பழகும் விதத்தினால் அவருக்கு நிறைந்த நண்பர் கூட்டம். தொழில்நுட்ப நிறுவனத்தில் அவர் தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதனாசிரியராகக் கடமையாற்றினும், அவர் அங்கு சர்வ வல்லமை கொண்ட - ஆளுமை மிக்க ஆசானாகவே மிளிர்ந்தார். இதற்குக் காரணம் என்றும் அவருக்கு மாணவர் அளித்த ஆதரவும் அன்பும் தான். அதேபோல் மாணவர் எந்த உதவி கேட்டுப் போனாலும் அவர் உதவத் தவறியதில்லை.

அக்காலத்தில் தொழில்நுட்ப நிறுவன மாணவர் சங்க விழாக்ள் கலை இலக்கிய விழாக்களாக மிளிர அவர் பக்கபலமாக நின்று உதவினார். கவிஞர்கள் சில்லையூர் செல்வராசன், புதுவை இரத்தினதுரை, லோகேந்திரலிங்கம், அன்பு ஜவகர்ஷா, நல்லை அமிழ்தன், இலங்கை வானொலி நாடகத்துறை கட்டுப்பாட்டாளர் கே.எம்.வாசகர் உட்படப் பலர் எம்மோடு விழாக்களில் கலந்து கொண்டமை ஞாபகம். கவியரங்கமானாலும் சரி, கருத்தரங்கமானாலும், பட்டிமன்றமானாலும் சரி யான் கலந்து கொள்ளும்போது அங்கு முன்வரிசையில் உட்கார்ந்து சபாஷ் போடும் என் ஆசானை எத்தனை வருடமாகிலும் மறக்க முடியாது.

அந்நியப் படை 'அமைதி' காத்த காலத்தில் நோயுற்று இருந்த 'சுருக்கெழுத்துத் தந்தை'யை மரணம் தழுவிக் கொண்டது. ஈழத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் அவரது மாணவர், புத்திஜீவிகள் மத்தியில் பெருந்துயரத்தைக் கொடுத்த அவர் மறைவு அவரது குடும்பத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

தெல்லிப்பாளையைப் பிறப்பிடமாகவும் அராலியை வாழ்விடமாகவும் கொண்ட அவர் என்றும் தமிழையும், தமிழறிஞர்களையும், மண்ணையும் பெரிதும் நேசித்தவர். மண்ணை நேசித்த அந்தக் கலைஞன், முன்னோடி என்றும் மதிப்புக்குரியவரே!

– மார்கழி, 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# எல்லோருக்கும் இனிய மனிதன் ஆர். சிவகுருநாதன்



எங்கள் வீடு ஒரு செய்தி நிறுவனம் போன்று பல்லாண்டுகள் இயங்கியது. மூத்த சகோதரர் நாவேந்தன் முதல் கடைசிச் சகோதரர் வரை எங்கள் சகோதரர்கள் யாபேருமே சுமார் நாற்பது வருடங்கள் ஒருவரைத் தொடர்ந்து ஒருவரெனக் காலத்துக்குக் காலம் பத்திரிகை, வானொலிச் செய்தியாளராகச் செயற்பட்டோம்.

நாவேந்தன் பதினாறு வயதில் வீரகேசரியில் ஒப்புநோக்காளராகச் சேர்ந்து சில மாதங்கள் கடமையாற்றிவிட்டு ஊருக்குத் திரும்பிச் சில வருடங்கள் வீரகேசரியின் நிருபராகச் செயற்பட்டார். துரைசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணர் தினகரன் நிருபராக விளங்கினார். பின்னர் அக்கா ஞானசக்தி, சிவானந்தன் அண்ணர், யான், தங்கை சரோஜினி, தம்பி தமிழ்மாறன் என எல்லோருமே காலத்துக்குக் காலம் இலங்கையிலிருந்து வெளிவந்த சகல பத்திரிகைகளுக்கும் நிருபர்களாகக் கடமையாற்றினோம்.

வீரகேசரி, தினகரன் குறூப், தினபதி குறூப், டெயிலி மிரர் -- ஈழமணி, ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, செய்தி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் யாவற்றுக்கும் எமது வீட்டு மேசையிலிருந்து விதம்விதமாகச் செய்திகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அனுப்பப்பட்டன. இந்தியச் சஞ்சிகைகளுக்கும் செய்திகள், கட்டுரைகள் அனுப்பப்பட்டன.

அக்காலத்தில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் சிறப்புடன் இயங்கியது. சமாச விழாக்கள், யாழ் முற்றவெளியில் சமாசம் நடாத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, வாணவேடிக்கை என்பன குடாநாட்டு மக்களைக் குதூகலிக்க வைத்த காலம்.

'சமூகஜோதி' 'கேற்' முதலியார் சி. தியாகராசா சமாசத்தின் தலைவராகவும் துரைசிங்கம் அண்ணர் செயலாளராகவும் கடமையாற்றினர். சமாசத்திற்கு இலங்கை வானொலியில் மாதமொருமுறை கிராமசஞ்சிகை நிகழ்ச்சியில் இடம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்நிகழ்ச்சியை மாதமொருமுறை துரைசிங்கம் அண்ணர் தயாரித்தளிப்பார். மாவட்டத்திலுள்ள சன சமூக நிலையங்களைச் சேர்ந்த கலைஞர்களுக்கு அந்நிகழ்ச்சியில் பங்குபற்றச் சந்தர்ப்பமளித்து வந்தார்.

அக்காலம் வானொலி கிராம சஞ்சிகை நிகழ்ச்சியின் பொறுப்பாளராக விவியன் நமசிவாயம் அவர்கள் கடமையாற்றி வந்தார்.

ஒரு தடவை வானொலி நிகழ்ச்சிக்கென அண்ணருடன் கொழும்பு வந்து கோட்டை வை. எம். சி. ஏ. விடுதியில் தங்கியிருந்தோம். வானொலி நிலையத்திற்குச் சென்று கிராம சஞ்சிகை நிகழ்ச்சியில் பங்குபற்றிவிட்டு வந்தோம்.

பின்னர் அண்ணர் 'லேக்கவுஸ்' செல்வோம் என அழைத்துச் சென்றார். அங்கு தினகரன் ஆசிரியர் எம்மை அன்புடன் வரவேற்று உபசரித்தார். சிறுவனான என்னோடும் அன்பாக உரையாடினார். நீயும் பத்திரிகைக்கு எழுதுகிறாயா என ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டுப் பாராட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே யான் வீரகேசரி நிருபராக (டிசம்பர் 1966) நியமனம் பெற்றேன்.

எங்கள் வீட்டிலிருந்து சகல பத்திரிகைகளுக்கும் செய்திகள் அவைக்கேற்றவாறு அனுப்பப்படுவது அப்பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தெரிந்திருந்தது. அக்காலத்தில் ஒரு பத்திரிகையின் நிருபர் மற்ற பத்திரிகைக்குச் செய்தி அனுப்புவது விரும்பத்தக்கது அல்ல. பத்திரிகை ஆசிரியர்கள் அப்படிச் செயற்படும் நிருபர்களைக் கண்டித்துவிடுவார்கள்.

ஆனால் அன்று தினகரன் ஆசிரியராக விளங்கிய சிவகுருநாதன் அவர்களோ, வீரகேசரி ஆசிரியராக விளங்கிய சிவப்பிரகாசம் அவர்களோ, அல்லது தினபதி ஆசிரியராக விளங்கிய எஸ். டி. சிவநாயகம் அவர்களோ எமது செயற்பாடுகளைக் கண்டித்ததில்லை. காழ்ப்புணர்வு கொண்ட ஒரு சிலர், பாராளுமன்ற உறுப்பினர் உட்பட எமக்கெதிராக முறைப்பாடுகள், பெட்டிசங்கள் எழுதியனுப்பிய போதிலும் அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியப் பெருமக்கள் எமது செய்திகளின் உண்மைத் தன்மை, தரமறிந்து எமது எழுத்துப் பணியை மேலும் ஊக்குவித்தே வந்தார்கள்.

யான் 'தினகரன் குறூப்' நிருபராக நியமனம் பெற்ற காலம் முதல் கொழும்பு வரும்போதெல்லாம் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன்... அவர்களைச் சந்தித்துச் செல்வது வழக்கம். அவர் மூத்த சகோதரர் போன்றே என்னை 'வா... தம்பி... வா' என வரவேற்று உபசரிப்பார். வந்ததும் முன்னால் இருக்க வைத்து நீண்ட நேரம் பலதும் பத்துமாக உரையாடுவார். அவரது நகைச்சுவை கலந்த பேச்சு சுவையாகவிருக்கும். சகோதரர்களின் உடல்நலம் - சுகம் விசாரிப்பார். இலக்கிய விடயங்கள் - சர்ச்சைகள் குறித்துப் பேசுவார். எனக்கு மிகத் தெரிந்த எழுத்தாளர்களின் நலம் விசாரிப்பார். அவரோடு பேசிக் கொண்டிருப்பது மிக மகிழ்ச்சியைக் கொடுக்கும். 'தொடர்ந்து உற்சாகமாகச் செயற்படு. செய்திகளை எழுதியனுப்பு. நல்ல வருமானமும் கிடைக்குமல்லவா...' எனக் கூறி அவர் சிரிக்கும் பாணியே தனி அழகுதான்...!

தினகரனில் எமது செய்திகள் அதிகமாகப் பிரசுரமாகும். அதிக செய்திகள் பிரசுரமாகையில், சில செய்திகளின் தலைப்பில் எமது அடையாளமாக 'புங்குடுதீவு குறூப் நிருபர்' எனப் போடாது, செய்தியின் கீழ் 'தீவுப்பகுதி நிருபர்' எனப் பொருள்பட 'தீ. நி' என அடையாளமிடப்படும். தீவுப்பகுதிச் செய்திகள், யாழ். மாவட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் மாத்திரமல்ல சிலவேளை எமக்குத் தெரிந்த கொழும்புச் செய்திகள்' கூட நான் எழுதிப் பிரசுரமாகியுள்ளன.

"செய்திகளில் திருத்தம் செய்யும் வேலை இருக்காது. தரமாக இருக்கும். அவை தெளிவான கையெழுத்தில் இருக்கும். எனவே அவை அப்படியே பிரசுரிக்கத் தக்கன" என உதவி ஆசிரியர்களுக்கும் எமது செய்திகள் குறித்து சிவகுருநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனது கவிதைகள், கதைகள், கட்டுரைகள் பலவும் புனைபெயர்களில் கூட தினகரனில் பிரசுரமாகியுள்ளன.

யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் அவர் கலந்து கொண்ட இலக்கியக் கூட்டங்கள் சிலவற்றில் எனது உரையை, கவிதையைக் கேட்டபின் மனம்திறந்து அவர் பாராட்டியமை ஞாபகத்திலுள்ளது.

அவரது நல்மனது எவராலும் என்றும் மறக்க முடியாதது. அவர் எல்லோருக்கும் நண்பர். யாழ்ப்பாணம் வந்தால் அவர் மக்கள் எழுத்தாளர் கே. டானியலுடன் நட்புரிமையுடன் பேசிக்கொள்வார். மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுடனும் அதே நட்புரிமையுடன் பேசுவார். அண்ணர் நாவேந்தன், துரைசிங்கத்துடனும் சகோதரன் போலப் பேசுவார். எல்லோருக்கும் இனியவராகவே இறுதிவரை வாழ்ந்தார்.

'பத்திரிகை உலகம்' போட்டி, பொறாமை, காழ்ப்புணர்வு மேலோங்கியது எனப் பலரும் கூறுவர். சந்தர்ப்பம் பார்த்துச் சதி செய்து, ஒருவரை வீழ்த்தித் தாம் முன்னேற வேண்டுமெனச் சந்தர்ப்பவாதிகள் காத்திருப்பர் எனக் கூறுவதுண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலையில், பத்திரிகை ஆசிரிய பீடத்தில் சுமார் நாற்பது வருட காலம் பணியாற்றியமை என்பது சாதனைக்குரியது. அந்த வல்லமை, ஆளுமை, எல்லோருடனும் நட்புடன் பழகும் தன்மை என்பன நல் மனிதனான சிவகுருநாதன் அவர்களை மக்கள் மனதில் பதிய வைத்துள்ளது.

பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவாறே பட்ட மேற்படிப்பை மேற்கொண்ட அவர், 'இலங்கையில் தமிழ்ப்புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி' என்ற பொருளில் ஆய்வு நூலைச் சமர்ப்பித்து முதுகலை மாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் தமிழ்ப்பணியாற்றியவர். இவரது பணிகளைப் பாராட்டி அரசு 'கலாசூரி' விருதினை வழங்கிக் கௌரவித்தது.

தினகரன் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறை எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்தாரென விமர்சகர்கள் குறிப்பிடுவர். சட்டத்துறையில் நுழைந்து படித்துச் சட்டத்தரணியாகவும், சட்டக் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றினார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவராக இரு தடவைகள் தெரிவு செய்யப்பட்டுப் பணிபுரிந்தார். அச்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் அவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது. சகல இன மக்களின் நன்மதிப்பையும் பெற்ற பண்பாளராக விளங்கினார்.

அவரது மறைவின்போது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஊடகத்துறையினர், எழுத்தாளர்கள், கலை இலக்கிய அமைப்புகளின் பிரதிநிதிகள், அமைச்சர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், பேராசிரியர்கள், அரசியல்வாதிகள் பலருட்பட ஏராளமான புத்திஜீவிகள் அஞ்சலி செலுத்தினர் என்பதை அறியும்போது அவர் நற்பண்புகள் புலனாகின்றன.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சிவகுருநாதன் அவர்களிடம் ஒரு அங்கதச் சாயல் புன்னகையிருந்தது. இதனை யாவரும் அறிவர். அது அவரை எல்லோருடனும் நண்பனாக வாழ வைத்தது.

அவரது படத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வைத்து மதிப்பளித்துள்ளார்கள்.

நீண்டகாலம் பத்திரிகை உலகின் மதிப்புப் பெற்ற தலைமகனாக விளங்கிய சிவகுருநாதன் அவர்கள் எம்மக்களின் மனங்களில் என்றும் நிறைந்திருப்பார்.

– 10.3.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# புத்தக வர்த்தகர், அச்சக வித்தகர் செம்மல் ஆ. சுப்பிரமணியம்



தமிழில் நூல்கள் பதிப்பித்து வெளியிட்டோ, அல்லது எழுத்தையே முழுநேரத் தொழிலாகக் கொண்டோ வெற்றி கண்டவர்கள், நல்வாழ்வு பெற்றவர்கள், பணம் சம்பாதித்துக் கொண்டவர்கள் மிகக் குறைவு. நமக்குத் தெரிந்த வரையில் 'கல்கண்டு' நிறுவன ஆசிரியர் காலஞ்சென்ற தமிழ்வாணன் ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு இலாபம் பெற்றதாக அறிந்தோம். கவியரசர் கண்ணதாசன் எழுத்தின் மூலம் இலட்சக்கணக்கில் பெற்றிருந்தாலும் இறுதிக் காலத்தில் எவ்வளவு வைத்துவிட்டுச் சென்றார் என்பது கேள்வி.

பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன், சுஜாதா, கவிஞர் வைரமுத்து போன்ற ஒரு சிலர் தான் இன்றும் உழைக்கத் தெரிந்தவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார்கள் எனலாம். வெளியீட்டுத் துறையிலும் ஒரு சில பதிப்பகங்களே நீண்ட காலமாக இயங்குகின்றன. அவற்றில் எழுத்தாளனுக்குரிய பணத்தை, நூல் விற்பனை முடிவில் முறைப்படி கொடுப்பவர் யார் என்பது கேள்விதான்.

நம் நாட்டில் தமிழையே மூலதனமாகக் கொண்டு வெற்றி பெற்றவர், அதிக பணத்தைப் பெற்றவர் என்றால் காலஞ்சென்ற 'பல்கலைவேந்தர்'சில்லையூர் செல்வராசனைக் குறிப்பிடலாம். ஆனால் அவரும் கண்ணதாசனைப் போன்று இறுதிக்காலத்தில் எவ்வளவு பணம் வைத்துவிட்டுச் சென்றார் என்பது கேள்விதான்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு பெருமகன் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனை படைத்துள்ளார். நூல்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு வருட முடிவில் அவர்களுக்குரிய பணமாக ஆயிரக்கணக்கில் அள்ளிக் கொடுத்துள்ளார். அவ்வாறு ஒரு சில வருடங்களில் பெற்ற பணத்தில் எழுத்தாளர்கள் தங்கள் பெருந்தேவைகளையே பூர்த்தி செய்துள்ளார்கள். அந்த வெளியீட்டாளர்தான் புத்தக வர்த்தகர், அச்சக வித்தகர் யாழ். சுப்பிரமணிய புத்தகசாலை அதிபர், காலஞ்சென்ற செம்மல் ஆ. சுப்பிரமணியம்.

யாழ், மத்திய கல்லூரியில் கல்விகற்றவர், குடும்ப சூழ்நிலை காரணமாக 1934இல் யாழ். சிவன் கோவில் முன்பாக இயங்கி வந்த சரஸ்வதி புத்தகசாலையில் ஒரு விற்பனையாளராகச் சேர்ந்துகொண்டார். பின்னர், 1937ம் ஆண்டு 26வது வயதில், குடும்ப நகைகளை முதலீட்டிற்கு உதவியாகக் கொண்டு ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையை ஆரம்பித்தார். அக்காலத்தில், யாழ்ப்பாணத்தில் பஸ்ரியாம்பிள்ளை புத்தகசாலை, மோசேஸ் புத்தகசாலை, சுன்னாகம் புத்தகசாலை, பருத்தித்துறை புத்தகசாலை, வண்ணார்பண்ணை சண்முகநாதன் புத்தகசாலை, நல்லூர் லலிதா விலாச புத்தகசாலை முதலான புத்தகக் கடைகள் சிறியனவும் பெரியனவுமாக நடைபெற்று வந்தன.

அன்று தனியார் பாடசாலைகள் தலைநிமிர்ந்து நிலவிய நேரத்தில் சபையார் வெளியீடுகள், திருமகள் வெளியீடுகள், வட இலங்கை வெளியீடுகள், மாக்மிலன் வெளியீடுகள், அமெரிக்க மிஷன் வெளியீடுகள், கத்தோலிக்க மிஷன் வெளியீடுகள் என்பன ஒருபுறமாயிருந்தன. முது தமிழ்புலவர் நல்லதம்பியின் ஈழவாசக வரிசையும் உலாவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் வெளியான வாகிட் பதிப்புக்கள், அப்போதிக்கரிஸ் பதிப்புக்கள், குணசேனா பதிப்புக்கள் முதலியனவும் தமிழ் நாட்டு கோபாலகிருஷ்ணகோன் பதிப்புக்கள், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கள், சென்னை சைவ சித்தாந்த சமாஜப் பதிப்புக்கள், அன்பு நிலைய வெளியீடுகள் ஹிக்கின் போத வெளியீடுகள், பாரி நிலைய வெளியீடுகள் என தமிழ், ஆங்கில, சமஸ்கிருத நூல்கள் புத்தகக் கடைகளில் நிறைந்திருந்தன. பாடசாலை நூல்களும் உபகரணங்களும் நிறைந்திருந்தன. சுப்பிரமணியத்தின் நேர்மை, நாணயம், கண்ணியம் என்னும் பண்புகளால் புத்தகசாலையின் பெயர் வியாபகமுற்றது. குடாநாட்டுக்கப்பாலும் தமிழ் பேசுமிடத்தவர் பலர் தங்கள் தேவைகளை இங்கிருந்தே பெற்றார்கள்.

எழுத்தாள நண்பர்களின் தூண்டுதலினால் பயிற்சி நூல்கள், வினா விடை நூல்கள், உரைநடை விளக்கங்கள் என்பனவற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பதிப்பித்து ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையின் பெயரால் வெளியிட்டார். அவரது நண்பர்களாய், முன்னோடிகளாய் பண்டிதர் இராசையா, பண்டிதர் நடராசா, வித்துவான் சுப்பையா பிள்ளை, வித்துவான் பொன். முத்துக்குமாரன், க. சி. குலரத்தினம் ஆகியோர் எழுத்தில் அவருக்கு கைகொடுத்தனர். ஆங்கிலம் வல்ல ஸ்ரீநிவாசன், கார்த்திகேயன் ஆகியோரும் கைகொடுத்து ஊக்குவித்தனர். மணியத்தாரின் வெளியீடுகள் பாடசாலைகள், கல்லூரிகள் எங்கும் குவிந்தன. ஆசிரியர், மாணவர் மனங்களில் இடம்பிடித்தன.

மாணவர் சூழல் வாசகம், மாணவர் சமூகக் கல்வி, இந்து சமய பாடத்திரட்டு, கணித நூல்கள் - வேக்மன், ஹோல் அன் ஸ்ரீவன், பாரதச் செல்வம், இந்து நாகரிகம், தமிழ்மொழிப் பயிற்சிகள், பாலர் பாடல்கள், சிறுவர் கவிதைகள், கதைகள் என்பன எத்தனையோ பதிப்புகள் பிரசுரமாகி இலங்கையெங்கும் விற்பனையில் சாதனை படைத்தன. சிறுவர் இலக்கிய நூல்கள் மற்றும் சில நூல்கள் இந்திய இறக்குமதி நூல்களின் விற்பனையை முறியடித்து வெற்றி கண்டன.

சுப்பிரமணியம் எழுத்தாளர்களிடம் அவர்தம் படைப்புகளை விலை கொடுத்து வாங்கிப் பதிப்புரிமையை ஏகபோகமாக்கியதில்லை. பதிலாக ஒவ்வொரு பதிப்புக்குமுரிய ஆதாயத்தைப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவார். இரப்பவர்க்கு இல்லையென்னாது உதவியவர். தினசரி அவரிடம் பலர் உதவி பெற்றுச் செல்வர். பக்திப் பழமாக, நேர்மை, நாணயம் மிக்கவராக வாழ்ந்தார். விளம்பரம் விரும்பாத தர்மவானாக அமைதியாகவே வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைவாசிகள் அதிகரித்த போதிலும், ஊழியர் ஊதியம் அதிகரித்த போதிலும் மணியத்தார் தமது சொந்த அச்சகத்தில் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டே வந்தார். சு. வேலுப்பிள்ளை, க. சொக்கலிங்கம் (சொக்கன்), சி. கார்த்திகேசு, இ. ஸ்ரீதரன், கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம், பா. சத்தியசீலன் போன்றோரின் கட்டுரைத்தொகுதிகள், இலக்கண விளக்கங்கள், செயல்முறை நூல்கள், குழந்தைப் பாடல்கள், சிறுவர் கவிதைகள் என்பன கல்வியுலகில் போதிய வரவேற்பைப் பெற்று நன்கு விற்பனையாகின.

ஆங்கிலத்தில் 'ஜென்ரில் மென் அக்கிறிமென்ற்' என்பது எவ்வித எழுத்துமில்லாமல் மனப்பூர்வமான ஓர் உடன்படிக்கையைக் குறிப்பதாகும். இத்தகைய உடன்படிக்கையே மணியத்தாருக்கும் எழுத்தாளருக்கும் இடையில் அருவமாக அமைவதாகும்.

'எத்தனையாயிரம் பிரதிகள் பதித்தீர்கள்..? என்ன வீதத்தில் எமக்கு உரிமை தருகிறீர்கள்..? என்று ஒரு நாளாவது எந்த எழுத்தாளரும் அவரைக் கேட்டதில்லை'. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவரின் எழுத்தாளன், ஐம்பத்தாறு ஆண்டுகளாக அவரின் நண்பன் இதைக் கூறினான். எழுத்தாளனுக்குரிய பணத்தை, குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாகவே வீடு தேடிச் சென்று பக்குவமாக 'எண்ணிப் பாருங்கள்' என்று கூறிக் கட்டுக்கட்டாகக் கொடுப்பது அவர் வழக்கம். இது உண்மையில் எம்மவர்க்கு ஆச்சரியத்தைத் தருவதாகும். இந்தக் காலத்தில் இப்படியும் மனிதரா..? - என வியப்பே உண்டாகும்.

'தான் கெடினும் தக்கார் கேடு எண்ணற்க' என்பது தமிழ்ப்பண்பாடு. மணியத்தார் பண்பாட்டுக் கொடி படரும் கொழுகொம்பாக வாழ்ந்தார்.

முதுமையிலும் தம் கடமைகளை ஒழுங்காகச் செய்து வந்த காலத்தில் 06. 02. 1992ல் (81வது வயதில்) மரணம் அவரைத் தழுவிக் கொண்டது. கற்றறிந்த பெரியோர், ஆசிரியர், மாணவர், தமிழ்ச் சான்றோர், தாயகப் பற்றாளர் கலங்கினர். செம்மல் சுப்பிரமணியம் புகழ் போற்றினர்.

'கொள்வதும் மிகுதி கொள்ளார் கொடுப்பதும் குறைக்கார் - பண்டக்
கொள்விலை சொல்லி விற்று லாபமும் அதிகம் கொள்ளார்
தெள்ளிய மனத்தினோடே சேர்ந்தவர்க் கினிமை செய்தார்
வள்ளன்மை புகழை வேண்டா வழியினில் நிகழ்த்தி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாருங்கள் மாஸ்டர் உங்கள் புத்தக வகையாற் காசு
சேருதற் குண்டு சற்றே இருங்கள் நான் கணக்குப் பார்த்துச்
சீருறத் தருவேன் என்று முகமலர்வோடு சொல்லிக்
கோருதற் கிடமேயின்றிக் கொடுப்பதற்கினியார் உள்ளார்'.

இவ்வாறு தமிழறிஞர் சொக்கன், சுப்பிரமணியத்தை நினைவு கூர்ந்தார். வாழ்வாங்கு வாழ்ந்த செம்மல் சுப்பிரமணியம் உண்மையில் தமிழ்த்தொண்டு செய்தோர் வரிசையில் வைத்து மதிக்கப்பட வேண்டியவரே..!

– 05. 02. 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

# மருத்துவக் கலையில் இலக்கியத் தமிழ் கண்ட வித்தகன் விஸ்வபாரதி

அன்று அறுபதுகளில், நாட்டில் வடபகுதி எங்குமுள்ள பெரிய பாடசாலைகளின் நூல் நிலையங்களில் ஒரு சஞ்சிகை கட்டாயம் இடம்பெற்றிருக்கும். அறிவியல் சஞ்சிகையான அதனைக் கட்டாயம் வாசியுங்கள் என ஆசிரியர்கள் கூறுவார்கள். பின்னர் எழுபதில் அரசு மாறிய பின்னர் 'தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் நச்சு இலக்கிய ஆபாசக் குப்பைகளைத் தடை செய்யுங்கள்' என்ற கோஷம் உரக்கக் கேட்டது. அதற்கமையச் சில சஞ்சிகைகள் தடை செய்யப்பட்டன. பல சஞ்சிகைகள் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் அறிவியல் சஞ்சிகையென எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'கலைக்கதிர்' சஞ்சிகையின் இறக்குமதி அதிகரித்தது. கல்லூரிகள், நூல்நிலையங்கள் எங்கும் அது இடம்பெற்றது. ஆசிரியர்கள், மாணவர்கள், கலை இலக்கியத்துறையினர் எனப் பல்துறையினரும் அதனை விரும்பி வாசித்தனர்.

புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்கள், பல்துறைப் பட்டதாரிகள், ஆய்வாளர்களின் கட்டுரைகள் கலைக்கதிரில் இடம்பெறும். தமிழகத்து தரமான இலக்கியச் சஞ்சிகைகளில் எமது எழுத்தாளர்களின் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகள் அன்று இடம்பெற்றாலும் கலைக்கதிரில் எம்மவரின் படைப்புகள் இடம்பெறவில்லையே என்று நான் நினைத்ததுண்டு.

பின்னர் ஒரு நாள் (ஜுன் 1979) கலைக்கதிர் சஞ்சிகையைப் பார்த்த எனக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் ஏற்பட்டது. சஞ்சிகையோடு என் மதிப்புக்குரிய மருத்துவ ஆசானின் நண்பனின் வைத்தியசாலையை நோக்கிச் சென்றேன். என் நண்பன் விஸ்வபாரதியின் (வி. க. விஸ்வலிங்கம்) 'மருத்துவக் கலையில் இலக்கியத் தமிழ்' என்ற ஆய்வுக் கட்டுரை அதில் அழகுறப் பிரசுரமாகியிருந்தது.

கட்டுரை நன்றாகப் பிரிசுரிக்கப்பட்டிருக்கிறது என்று பாராட்டினேன். 'உனக்கும் அதில் பெருமை தானே' என்றார். கையெழுத்துப் பிரதியாய் அதனைப் பார்த்துப் பாராட்டி, சிறந்ததோர் சஞ்சிகைக்கோ, பத்திரிகைக்கோ அனுப்புங்கள் என்று சொன்னது ஞாபகம் வந்தது.

கலைக்கதிர் ஆசிரியர் எழுதியிருந்த கடிதத்தை எடுத்து வந்து வாசிக்கத் தந்தார். சித்த மருத்துவத்துறையில் இவரது ஆழ்ந்த புலமையையும், ஆய்வுத் திறனையும், எழுத்துவன்மையையும் பாராட்டியிருந்த கலைக்கதிர் ஆசிரியர், தொடர்ந்து எழுதுமாறும் அதற்கெனச் சன்மானம் உண்டெனவும் குறிப்பிட்டிருந்ததாக ஞாபகம். தொடர்ந்து இவரது பல ஆய்வுக் கட்டுரைகள் கலைக்கதிரில் இடம்பெற்றன. ஈழத்து ஒரு சித்த மருத்துவன் இத்தகைய ஆய்வுக் கட்டுரைகளைக் கலைக்கதிரில் எழுதி வந்தமை பாராட்டுக்குரியது எனப் பலர் வாழ்த்தினர்.

'மல்லிகை'யோடு விஸ்வபாரதியின் வைத்திய நிலையத்திற்கு வரும் எழுத்தாளர் டொமினிக் ஜீவா அங்கு இலக்கியக் கலந்துரையாடல் நடத்திவிட்டே செல்வார். மருத்துவ ஆலோசனைக்காக அங்குவரும் 'மக்கள் எழுத்தாளர்' கே. டானியலை அன்போடு இருத்தி அவரிடம் 'பஞ்சமர்' நாவல் முதல் செங்கை அழியானின் 'பிரளயம்', ஞானரதனின் 'புதிய பூமி' நாவல்கள் வரை அங்கமங்கமாகக் கருத்துக் கேட்பார். வடபகுதியின் சமூக வரலாற்றுப் போராட்டங்களின் உண்மைத் தார்ப்பரியங்களை உற்றுக் கேட்பார்.

யாழ். 'ஈழநாடு' ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த எஸ். எம். கோபாலரத்தினம், சபாரத்தினம், பெருமாள் உட்பட பலரும் நிர்வாக பீடத்தைச் சேர்ந்த சிலரும் விஸ்வபாரதியின் உற்ற நண்பர்கள். மாலைவேளைகளில் ஈழநாடு ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த ஒருவரை யாவது அவரது வைத்தியசாலையில் காணலாம். அன்று வெளிவந்த ஈழநாடு செய்திகள், கட்டுரைகள் சம்பந்தமாக அலசல் நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாட்டில் மருத்துவ, இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள் பல விஸ்வபாரதி எழுதி வந்தார்.

ஈழநாடு பத்திரிகையில், பல நாட்கள் தொடர்ந்து வடபகுதியைச் சேர்ந்த ஒரு தொழில் அதிபரின் பெயர் பல பக்கங்களிலும் புகழ்ச் செய்தியாக பிரசுரமாகி வந்தது. ஒரு நாள் மாலை ஈழநாடு ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் 'முக்கியமான விஷயமொன்று' என்று சொல்லியவாறு விஸ்வபாரதியிடம் வந்தார். 'என்ன செய்தி சொல்லுங்கோ' என்றார் விஸ்வபாரதி. அருகில் யான் கேட்டுக் கொண்டு நின்றேன். 'இன்று காலை ஈழநாட்டிற்கு ஒரு 'போஸ்ற் கார்ட்' வந்தது. அது அங்கு பெரிய சலசலப்பையும், ஒரு கட்டளையையும் பிறப்பிக்க வைத்துவிட்டது' என்றார்.

'அதென்ன போஸ்ற் கார்ட்...' 'யாரோ இலக்கியத்துறை சம்பந்தமானவன் தான் எழுதியிருக்க வேணும்... சின்ன வாக்கியம்... அத்தனை காரம்...' 'என்ன வாக்கியம்..?' என்ன வர... வர... ஈழநாட்டில் சவர்க்கார வாசனை வீசுகிறது. சவர்க்காரத்தைக் கைகழுவி விடுவது போல மக்கள் ஈழநாட்டையும் கைகழுவிவிட்டால்... கொஞ்சம் கவனம் எடுங்கள்...' இதுதான் வாக்கியம். நாங்கள் எல்லோரும் வாசித்து நிர்வாகத்திற்கும் அது போய்விட்டது. விளம்பரமாக வேண்டுமானால் அவர் பெயர் இடம்பெறட்டும் எனச் சொல்லப்பட்டது. தனிநபர் புகழ்பாட அனுமதிக்க முடியாது. அதனைச் சுட்டிக்காட்டிய அந்த 'ஈட்டி'க்கு நன்றி தான் சொல்ல வேண்டும் என நிர்வாகம் பேசுகிறது...'

நாங்கள் மனதுக்குள் சிரித்துக் கொண்டோம். ஏனெனில் ஈழநாட்டின் தரம் தாழக்கூடாதென 'ஈட்டி' என்ற பெயரில் அதை எழுதியதே விஸ்வபாரதி தான். எனக்கு மாத்திரமே அது தெரிந்திருந்தது.

'ஏதோ நல்ல காரியம் தானே நடந்திருக்கிறது...' என்றார் விஸ்வபாரதி. 'ஓமோம்' என்றவாறு உசாராக நடந்தார் அந்த ஆசிரியப் பீடத்தைச் சேர்ந்த பெரியவர்.

இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி யாழ். லங்கா சித்த, ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியாகும். இங்கு ஆரம்ப காலத்தில் இந்திய மருத்துவர்கள் கூடக் கடமையாற்றியுள்ளனர். இங்கு சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்களில் ஒருவர் 'இராச வைத்தியர்' வி. கனகசபை. இவரது இளைய புதல்வரே விஸ்வலிங்கம் (விஸ்வபாரதி) ஆகும். தந்தையாரின் அடிச்சுவட்டில் யாழ். சித்த - ஆயுர்வேதக் கல்லூரியிலே கற்று, திறமைச் சித்திபெற்று அங்கேயே விரிவுரையாளராக நியமனம் பெற்றவர் விஸ்வபாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். சித்த - ஆயுர்வேதக் கல்லூரிக்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட கம்பஹா ஆயுர்வேதக் கல்லூரி அரசின் சகல உதவிகள்-நன்கொடைகளுடன் பெரும் ஸ்தாபனமாக மிளிர, யாழ். சித்த - ஆயுர்வேதக் கல்லூரி அரசின் எவ்வித உதவியுமின்றி அல்லாடுவதையிட்டு விஸ்வபாரதியும் தமிழ் மருத்துவ அபிமானிகளும் பெருங்கவலை கொண்டிருந்தனர். வடபகுதியில் அன்று மாணவர் போராட்டங்களுக்கும், நிர்வாக மோதல்களுக்கும் பெயர் பெற்றது யாழ். சித்த ஆயுர்வேதக் கல்லூரியாகும்.

யாழ் - ஈழநாடு பத்திரிகையின் முற்பக்க தலைப்புச் செய்தியாக அன்று ஒரு நாள் இடம்பெற்ற வைத்தியக் கல்லூரி ஊர்வலம் இன்றும் எனக்கு ஞாபகம். எத்தகைய போராட்டங்களின்போதும் விஸ்வபாரதி மக்கள் பக்கமும், மாணவர் பக்கமும், நியாயமான கோரிக்கைகளின் பக்கமுமே நின்றார். விஸ்வபாரதியிடம் நிறையவே கற்றுக் கொண்ட யான், கல்லூரி நிர்வாகம் சம்பந்தமான விடயத்தில் சிறிது காலம் முரண்பட்டு நின்றதுமுண்டு. பின்னர் ஒரு தடவை இதுகுறித்து விஸ்வபாரதி எனக்கு எழுதிய கடிதம் கல்மனதையும் கரைக்க வல்லது. இலக்கியத் தரமுள்ளது. அக்கடிதம் இன்றும் ஊரில் என் வீட்டில் உறக்கத்தில் இருக்கிறதோ தெரியவில்லை.

அன்று புகழ்பெற்று விளங்கிய 'அகில இலங்கை சித்தவைத்திய சங்கத்தின் இணைச் செயலாளராகவும் விஸ்வபாரதி கடமையாற்றியுள்ளார். எழுத்தாளர் நாவேந்தன் பொதுச் செயலாளராக விளங்கிய 'இலங்கை இலக்கிய இரசிகர் சங்கத்தின், தலைவராகவும் விஸ்வபாரதி விளங்கினார்.

'அன்று மன்னனுக்கு அடுத்த மரியாதை மருத்துவனுக்கு இருந்தது. யாழ்ப்பாண இராச்சியத்திலும் இந்த மரியாதை அன்று இருந்தது. மன்னனைப் போல சிவிகையில் போய்வரும் மதிப்பு மரியாதை மருத்துவனுக்குக் கிடைத்தது. எம் இறைவனுக்கு வைத்தீஸ்வரன் என்ற நாமம் உண்டு. அவன் பிறவிப் பிணி நீக்கி அருள்பவன். வைத்தியன் உடல் உளப் பிணி நீக்குபவன். அதனால் தான் இறைவனுக்கு அடுத்ததாக மருத்துவனை மக்கள் மதிக்கிறார்கள். நோயுற்றவனுக்குமருத்துவனே கண்கண்ட கடவுள்'.

இவ்வாறு தொடங்கி நாடி சாஸ்திரம் வரை என் தந்தை கூறக் கேட்டும், பல சித்த மருத்துவப் பாடல்களின் உண்மைப்பொருள் என்ன என்பது குறித்தும் என் தந்தையோடு விஸ்வபாரதி தர்க்கிப்பதையும் பலமுறை பார்த்து யான் வியந்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேச மருத்துவத்தில் ஆழ்ந்த புலமையும், ஆராய்ச்சிகள் மூலம் அதனை நன்கு வளர்த்தெடுக்க வேண்டும் என்ற பேரவாவும் கொண்டு நூற்றுக்கணக்கான மருத்துவ மாணவர்களை வளர்த்தெடுத்த விஸ்வபாரதியை பிற்காலத்தில் இனந்தெரியாத சோகம் கவ்விக் கொண்டது. நாட்டு நிலைமையும் இதற்கொரு காரணமாயிற்று.

ஏட்டில் இருந்த மருத்துவ முறைகள் பலவற்றை நாட்டிற்கு உதவும்படி செய்த என் ஆசான் - நண்பனை இளம் வயதில், 1982 ஆவணியில் (39 வயதில்) மரணம் தழுவிக் கொண்டமை எவராலும் சகித்துக் கொள்ள முடியாதது.

மருத்துவ, கலை இலக்கியம், பத்திரிகை, அரசியல்துறையினர் உட்படப் பெருந்தொகைப் பொதுமக்களும் அவரது இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அவரது நண்பர் பலரும், பொதுமக்கள் பலரும் மயானத்தில் கதறியழுதமை எவரையும் உருகிட வைத்தது. பத்திரிகைகள் அஞ்சலிக் கட்டுரைகள் பிரசுரித்தன. ‘மல்லிகை’ சஞ்சிகை மனதை உருக்கும் அஞ்சலிக் கட்டுரை வெளியிட்டதெல்லாம் ஞாபகம்.

இறுதிவரை தன்னலம் கருதாது மண்ணையும் மக்களையும் நேசித்த, மருத்துவப் பணிபுரிந்த, எத்தனையோ சித்த மருத்துவர்களை உருவாக்கிய பண்பாளன், வித்தகன் விஸ்வபாரதி என்றும் மதிப்புரிக்குரிய மனிதனே!

– ஆவணி 1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# தொண்டுக்கு ஒரு 'திரு'



ஒரு நாள் பகல் பதினொரு மணிக்குமேல் என நினைவிருக்கிறது. என் கிராமமான புங்குடுதீவில் என் வீட்டிற்கு அண்மையிலுள்ள ஒழுங்கையில் சென்று கொண்டிருந்தேன். எனக்கு அப்போது பதினைந்து வயதிருக்கும். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நான் விடுமுறையில் வீடு வந்திருந்த நேரம். ஆவணி மாத வெயில் தகிப்பேறிக்கொண்டிருந்தது. அந்த வெயிலுக்குள் ஓர் உருவம் ஒழுங்கையில் அமர்ந்து கற்கள் பரவிக் கொண்டிருந்தது. யாரென அடையாளம் கண்டுகொண்ட எனக்கு அதிர்ச்சி. 'என்ன அண்ணை... கிராமசபை செய்ய வேண்டிய வேலையை நீங்க செய்து கொண்டிருக்கிறீங்க... இந்த வெய்யிலுக்குள்ள..' என நான் கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தம்பி... இந்த ஒழுங்கைக் கரையில கல்லுக் கொண்டுவந்து போட்டு எத்தனையோ நாளாப் போச்சு... அது சிந்திச் சிதறி போற வாற ஆட்களின்ர காலில் குத்துது... அதுதான் கொஞ்சம் கல்லைப் ப... ிடுவம் எண்டு பாக்கிறன்... பிறகு யாரையும் பிடிச்சு கொஞ்சம் ஊரி கொ... ண்டுவந்து போட்டா போக்குவரத்துக்கு நல்லா இருக்கும் தானே...' என்... அவரது வார்த்தைகளும் செயற்பாடும் என்னுள் எத்தனையோ சிந்... அலைகளைப் பரவி நின்றன.

...ர், புங்குடுதீவு கிராமசபை அங்கத்தவராக, கிராமசபைத் தலை... ளை உருவாக்கும் சக்திமிக்கரவாக, நாடகக் கலைஞனாக, சிறந்த ...பச்சாளனாக, தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பீரங்கியாக, அதன் வாலிப முன்னணிப் பொதுச் செயலாளராக, சர்வோதய சிரமதான சங்கத்தின் உபதலைவராக, சர்வோதய அமைப்பாளராக, பத்திரிகையாளனாக, இதுவரை எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் வடபகுதிக்குச் செய்த அபிவிருத்திப் பணியிலும் பார்க்க பன்மடங்கு பணியினை எந்தவித பிரச்சாரமுமின்றி அமைதியாகவிருந்து செய்தவர்.

இம்மண்ணைவிட்டு அகலாது தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த 'தொண்டர்' க. திருநாவுக்கரசு.

அறுபதுகளில் 'புங்குடுதீவு இளைஞர் கழகம்' பல்வேறு பணிகளில் வீறுநடைபோட்டது. மலேசியாவிலிருந்து நாடு திரும்பியிருந்த 'நல்ல மனிதர்' வே. க. சோமசுந்தரம் இதன் தலைவராயிருந்து நற்பணிகள் யாவற்றுக்கும் உதவி ஊக்கமளித்தார். இளைஞர்களை ஒன்றிணைக்க உந்துசக்தியாக விளங்கினார் ஆசிரியர் சி. காராளபிள்ளை. இதன் செயலாளராகச் செயற்பட்டவர் கவிஞர், நல்ல கலைஞன் எனப் புகழ்பெற்ற ஆசிரியர் ஐ. சிவசாமி.

சிவசாமியின் கதை வசனம், இயக்கத்தில் அன்று ஒரு நாடகம் உருவானது. அந்நாடகம் அன்று யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை நாடகப் போட்டியில், பல்வேறு புகழ்பெற்ற நாடகாசிரியர்களின் நாடகங்களுடன் போட்டியிட்டு முதற்பரிசினைப் பெற்றுக் கொண்டது. 'வாழ்வுப்பலி' என்ற அந்நாடகத்தில் பிரதம வில்லன் வேடத்தில் சிறப்பாக நடித்து மக்கள் மனங்களில் இடம்பிடித்தார். திருநாவுக்கரசு. அந்நாடகத்தில் கதாநாயகனாகச் சிறப்பாக நடித்து 'ஈழத்து சிவாஜி' என அன்று பலராலும் புகழப்பட்டவர். தமிழும் சைவமும் கண்களெனக் கொண்டு இன்று கனடாவில் வாழும் புலவர் ஈழத்துச் சிவானந்தன்.

இளைஞர் கழகத்தின் பொதுச் செயலாளராகத் தெரிவாகிய, 'திரு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுநேரமும் மக்கள் பணிகளில் ஈடுபட்டுழைத்தார். புங்குடுதீவு கிராமசபை அங்கத்தவரானார். இவரது ஆதரவு பெற்றவர்களே கிராமசபைத் தலைவராக முடிந்தது. நற்பணிகளுக்கு உதவுபவர் என புகழப்பட்ட செல்வந்தர் 'கலைவாணி' தம்பித்துரையைக் கிராம தலைவராக்க முன்னின்றுழைத்து வெற்றிகண்டார். அவர் ம் கிராமத்தில் பல நற்பணிகளை நிறைவேற்றினார். அதி ற்று நல்லதோர் நூல் நிலையம் உருவாக்கப்பட்டதாகும்.


புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ாக தெரிவு செய்யப்பட்ட 'திரு' அங்கு ஊழலற்ற நிர் த்தை நடாத்த வழிகாட்டினார். தமிழரசுக் கட்சியின் வாலிப மு ணிச் செயலாளரான அவர் பிரச்சாரத்திற்காகச் சென்றுவராத கிராம ளே தமிழர் பிரதேசத்தில் கிடையாதெனலாம். தலைவர்களின் முழு நம்பிக்கைக்குரிய செயல்வீரனாக, சிறந்ததோர் உணர்வூட்டும் பேச்சாளனாகத் திகழ்ந்தார். பாரதிதாசனின் கவிதை வரிகளை வீரவுணர்வோடு ஈற்றில் சொல்லிச் சொற்பொழிவை அவர் முடிக்கையில் கேட்டவர்கள் உணர்ச்சிப் பிழம்பாகிக் கைதட்டுவர்.

காலவோட்டத்தில் அரசியல்பாதை அவருக்குக் கசந்தது. அன்று 'தமிழாசிரியர் சங்க'த் தலைவராகத் திகழ்ந்த ஆசான் கு. வி. செல்லத்துரை அவர்களின் ஆலோசனைகள், வழிகாட்டல் திருவுக்கு அபிவிருத்திப் பணிகளில் முழுநேரமும் ஈடுபடத் திடத்தைக் கொடுத்தன. யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை ஊர்க்காவற்றுறைத் தொகுதி உறுப்பினராகப் பின்னாளில் தெரிவு செய்யப்பட்ட வே. க. சோமசுந்தரம் திருவின் பணிகளை ஊக்கப்படுத்தி வந்தார். இவர்கள் மீது திரு பெருமதிப்பு வைத்திருந்தார். சாமி தம்பு அவர்கள் யோகாப்பியாசம், தியானம் என்பன குறித்து திருவுக்கு பெரிதும் அறிந்துகொள்ள உதவினார். யோகசுவாமி ஆச்சிரமத் தொடர்பும் அங்கு பணியாற்றும் சுவாமிகளின் ஆசிகளும், வாழ்த்துக்களும் திருவின் உள்ளத்தை செம்மையாக்கின. இல்லறவாழ்வை ஒதுக்கி பிரம்மச்சாரியாகவே பணிகளைத் தொடர்ந்தார். வித்துவான் பொன். அ. கனகசபை, பண்டிதர் சரவணனார் ஆகியோர் திருவின் தமிழறிவு வளரவும் பணிகள் சிறக்கவும் ஊக்கம் கொடுத்து வந்தனர்.

அகில இலங்கை சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரெத்தினாவின் தொடர்பு திருவின் பணிகளுக்குப் பெரிதும் கைகொடுத்தது. அ. இ. சர்வோதய சிரமதான சங்கத்தின் உபதலைவராக திரு தெரிவானார். பலமுறை ஆரியரெத்தினாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடபகுதிக்கு அழைத்து, ஏழை மக்களின் வாழ்வையும், அபிவிருத்தி செய்ய வேண்டிய பகுதிகளையும், அதன் அவசியத்தையும், அரசின் புறக்கணிப்பையும் அவருக்குத் தெளிவுபடுத்தினார். வெளிநாடுகளிலிருந்து அபிவிருத்திப் பணிக்கென ஆரியரெத்தினா பெற்றுக் கொள்ளும் பணத்தில் வடபகுதிக்கென வருடந்தோறும் இலட்சக்கணக்கான ரூபாய்களை உரிமையோடு வாதிட்டுப் பெற்று வடக்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தினார்.

வடபகுதியெங்கும் சர்வோதய மலிவுவிலைக் கடைகள், குடிநீர் பற்றாக் குறையுள்ள இடங்களுக்கு குடிநீர் விநியோகம், ஆங்காங்கே சர்வோதய நூலகங்கள், கிளிநொச்சி, மன்னாரில் விவசாயப் பண்ணைகள், வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவித்து விதைகள் விநியோகம், பஞ்சம் ஏற்படினும் அஞ்சாமல் வாழவென முருங்கை, சிறுதானியங்கள் விநியோகம், தேவையேற்படும் இடமெங்கும் தொண்டர்கள் சேவை, போக்குவரத்துக்கு வசதியாக வீதிகள், ஒழுங்கைகள் அமைத்தல், அழகுபட அவற்றை விசாலித்தல், மழை வீழ்ச்சியைக் கருத்தில் கொண்டு மரங்கள் நாட்டல், உவர்நீர் கிராமங்களில் புகுந்து விவசாயத்தைப் பாதிக்கா வண்ணமும் குடிநீர் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், கடல்நீர் கிராமங்களுக்குள் புகாவண்ணம் பாரிய அணைகள் அமைத்தல், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வீடுகள் தோறும் தொண்டர்கள் மூலம் நூல்கள் விநியோகித்தல், பாலர் பாடசாலைகள் அமைத்தல், சுகாதார நிலையங்கள் அமைத்தல், தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்தல், சுதேச வைத்திய நிலையங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தல், தமிழறிவை வளர்க்கவும், பழைய அருமையான நூல்களை பதிப்பித்து வெளியிடவும், கலை இலக்கியப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழ்ச் சங்கங்கள் அமைத்தல், சிறு கைத்தொழில்களை ஊக்குவித்து உதவுதல், இப்படி எத்தனையோ ஆக்கப்பணிகளால் திரு தொண்டுக்கு ஒரு முன்னோடியானார்.

'தபால்பெட்டியை ஏன் அங்கு வைக்கவில்லை. இந்த ஆசிரியரை ஏன் இடமாற்றம் செய்யவில்லை. அந்தக் கிராமசபையைக் கலைத்துவிட வேண்டும். இந்தப் பாடசாலைக்கு இவரையே அதிபராக நியமிக்க வேண்டும்'. இப்படியான பெரும்பணிகளில் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்று பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் எழுப்பி அயராது ஈடுபட்டுழைக்க, தொண்டர் திரு அமைதியாக ஆர்ப்பாட்டம் எதுவுமேயின்றி காலத்தில் அழியாத பெரும்சேவையை எம்மக்களுக்குச் செய்தார். ஊழல் பெருச்சாளிகளுக்குச் சிம்ம சொர்ப்பனமாகவும் வெறும் வாய்வீச்சுக்காரர்களுக்கு வேண்டா மனிதராகவும் திகழ்ந்தார். செயல்... செயல்... தொண்டு... சிரமதானம்... இதுவே அவர் மூச்சு.

ஆரியரெத்தினாவுடன் ஐரோப்பாவில் எண்பதுகளில் சுற்றுலாச் செய்தார். வெளிநாட்டவரின் ஊக்கம், உழைப்பு, வளர்ச்சி என்பவற்றைக் கவனித்துவந்து தொண்டர்களுக்கு எடுத்துரைத்தார். வெளிநாடுகளில் எம்மக்கள் உழைக்கும் கடின உழைப்பை எம் தாய் நாட்டில் செய்தால் நாம் சொந்தக் காலில் எழுந்து நிற்க முடியுமெனத் தொண்டர்களுக்கு விளக்கமளித்தார்.

பல மாதங்களுக்குப் பின்.

கொழும்பிலிருந்து எம் கிராமத்திற்கு அன்றொரு நாள் காரில் வந்திருந்த என் நண்பர் திகைப்புடன் என்னிடம் கேட்டார்.

'வேலியின் ஒரு கதியால் தடி தள்ளி நடுகின்ற பிரச்சனைக்காக பெரிய கோட்டில் இருபது வருஷங்கள் வழக்காடிற எங்கட ஆக்களின்ர வேலியெல்லாம்ள வெட்டி எப்பிடி இந்த மாதிரி றோட்டு வந்தது... ஒவ்வொரு ஒழுங்கையும் பட்டினத்துப் பெரிய றோட்டு மாதிரிக் கிடக்குது... என்றார்.

'எல்லாம் தொண்டர் திருவின் பணியே' என்றேன்.

'எப்பிடிச் சனம் விட்டுக்குடுக்குது...' என்றார்.

'எல்லாம் சாம பேத தான தண்ட உபாயங்களைப் பயன்படுத்தித் தான் திரு சாதித்தார்' என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளிலிருந்து அபிவிருத்திக்கெனப் பெறப்பட்ட பணத்தில் வடபகுதிக்குரிய தொகையைத் தொடர்ந்து வழங்க மறுத்தமை, திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றங் களுக்குச் சர்வோதயம் வழங்கும் உதவி, திருவினாயே அறிமுகப் படுத்தப்பட்ட சிலரின் காட்டிக்கொடுப்பும் நம்பிக்கைத் துரோகமும், ஆரியரெத்தினாவின் கண்ணோட்டம் என்பன போன்ற பல பிரச்சனைகளால் திருவுக்கும் ஆரியரெத்தினாவுக்கும் இருந்த தொடர்பு தடைப்பட்டது. முறிந்தே போயிற்று.

சர்வோதயம் என்ற பெயரில் தனித்துவமாகத் தொடர்ந்து இயங்கினார். வெளிநாடுகளிலிருந்து பல்வேறு உதவி பெற்று பணிகளைத் தொடர வாய்ப்பிருந்தது. ஆனால் ஸ்ரீலங்கா அரசின் தொடர் நடவடிக்கைகளினால் அவை சாத்தியமற்றுப் போயின. தீவுப்பகுதிக்குள் ஆக்கிரமிப்பு இராணுவம் புகுந்ததும் அவரின் பணிகள் முடங்கின. யாழ் சிவதொண்டர் நிலையம், கொழும்புத்துறை யோக சுவாமிகள் ஆச்சிரமம் ஆகியவற்றோடு இணைந்து யாழ்ப்பாணத்தில் திருவின் பணிகள் தொடர்வதாகவும் புங்குடுதீவிலும் தொண்டர்கள் சிலர் செயற்படுவதாகவும் செய்தியொன்று கிடைத்தது.

'தீவகம்' பத்திரிகை பணிகளில் திருவுடன் செயற்பட்ட காலத்தில் அவரது எழுத்தாற்றலைக் கண்டு வியந்திருக்கிறேன். அவரது சிபாரிசுடன், நேர்முகப் பரீட்சையில் தோற்ற பலரையும் வென்று ஐக்கிய நாடுகள் தொண்டராக (மூலிகை மருத்துவ, சமூக அபிவிருத்திப்பணி) தெரிவு செய்யப்பட்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் பணிபுரிந்ததும், அங்கு யான் பெற்ற பாராட்டுக்களை அறிந்ததும் மகிழ்வோடு, அறிவுரைகள் பொதிந்து அவர் எழுதியவையும், நோர்வே தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழா மலரை அழகுறப் பதிப்பித்துக் கொடுக்கும் பணியில் திருவுடன் செயற்பட்டமையும், கிளிநொச்சி-திருவையாறு விவசாயப் பண்ணையை உருவாக்க அன்று யானைக் காட்டில் திருவோடும் மற்றும் தொண்டர்களோடும் கழித்த நாட்கள் எல்லாம் மறக்க முடியாதவை.

மெழுகுதிரியானது உருகி உருகி உலகுக்கு ஒளி கொடுப்பதைப் போல சமுதாய சேவையில் தன் உடல் நலத்தையும் பொருட்படுத்தாது வாழ்நாள் முழுதும் தொண்டாற்றிய திரு 03. 10. 2001இல் இவ்வுலகை நீத்தார் என்ற செய்தி எம் நெஞ்சையெல்லாம் கலங்க வைத்தது. அந்தத் திருமுகம் இன்று எம்மிடை இல்லை. ஆயினும் உண்டு. அவன் செய்த திருத்தொண்டுகள்-அளப்பரிய பணிகள். இன்றும் சரி இனிமேலுந்தான்..!

– ஐப்பசி 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# ‘முகத்தார்’ யேசுரட்ணத்தின் கலைப் பயணம்



இலங்கையில் அன்று 1970களில் வீடுகள் தோறும் வானொலிப் பெட்டிக்கருகில் மக்களை ஈர்த்த நிகழ்ச்சிகளில் ஒன்று ‘முகத்தார் வீடு.’

விவசாயத் திணைக்களத்தின் நிகழ்ச்சியில் இடம்பெற்று வந்த ‘முகத்தார் வீடு’ நாடகம் கேட்பவர் எல்லோரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

பல மாதங்கள் வானொலியில் இடம்பெற்ற இந்நாடகத்தில் ‘முகத்தார்’ (ஆறுமுகம்) வேடத்தில் எஸ். யேசுரட்ணம் மிகச் சிறப்பாக நடித்து மக்களைப் பெரிதும் கவர்ந்து கொண்டார். அன்று முதல் அவரது யேசுரட்ணம் என்ற பெயர் மறைந்து ‘முகத்தார்’ என்ற பெயரே அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வாடைக்காற்று' திரைப்படத்தில் பொன்னுக்கிழவராக 'முகத்தார்.' அருகில் டாக்டர் இந்திரகுமார்.

செல்லப் பெயராகத் தொடர்ந்தது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இளவாலைக் கிராமத்தில் 1931ம் ஆண்டுப் பிறந்த முகத்தார் கல்வியை நிறைவு செய்த பின் அரச ஊழியராக பல திணைக்களங்களில் கடமையாற்றியுள்ளார். இலங்கை வானொளலியில் பகுதிநேரக் கலைஞராகவும் பணிபுரிந்தார்.

வானொலி நாடகங்களிலும் மேடை நாடகங்களிலும் நடித்துப் பெரும்புகழ் பெறலானார்.

முகத்தார் வீடு, பருவக்காற்று, சண்டியன் சின்னத்தம்பி, மாடிவீட்டு மருக்கொழுந்து மற்றும் கதம்பம் என்பன மக்களைப் பெரிதும் கவர்ந்த நாடகங்களாகும்.

ஈழத்துத் திரைப்படங்களிலும் முகத்தார் முத்திரை பதித்துள்ளார்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட தரமான திரைப்படம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகத்தார், கே. எஸ். பாலச்சந்திரன்.

அதிக நாட்கள் காண்பிக்கப்பட்டு சாதனை புரிந்த திரைப்படம் என்றும் விமர்சகர்களால் குறிப்பிடப்படும் 'வாடைக் காற்று' திரைப்படத்தில் முக்கியப் பாத்திரமேற்று சிறந்த நடிப்பால் எல்லோரதும் பாராட்டுக்களையும் முகத்தார் பெற்றார்.

பத்திரிகைகள் பலவும் முகத்தாரின் நடிப்பைப் பாராட்டி எழுதின. 1978ம் ஆண்டு வெளிவந்த 'வாடைக் காற்று' திரைப்படத்தில் முகத்தார் பொன்னுக் கிழவர்' பாத்திரமேற்றுச் சிறப்பாக நடித்திருந்தார்.

பொன்னுக்கிழவர் பாத்திரத்தில் நடிப்பதற்கு முதலில் பல்கலை. வேந்தர் சில்லையூர் செல்வராசன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாத்திரத்திற்கு முகத்தாரே பொருத்தமாக இருப்பாரெனச் சில்லையூர் முகத்தாரே சிபாரிசு செய்தார். இதனை என்றும் நன்றியுடன் முகத்தார் நினைவு கூர்வதுண்டு.

'வாடைக் காற்றில்' சிறப்பாக நடித்தமைக்காக சிறந்த நடிகருக்கான ஜனாதிபதி விருது முகத்தாருக்குக் கிடைத்தது.

புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டுக்கு வந்த பின்னரும் ஓயாது கலைப்பணியாற்றினார். பிரான்சிலிருந்து ஒளிபரப்பான 'ரி. ஆர். ரி' தமிழ் ஒலி வானொலியில் தனது நீண்டகால சக கலைஞரான 'அப்புக்குட்டி' ராஜகோபாலுடன் இணைந்து தொடர்ந்து பல நாடகங்களைத் தயாரித்தும் நடித்து வந்தார்.

ஐரோப்பாவில் தயாரிக்கப்பட்ட பல மேடை நாடகங்களிலும், குறும்படங்களிலும், தமிழ்த் திரைப்படங்களிலும், தன் நடிப்பினைத் தொடர்ந்தார். பாராட்டுக்களை அள்ளிக்கொண்டார்.

பிரான்சிலிருந்து ஒளிபரப்பாகிய 'ரி. ஆர். ரி' தமிழ் ஒளி தொலைக்காட்சியிலும் நாடகங்கள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்து வந்தார். ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும் சென்று நாடகங்களிலும் மற்றும் கலைநிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துப் பாராட்டுப பெற்றார். பல்வேறு விருதுகளையும் பெற்றுக்கொண்டார்.

பழகுவதற்கு இனிமையான, பண்பான மனிதன் முகத்தார் 2010ம் ஆண்டு பிரான்ஸில் காலமானார்.

அவருடன் பழகியவர்கள் அவரது நகைச்சுவைப் பேச்சையும் அன்புகுழைந்த இனிய குரலையும் பண்பையும் எளிதில் மறந்துவிட முடியாது. இலங்கையிலும் ஐரோப்பாவிலும் தன் கலைத்திறனால் உச்சத்தைத் தொட்ட கலைஞனாக முகத்தார் விளங்கினாலும் பண்பால் எல்லோர் உள்ளத்திலும் நிறைந்த உயர்ந்த மனிதராக விளங்கினார்.

அவருடன் இலங்கையிலும் பிரான்ஸிலும் பழகிய நாட்கள் என் வாழ்வில் மறக்க முடியாதவை. அந்த உன்னதக் கலைஞன் நாமம் கலை உலகில் என்றும் நிலைத்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# ஈழத்திற்குப் பெருமை சேர்த்த இசையரசன் குலசீலநாதன்



அந்த நாள் இன்றும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது..!

1972 -ம் ஆண்டு யாழ்ப்பாணம் புதிய வின்சர் திரையரங்கில் 'குத்துவிளக்கு' என்ற ஈழத்துத் திரைப்படம் வெளியாகியது. அதனைப் பார்ப்பதற்கு நண்பர்களுடன் போயிருந்தேன். திரைப்படம் 'ஈழத்திருநாடே என்னருமைத் தாயகமே..' என்ற பாடலுடன் ஆரம்பமாகியது. கணீரென்ற குரலில் அந்தப் பாடல் தொடங்கியதும் 'ஆகா அற்புதமான குரலில் பாடல் ஒலிக்கிறதே' ... என வியந்தேன். நண்பர்களுடன் சேர்ந்து கைதட்டி மகிழ்ந்தது இன்றுபோல் எனக்கு ஞாபகமிருக்கிறது..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசைக்குரு டாக்டர் பாலமுரளி கிருஸ்ணாவுடன்....

ஆமாம்.. அற்புதமாக அந்தப் பாடலைப் பாடியவர்தான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அன்று இசைத் தயாரிப்பாளராக விளங்கிய சங்கீத பூசணம் எம். ஏ. குலசீலநாதன்.

பின்னர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கிராமிய நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராக விளங்கிய எமது குடும்ப நண்பர் ஏ. சிறிஸ்கந்தராசாவின் கொழும்பு - நாரங்கன்பிட்டி தொடர்மாடி வீட்டில் பலமுறை குலசீலநாதனைக் கண்டு பேசிப்பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வேளைகளில் எமது வேண்டுகோளுக்கிணங்க அவர் பல பாடல்களைப் பாடுவார். சகோதரர் வி. ரி. தமிழ்மாறன் அவரிடம் எழுதிக் கொடுத்திருந்த 'கீற்றோலைத் தென்றலிலே கீதமொன்று கேட்குதையா..' போன்ற சில மெல்லிசைப் பாடல்களையும் அவர் பாடிக்காட்டுவார். நாம் அவரது இசைமழையில் நனைந்து மகிழ்வுறுவோம்.

அவர் எங்கள் அன்புக்குரிய 'பல்கலை வேந்தர்' சில்லையூர் செல்வராசனின் உற்ற நண்பர். இருவரும் ஒன்றாகவிருந்து பேசிக்கொள்வதை, பாடி மகிழ்வதைப் பார்ப்பதே ஆனந்தம். சில்லையூர்... கவித்தூறல் சொட்ட, இவர் அதனை இசைமழையாகப் பொழிவார்... ஆகா அதனைக் கேட்பது தான் எத்தனை ஆனந்தம்..!

தமிழகத்தில் கவியரசர் கண்ணதாசன் மாதங்களின் பெயர்களைக் கோர்த்து ஒரு பாடலை எழுதியிருந்தார். சென்னையில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சில்லையூரிடம் இதனைக் குறிப்பிட்ட நண்பர்கள், 'இப்படி ஒரு பாடலை நீங்கள் எழுத முடியுமா..?' எனக் கேட்டுவிட்டனர். பல்கலை வேந்தர் - தான்தோன்றிக் கவிராயர் சில்லையூர் செல்வராசனுக்கு இது பெரிய வேலையா..? உடனே எழுதினார். மாதங்களின் பெயர்களும் கிழமைகளின் பெயர்களும் இடம்பெறும் பாடல் பிறந்தது. அந்தப் பாடலை யார் பாடினால் நன்றாக விருக்குமென யோசித்தபோது, உடனே நண்பர் குலசீலநாதன் தான் அதனைப் பாடவேண்டுமென சில்லையூர் குறிப்பிட்டார்.

அதற்கேற்ப குலசீலநாதனின் வெண்கலக்குரலில் 'ஞாயிறென வந்தாள்...' எனத் தொடரும் அப்பாடல் ஒலித்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பாடல்களில் நேயர்களால் அதிகம் விரும்பிக் கேட்கப்பட்ட பாடல்களில் ஒன்றாக இப்பாடல் இடம்பெற்றது.


வட்டுக்கோட்டை - அராலியைப் பிறப்பிடமாகக்கொண்ட குலசீலநாதன் 1959 -ம் ஆண்டு தமிழகம் சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதம் கற்று முதல் தரத்தில் சித்திபெற்றுச் 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்றார். இசைமேதை டாக்டர் பாலமுரளி கிருஸ்ணாவைக் குருவாகக்கொண்டு அவரிடமும் கற்று சங்கீத நுண்ணறிவை மேலும் வளர்த்துக்கொண்டார்.

1964 -ம் ஆண்டு தனது பிறந்த இடமான அராலியில் முதல் இசைக்கச்சேரியை நிகழ்த்தினார். 1968 -ம் ஆண்டு இலங்கை வானொலியில் பகுதிநேர இசைத் தயாரிப்பாளராக இணைந்து கொண்டார். 1970-ல் அங்கு நிரந்தர இசைத் தயாரிப்பாளராக நியமிக்கப்பட்டார். 1981 -ல் இசைக் கட்டுப்பாட்டாளர் பதவிக்கு உயர்ந்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட 'கங்கை யாழே...' என்ற இசைத்தட்டில் இவரது பாடல்கள் ஒலித்தன. 'ஜனரஞ்சனி ' என்ற நிகழ்ச்சி மூலம் சாதாரண மக்களும் சங்கீதத்தின் தார்ப்பரியத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினார். 'இசைக்கோலம், இசைப்பிருந்தா, ஜனரஞ்சனி" போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் பல்லாயிரம் வானொலி நேயர்களை இசையால் வசப்படுத்தினார். நாடகங்களுக்கும் இசையமைப்புச் செய்தார். 'விழிப்பு, செவ்வானத்தில்' என்ற இரு மேடை நாடகங்களும் இவரது இசையமைப்பு இணைப்பை பெற்றன.

கர்நாடக சங்கீதத்தில் முழுமையான தேர்ச்சி பெற்றவர்கள் மெல்லிசையைக்கூட மெருகுபடுத்திப் பாடமுடியும் என்பதற்கு உதாரண புருசராகத் திகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சினிமாவில், அன்றைய பாடகர்களாகவும் இசையமைப்பாளர் களாகவும் திகழ்ந்த கண்டசாலா, ஜி. இராமநாதன் போன்றோரின் இசையை மெச்சுபவர்.

1983 -ம் ஆண்டு யூலைப் பேரினவாத வன்முறை காரணமாகப் புலம்பெயர்ந்த இவர், முதலில் சிங்கப்பூர் வானொலியிலும் பின்னர் மலேசிய வானொலி - தொலைக்காட்சி நிலையங்களின் கௌரவக் கலைஞராகவும் இசை ஆலோசகராகவும் பணிபுரிந்துள்ளார். அங்கு இவரது இசைக்கச்சேரியைக் கேட்டதும், டாக்டர் பாலமுரளி தான் வந்து பாடுகிறாரென இசை ரசிகர்களை எண்ணவைத்துவிட்டதாக பத்திரிகைகள் பாராட்டிச் செய்திகள் வெளியிட்டன என அறிகிறோம்.

1990-ம் ஆண்டளவில் பாரிஸ் மாநகர் வந்த குலசீலநாதன், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இசைக்கச்சேரிகள் செய்ததுடன், மெல்லிசைப் பாடல்கள் - ஈழத்துப் பாடல்களையும் மேடைகளில் பாடி இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். மேடை நிகழ்ச்சிகளின்போது, 'ஈழத்திருநாடே என்னருமைத் தாயகமே... ஞாயிறென 'வந்தாள்' போன்ற பாடல்களை இரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்கப் பாடி நிறைவுசெய்வார்.

1991 -ம் ஆண்டு யான் பாரிஸ் மாநகர் வந்தபோது, 'இன்தமிழ்க் குரலோன்' எஸ். கே. இராஜென் வீட்டில் நண்பர் குலசீலநாதனைப் பல வருடங்களுக்குப்பின் மீண்டும் சந்தித்துப் பேசும் வாய்ப்புக்கிட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பலமுறை நாம் சந்திக்கும் வேளைகளில் நிறையவே பேசி மகிழ்ந்தோம். 1993 -ம் ஆண்டுக்கு பின் யான் துலூஸ் நகரில் வசிப்பவனாகிவிட்டபோதிலும் அவ்வப்போது விழாக்களுக்கும், வானொலி - தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குமென பாரிஸ் மாநகர் வரும்போதெல்லாம் அவரைச் சந்திக்க முடிந்தது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இசைக்கச்சேரிகள், பரத நாட்டிய அரங்கேற்றங்களுக்கான இசை, நாடகங்களுக்கான இசையமைப்பு மற்றும் இசைப்பயிற்சி வகுப்புகள் என அவரது பணிகள் தொடர்ந்தது. பிரான்சில் பல நகரங்களிலும் சத்தியசாய் பாபா பக்தர்களின் பஜனை மன்ற நிகழ்ச்சிகளிலும் கௌரவப் பாடகராகப் பாடிவந்துள்ளார்.

துலூஸ் நகரில் ஓர் பிரெஞ்சுப் பெண்மணி யான் இலங்கையைச் சேர்ந்தவன் எனத் தெரிந்ததும், அவர் என்னிடம் ‘உங்களுக்குப் பாடகர் குலசீலநாதனைத் தெரியுமா..?’ எனக் கேட்டார். ‘ஆமாம்.. அவர் என் நண்பர். சிறந்த கர்நாடக இசைப் பாடகர்..’ என்று பதில் சொல்லிவிட்டு, ‘உங்களுக்கு எப்படி அவரைத் தெரியும்..?’ என அவரிடம் கேட்டேன். சாயிபாபா பஜனை மன்றத்தின் பிரான்ஸ் தென்பகுதிக்குப் பொறுப்பாகத் தான் செயற்படுவதாகவும், பிரான்ஸ் சாயிபாபா பஜனை மன்ற நிகழ்ச்சிகளின்போது குலசீலநாதனின் அழகான குரலில் பஜனைப் பாடல்களைத் தான் கேட்டு மகிழ்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். பிரான்சில் வசிக்கும் பல்லின மக்களையும் தன் இசையால் கவர்ந்த பாடகராக அவர் புகழுடன் விளங்கினார்.

மேடைக் கச்சேரிகளுக்கு வரும்போதும் தன்னை மெருகூட்டிடும் விதத்தில், ஆடை அலங்காரங்களிலும் தேர்ந்த கலைஞனுக்குரிய மிடுக்குடன் தான் வருவார். நண்பர்களுடன் குழந்தைபோல் பழகினாலும் பெரும் கலைஞனுக்குரிய கர்வமும் இறுமாப்பும் அவருக்கிருந்ததை மறுக்கமுடியாது.

அந்த அற்புத இசைக் கலைஞர், ஈழத்துக்குப் பெருமை சேர்த்த இசையரசர், நண்பர் குலசீலநாதன் 2004 -ம் ஆண்டு மே மாதம் தனது 64 -வது வயதில் எம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற செய்திகேட்டு வருந்தினேன்.

அவரது இனிய பாடல்கள் - இசைக்கச்சேரி ஒலிப்பதிவுகள் மூலம் என்றும் எம்மக்கள் மத்தியில் வாழ்வார். அவர் எம்மக்கள் மறக்க முடியாத உன்னத இசைக் கலைஞர் என்பதில் ஐயமில்லை..!


– 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# மக்கள் மனம் நிறைந்த தலைசிறந்த நிர்வாகி



மக்கள் பணிகளில் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றும் அரச நிர்வாகிகளில், யாவராலும் போற்றப்பட்ட தலைசிறந்த நிர்வாகிதான் சி. சடாட்சர சண்முகதாஸ்.

புங்குடுதீவில் பிறந்த சடாட்சர சண்முகதாஸ் புலமைப் பரிசில் மாணவனாக வேலணை மத்திய கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாகி, எழுபதுகளின் ஆரம்பத்தில் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக மக்கள் பணிகளில் ஈடுபட்டார். இளமைக் காலத்தில் கொண்டிருந்த சேவை மனப்பாங்கு, இலட்சியநோக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மைத் திறன் என்பவற்றிலிருந்து அணுவளவும் தளம்பாத சேவையாளனாக இறுதிக்காலம் வரை பணியாற்றி மக்கள் மனங்களில் நிறைந்தவர். எந்நேரமும் புன்சிரிப்பு தவழும் முகத்துடனேயே அவர் யாரையும் வரவேற்பார். வன்சொல் அறியாத பண்பாளர்.

எந்த ஒரு வேலையிலும் தான் பாண்டித்தியமுடையவர் என்ற செருக்கு அவருக்கு இல்லை. கருத்து வேறுபாடுகள் ஏற்படுமிடத்து அதனை மிகப் பணிவுடனும் மெதுவாகவும் தகுந்த வாதங்களுடனும் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

நாம் பல வேளைகளில் அவரிடம் அறிவுரைக்காகச் செல்வதுண்டு. 'வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டிலே தலைசிறந்த நிர்வாகி ஒருவரை நாம் இழந்து நிற்கின்றோம்' என வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மிகுந்த கவலையோடு எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தான் கடமையாற்றிய பிரதேசங்கள் எங்கும் சேவையால் மக்கள் மனங்கவர்ந்தவர். பல்கலைக்கழகத்தில் பயின்ற காலம் முதல் இலக்கிய நேசனாக விளங்கியவர். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்மன்ற வெளியீடான 'இளங்கதிர்' இதழின் ஆசிரியராக விளங்கியவர்.

என்னைக் காணும் போதெல்லாம் இலக்கிய சம்பாஷனை செய்வார். அல்லது பிறந்த ஊருக்கு என்ன பணிகளைச் செய்யலாம் என்பது பற்றித் தான் சொல்வார். மக்கள் எழுத்தாளர் கே. டானியலின் அத்தனை நாவல்களையும் படித்துச் சுவைத்தவர். அவை குறித்து என்னோடு பேசிக்கொண்டவர்.

ஓர் உத்தமனுக்கு, ஒரு சான்றோனுக்குரிய குணாதியங்களையும், பண்புகளையும் நன்னெறி ஒழுக்கங்களையும் பெற்றவராக மனச்சாட்சிப்படி, நீதி தவறாதவராக, எவ்வித பாகுபாடுகளுமின்றிச் சேவையாற்றித் தனக்கும் குடும்பத்துக்கும் புகழையும் கீர்த்தியையும் தேடியவர், அதனாலேயே மக்கள் அவரைப் போற்றுகிறார்கள், அவரது இழப்பைத் தாங்காது கவலையுறுகிறார்கள்.

புங்குடுதீவின் தேவைகளை நிறைவு செய்து ஊரை முன்னேற்ற வேண்டுமென்ற அவா அவருக்கு இறுதிவரை இருந்தது. தன்னாலியன்ற பணிகளை ஊருக்கு இறுதிவரை செய்தவர். பலரது வாழ்வுக்கு வழிகாட்டியாக, உறுதுணையாக நின்று கைதூக்கிவிட்டவர்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் நிர்வாக வரலாற்றில் அவரின் பெயரும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என வடக்கு, கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண பிரதி பிரதம செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்தில் அவர் பல பதவிகளை வகித்துள்ளார். உட்துறை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக, உள்ளூராட்சி ஆணையாளராக, உட்துறை அமைச்சின் பிரதிச் செயலாளராக, கிராம அபிவிருத்திப் பணிப்பாளராக, பேரவைச் செயலாளராக, கல்வி கலாச்சார அமைச்சின் மேலதிகச் செயலாளராக, முகாமைத்துவ அபிவிருத்தி, பயிற்சிப் பணியாளராகப் பல பதவிகளை வகித்து நிர்வாகத் திறமையால் ஏனையோர்க்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்.

மக்கள் மனம் நிறைந்த யாவரினதும் மதிப்புக்குரிய நிர்வாகி, சேவையாளர் சடாட்சர சண்முகதாஸின் நாமம் என்றும் மறக்கப்பட முடியாதது தான்.

– மார்கழி, 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

# கவிஞர் சு. வில்வரத்தினம் சில நினைவுக் குறிப்புகள்



நேற்றுப் போல... சில நினைவுகள்...

வில்வனின் வயது தானே எனக்கும்... ஞாபகத்தில் இல்லாது எத்தனையோ போய்விட்டாலும்.... அழியாத நினைவுகள் பலவுண்டு.

சுப்பிரமணியம் வில்வரத்தினம்... என் நண்பன்...

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தில் எங்கள் வீடுகளுக்கிடையில் அதிக தூரமில்லை... நீண்ட காலமாகப் பழகிவந்தவர்கள் தாம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்குள் எத்தனையோ விவாதங்கள்... சர்ச்சைகள்... உரக்கச் பேசிக்கொள்வோம்... அடிக்கடி சந்திக்கத் தவறுவதில்லை...

அறுபதுகளின் இறுதிப்பகுதியில், கல்லூரி நாட்களிலேயே யான் வீரகேசரிப் பத்திரிகை நிருபராகக் கடமையாற்றத் தொடங்கியபோதிலும், எழுதுபதுகளின் ஆரம்பத்திலேயே இலக்கியத் துறையில் ஈடுபட்டேன். அக்காலத்தில், புகழ்பெற்ற எழுத்தாளர் செ. கணேசலிங்கத்தின் "குமரன்" சஞ்சிகை ஐந்து பிரதிகள் எனக்கு வரும். அதில் ஒன்றைக் கொண்டுபோய் நண்பன் வில்வனுக்குக் கொடுப்பேன்.

தவறாது காசு தந்திடுவான்.

அதனை வாசித்துவிட்டுச் சந்திக்கும் போதெல்லாம் உரத்த விமர்சனம் கொட்டுவான்.

எழுத்தாளர் மு. தளையசிங்கத்தின் இறுதி ஊர்வலத்தில் வில்வன் கீதங்கள் பாடிவந்ததும், புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் பொன். சுந்தரலிங்கம் திருவாசகம் பாடிட எல்லோரும் கண்கலங்கி அழுது நின்றதுவும், பின்னர் புங்குடுதீவு கலட்டி பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்ற என்னையும் வில்வன் அழைத்ததும் ஞாபகத்தில் வருகின்றன.

எழுபதுகளில் பலதடவை புங்குடுதீவில் இலக்கியக் கூட்டங்களை நடாத்தியிருக்கின்றேன்.

அக்கூட்டங்களில் கே. டானியல், நாவேந்தன், ஈழத்துச் சிவானந்தன், புதுவை இரத்தினதுரை, வ. ஐ. ச. ஜெயபாலன் ஆகியோருட்படப் பலர் கலந்து கொண்டமை இன்றும் ஞாபகம்.

அந்தக் கூட்டங்களில் நண்பன் வில்வன் எம்முடன் கவியரங்கில் கலந்து கொள்வார். அல்லது கருத்துரை வழங்குவார். வில்வனின் மூத்த சகோதரர் கருணாகரன் அக்கூட்டங்களை நடாத்துவதற்கு எனக்கு உதவிகள் புரிந்தமையும் மறக்க முடியாது.

அன்று, வசந்தம் புத்தக நிலையத்திலிருந்து, சீனாவிலிருந்துவரும் புத்தகங்கள், தமிழில் வெளிவந்த மாக்ஸிசப் புத்தகங்கள், தொழிலாளி பத்திரிகை உட்படப் பலதும் கொண்டுவந்து நண்பர்களுக்குக் கொடுப்பது என் வழக்கம். அவ்வேளை எத்தகைய கருத்து முரண்பாடு இருப்பினும் முகங்கோணாது பணம் தந்து வில்வன் அவற்றையும் வாங்கிக் கொள்வான். பின்னர் அவை பற்றிய அலசல்களிலேயே எமது சந்திப்புகளின் நேரங்கள் போய்விடும். தான் ஏற்றுக் கொண்ட கருத்தினை உரக்கச் சொல்லி வலியுறுத்துவது வில்வனின் வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய குணம் என்னிடத்தும் உண்டு. இதனால் இருவரும் உரக்க வாதாடுவதைப் புதிதாகப் பார்ப்பவர்கள் "என்ன சங்கதியோ..." என ஆச்சரியப்படுவதும் உண்டு.

மனிதாபிமானமும், தொன்மை மரபு பேணலும், ஆன்மீகமும் அவன் வாதங்களில் இழையோடும்.

எப்படி நாம் பேசிக் கொண்டாலும், கள்ளமற்ற, மனந்திறந்து பேசும் எம் நட்பு என்றும் தொடர்ந்தது.

எண்பதுகளின் பிற்பகுதியில் யான் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து, பின்னர் பிரான்ஸ் வந்துவிட்டேன். இருப்பினும் அவ்வப்போது பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலம் நண்பனின் படைப்புகளைப் பார்த்து மகிழ்வதுண்டு. என் சகோதரர் சிறிது காலம் நடாத்திய 'திருப்பம்' சஞ்சிகையிலும் நண்பனின் எழுத்துக்கள் தொடர்ந்து வந்ததைப் பார்த்தேன்.

சில மாதங்களுக்கு முன்பு நண்பர் யேசுராசாவுடன் ஐரோப்பா வந்திருந்தான்.

பாரிஸில் அவனது கவிதைத் தொகுதியின் அறிமுக விழாவும் நடைபெற்றது.

சுமார் 770 கி.மீ. தொலைவில் யான் வாசிக்கும் துலுாஸ் நகரிலிருந்து பாரிஸ் வந்து, விழாவில் நண்பனைச் சந்தித்து உரையாடினேன்.

கண்டதும் கட்டிப்பிடித்து "எப்படியடாப்பா..." என வாஞ்சையோடு பேசியதை மறக்க முடியவில்லை. பின்னர் இன்னுமொரு சந்திப்பிலும் கலந்து கொண்டு அவனுடன் நிறையவே பேசினேன்.

என் வயது நண்பன்... .. இடைநடுவில் போய்விட்டான்.... அடுத்தடுத்து வரும் கலை இலக்கியவாதிகளின் இழப்புகள் இதயத்தைக் கலங்கடிக்கின்றன.

காற்றுவெளிக் கிராமத்தின் காலத்துயர் சுமந்து கவிதைகள் தந்தவனே... முன்னணிக் கவிஞனாய் முகிழ்ந்து வந்தவனே...

உன் படைப்புகள் மூலம்...
எங்களுடன் பேசிக் கொண்டேயிருக்கிறாய்...
எப்படி மறப்போம் உன்னை..?
இயலாது... இயலாது..!

ஜனவரி, 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

# பெண்கள் உரிமைகளுக்காகப் பெரிதும் பாடுபட்ட வேதவல்லி கந்தையா



ஆண் ஆதிக்கம் மேலோங்கியுள்ள சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளுக்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராதுழைத்த மாதரசிகளில் குறிப்பிடத்தக்கவர் திருமதி வேதவல்லி கந்தையா.

பொதுவுடைமை இயக்கத்தின் வளர்ச்சிக்கென யாழ். குடாநாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் தமது கணவன் மாருடன் இணைந்து பல மாதரசிகள் தொண்டாற்றியுள்ளனர். அவர்கள் தமது சொத்துச் சுகம் எல்லாவற்றையும் இழக்க நேரிட்டும் கலக்கமின்றி, கொண்ட கொள்கையில் ஈடாட்டமின்றி இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். பொதுவுடமைக் கட்சியின் ஆதரவாளராக, உறுப்பினராக குடாநாட்டுச் சமுதாயத்தில் வாழ்வது என்பது வாழ்க்கையில் எதிர்நீச்சல் அடிப்பதாகும்.

தமது கொள்கையில் இறுதிவரை வழுவாது எத்தனை துயர்வரினும் ஏற்று இலட்சிய வாழ்வு வாழ்ந்தவர்களுடைய வாழ்வின் பின்னால் அவர்களது மனைவிமாருக்கும் சமபங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது. இம்மாதரசிகள் தமது கணவர்களின் வாழ்க்கையில் துணைநின்று கஷ்டங்களின் மத்தியில் குடும்பப் பணியையும் பொதுப் பணியையும் நிறைவேற்றினார்கள். இந்த வகையில் ஆசிரியராகத் தம் பணியை ஆரம்பித்த திருமதி வேதவல்லி கந்தையா பொதுவாழ்க்கையில் தமக்கென ஒரு சுதந்திரமான பாத்திரத்தையும் வகித்து நாடு போற்றும் நற்பெண்மணியாக விளங்கியவர்.

வட்டுக்கோட்டையில் 1920ஆம் ஆண்டு வேதவல்லி கந்தையா பிறந்தார். நீர்வேலியைச் சேர்ந்த பொதுவுடைமைவாதியான எஸ். கே. கந்தையா என்பவரைக் கணவனாக வரித்துக் கொண்டார். ஆசிரியரான கந்தையாதான் முதன்முதலில் இலங்கையில் கம்யூனிஸ்ட் அறிக்கையைத் தமிழாக்கம் செய்து பாராட்டுப் பெற்றவராகும்.

ஆண்களுக்குள்ள உரிமைகள், சுதந்திரம் பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்ற ஜனநாயக் கோட்பாட்டுக்கமைய பல பெண்களை ஒன்று திரட்டி முற்போக்கு மாதர் சங்கத்தை உருவாக்கிக் குடாநாட்டுப் பெண்கள் மத்தியில் மறுமலர்ச்சியையும் விழிப்புணர்ச்சியையும் ஏறபடுத்திய திருமதி வேதவல்லி கந்தையா இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியிலும் உறுப்பினராக இருந்தார்.

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரங்களிலும் முன்னின்று செயற்பட்ட அவர், கூட்டுறவு இயக்கப் பணிகளிலும் பெரிதும் ஈடுபட்டுழைத்தார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சயமுடைய அவர் தலைமைத்துவப் பண்புகளுடன் மிளர்ந்தார். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தமது ஆசிரியர் சேவையை தொடங்கிய இவர் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் இறுதியாகச் சேவையாற்றி இளைப்பாறினார். இக்கல்லூரியில் இவரது மாணவனாக யான் பயின்றேன் என்பதில் எனக்குப் பெருமகிழ்வே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம், யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் மகளிர் அமைப்பு, யாழ். மாவட்ட மகளிர் குழு, யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம், வலிகாமம் கிழக்குப் பகுதி மகளிர் குழுக்கள், நீர்வேலி சமுதாய முன்னேற்றக்கழகம், நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கம் போன்ற பல அமைப்புகளின் தலைவராகவும், உபதலைவராகவும், போஷகராகவும் பணியாற்றிய திருமதி வேதவல்லி கந்தையா தமது சேவையின் திறத்தால் மக்கள் மனதில் நிறைந்தார். தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

இன்றைய சமுதாய அமைப்பை மாற்றியமைத்து, எல்லோரும் எல்லாமும் பெறுகின்ற புதியதோர் பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைத்தால் தான் பெண்கள் சம உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழலாம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு இறுதிவரை அதற்காகவே உழைத்த திருமதி வேதவல்லி கந்தையா 1988ஆம் ஆண்டு காலமானார். சமுதாய முன்னேற்றத்திற்காகவே அயராதுழைத்த இம்மாதரிசியின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.

– 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23

# நாடு போற்றும் எங்களூர்த் தமிழறிஞர்கள்

புங்குடுதீவு பல தமிழறிஞர்களைப் பெற்றிருக்கிறது. இங்கு பிறந்த தமிழறிஞர்கள் , கவிஞர்கள், எழுத்தாளர்கள் இலங்கையில் மாத்திரமல்ல இந்தியா, மலேசியா நாடுகளிலும் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள். இவர்களுள் இராமலிங்கச் சட்டம்பியார், குருமூர்த்திச் சாத்திரியார், பேராசிரியர் சி.இ. சதாசிவம்பிள்ளை, வித்துவான் சி. ஆறுமுகம், வித்துவான் பொன். அ. கனகசபை, பண்டிதர் வீ. வ. நல்லதம்பி, பண்டிதர் மு. ஆறுமுகம், க. சிவராமலிங்கம், த. திருநாவுக்கரசு (நாவேந்தன்), கு. வி. செல்லத்துரை, புலவர் ஈழத்துச் சிவானந்தன், த. துரைசிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

புகழ்பெற்ற கல்லூரிகளில் தமிழ்ப் பேராசான்களாகவும், சிறந்த கலை இலக்கியப் பேச்சாளர்களாகவும் விளங்கிய எம்மவர் நால்வர் குறித்து இங்கு நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் சி. ஆறுமுகம்



மேடையில் ஓர் உயர்ந்த உருவம், தேசிய உடை, ஒலிவாங்கி முன் வந்ததும் பாரதியார் பாடலை அற்புதமாகப் பாடுகிறார். சலசலப்புடனிருந்த சபை அமைதியாகிறது. பாடல் முடிந்ததும் கணீர் என்ற குரலில் பேச்சு ஆரம்பமாகிறது. சபை மெய்மறந்து அவர் உரையினைச் செவிமடுக்கிறது.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது நம்முன்னோர் வாக்கு. இந்த உண்மையை வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் திருவாசகம் பாடும்போது யதார்த்தபூர்வமாகக் கல்லூரி மாணவப் பருவத்திலேயே அறிந்தவன் யான். கல்நெஞ்சையும் கரையச் செய்யும் வகையில் அவர் பாடுவதைப் பாராட்டாதார் எவருமிலர்.

"பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன்..."

- என்று பாடத் தொடங்கினாரானால் கேட்போர் உள்ளமெல்லாம் அந்தத் திருவாசகத் தேனில் மயங்கிடும் எனலாம். இவ்வண்ணம் திருவாசகப் பாக்களை மெய்யுருகப் பாடும் ஆற்றல் அவரது தனிச்சிறப்பெனலாம். அவ்வாறே பாரதியார் பாடல்களையும் பேச்சின் நடுவே பாடிச் சபையோரைத் தன்வசமாக்கிடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவுக்குப் பெருமை சேர்த்த தமிழறிஞர்களில் ஒருவரான வித்துவான் சி. ஆறுமுகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வித்துவான் பட்டம் பெற்றவர். குருதேவரெனப் போற்றப்பட்ட பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் அன்புக்குரிய மாணவர். சிறந்த பேச்சாளர். மண்மறவாத மாண்புடையர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் தலைமைத் தமிழாசானாக விளங்கியவர்.

நம்மூர் மாணவர் பலர் அக்கல்லூரிகளில் சேர்ந்து உயர்கல்வி பெறத் துணைபுரிந்தவர். இவரது ஆசிரியப் பணியின் மூலம் பயன்பெற்ற மாணவர்கள் பன்னூற்றுக் கணக்கானோர் உளர்.

**இலக்கியப் பணி**

வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களின் பணிகள் பன்முகத் தன்மை வாய்ந்தவை. கல்விப்பணி, சமூகப்பணி, இலக்கியப்பணி, சமயப்பணி என அவற்றை வகுத்துக் கூறலாம். இயல்பாகவே கவிதை எழுதும் ஆற்றல் படைத்த இவர் பல்வேறு கவிதைகளை எழுதியுள்ளார். பாடசாலைக் கீதங்கள் முதல் ஆலய ஊஞ்சல் பாக்கள் வரை அவை பல்கிப் பெருகியுள்ளன. வித்துவான் அவர்களின் இலக்கியப் பணிகளில் குறிப்பிடத்தக்கது "கலைமதி" என்னும் சஞ்சிகை வெளியீடாகும். நண்பர்கள் சிலருடன் சேர்ந்து இச்சஞ்சிகையைத் தரமான முறையில் வெளியிட்டார். எனினும் அது நீண்டு நிலைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.

'நல்லூரான் நாற்பது' என்னும் கவிதை நூலையும் இவர் படைத்துள்ளார். மற்றும் பல சுவையான தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார் வித்துவான். நாமம் என்றும் பேசப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் பொன் அ. கனகசபை



பொன்கொடுதீவென அழைக்கப்படும் புங்குடுதீவு புகழ்பெற்ற புலவர்களையும், அறிஞர்களையும், தலைசிறந்த ஆசான்களையும், எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் நல்கிய பெருமைக்குரியது. தமிழ்ச் செம்மொழி வளர்ச்சிக்குச் சலியாது தொண்டாற்றிய பேரறிஞர்களை, மண் மறவாத மாண்புமிகு மனிதர்களைக் கொண்டது. அத்தகையோரில் குறிப்பிடத்தக்க பெருமைக்குரியவர்கள் இரு வித்துவான்களாவர். ஒருவர் வித்துவான் பொன். அ. கனகசபை. மற்றவர் வித்துவான் சி. ஆறுமுகம், முன்னவரான கனகசபை ஆழ்ந்தடங்கிய தமிழ்ச்சான்றோனாவர்.

சங்க இலக்கியங்கள் முதல் ஈழத்து இலக்கியங்கள் வரை துறைபோகக் கற்றவர். தமிழிலக்கிய, இலக்கணப்புலமை வாய்ந்தவர். அமைதியான சுபாவம் கொண்டவர். ஆடம்பரமற்றவர். தமிழ்ப்பணியே தன் பணியாகக் கொண்டு இறுதிவரை இயங்கியவர். அவரது பணிகள் அளவிடற்கரியன.

## சிறந்த காந்தியவாதி

கனகசபை அவர்கள் சிறந்த காந்தியவாதி. கதர் வேட்டி, கதர் சட்டை, கதர் சால்வை அணிந்து காட்சியளித்தவர். நிறைகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளம்பாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அனைவருடனும் அன்பாகப் பழகியவர். இலங்கை காந்தியசேவா சங்கத்தில் இணைந்து மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு போன்ற விடயங்களில் பெரும் பங்கு கொண்டு உழைத்தவர். தமது ஆசிரியப் பணிக்கு மேலாகச் சமூக சீர்திருத்தத்திற்காகப் பெரிதும் பாடுபட்டவர்.

சுவாமி சுத்தானந்த பாரதியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்றோரைப் புங்குடுதீவுக்கு அழைத்து வந்து அவர்கள் தம் உரைகளை இங்குள்ளார் செவிமடுக்கச் செய்தவர்.

**கல்விப் பணி**

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் தமிழ்ப் பேராசானாக விளங்கிய இவர் இறுதிக் காலத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உப அதிபராகக் கடமையாற்றினார்...

தம்மிடம் பாடம் பயிலும் மாணவர்க்குத் தமிழ் இலக்கணத்தை இனிக்கும் வகையில் போதிக்கும் திறமை படைத்தவர் வித்துவான் கனகசபை. அவரிடம் இலக்கணம் கற்பதே தனி இன்பமென அவரது மாணவர் பலர் என்னிடம் வாய்விட்டுக் கூறியுள்ளனர். அற்ப திறமை கொண்டோரும் தம்மைப் பேரறிஞரெனத் தம்பட்டமடித்துத் திரியும் இந்நாளில் வித்துவான் கனகசபை போன்ற அமைதியான அறிஞர்களை நாம் காண்பது அரிதாகும்.

**இலக்கியப் பணி**

இலங்கை அரசின் சாகித்திய மண்டலத்தினால் வெளியிடப்பெற்ற 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தை தமிழன்பர்கள்' எவருமே மறக்க முடியாது. பேராசிரியர், கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களால் தொகுக்கப்பெற்ற இந்நூல் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை, வளர்ச்சிப் பாங்கை அறிந்திடப் பெரிதும் உதவுகிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளைத் தேடிக் கண்டறிந்து தொகுப்பதில் பெரும் பங்காற்றிய பெருமை வித்துவான் கனகசபை அவர்களையே சாரும். இவரது பயன்கருதாத இத்தமிழ்ப் பணியைப் பேராசிரியர் சதாசிவம் அவர்களே இந்நூலின் முகவுரையில் நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் புங்குடுதீவில் வாழ்ந்த இராமலிங்கச் சட்டம்பியார் என்னும் புலவரின் பாடல்களையும் இந்நூலில் இடம்பெறச் செய்த பெருமையும் வித்துவான் அவர்களையே சாரும். இதுமட்டுமின்றித் தமிழ்ப் பேரறிஞர் மறைமலை அடிகளாரின் (சுவாமி வேதாசலம்) தாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவில் வாழ்ந்தவர் என்ற உண்மையையும் கண்டறிந்து கூறியவர் வித்துவான் அவர்களே யாவார்.

## சர்வோதயப் பணி

வித்துவான் கனகசபை அவர்கள் வடபிரதேச சர்வோதய இயக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். வடபிரதேச சர்வோதய இயக்க அறங்காவலர், தொண்டர் திருநாவுக்கரசின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர். சர்வோதய இயக்கத்தின் பணிகள் பலவற்றுக்கும் உறுதுணையாக இறுதிக் காலம் வரை இருந்தவர்.

## சமயப் பணி

சைவ சித்தாந்த நெறியில் உறுதியான பற்றுக் கொண்ட வித்துவான் அவர்கள் சமய வகுப்புக்களை நடத்தியதோடு புங்குடுதீவு பெருங்காடு கந்தசுவாமி கோவிலிலும், சிவன் கோவிலிலும் இடம்பெறும் புராண படனங்களிலும் பல ஆண்டுகளாகப் பங்குகொண்டவராவார். புராணங்களுக்கு உரை கூறும் இவரது ஆற்றல் பலரதும் பாராட்டைப் பெற்றதாகும். எல்லாவற்றுக்கும் மேலாகத் திருச்செந்தூர்ப் புராணத்திற்கு இவர் எழுதிய உரை குறிப்பிடத்தக்கதாகும். மரபு தவறாத வகையில் பல்வேறு கவிதைகளையும் இவர் இயற்றியுள்ளார். பல்வேறு ஆலயங்களுக்குரிய ஊஞ்சல் பாக்களையும் வித்துவான் கனகசபை இயற்றியுள்ளார். அவை என்றும் அவரது பெயரை நினைவூட்டும் வகையில் விளங்குகின்றன.

கல்விப்பணி, சமயப்பணி, இலக்கியப்பணி, சமூக சீர்திருத்தப் பணி ஆதியாம் பல்வேறு துறைகளில் தடம் பதித்து அளப்பரிய சேவையாற்றிய வித்துவான் பொன். அ. கனகசபை அவர்களின் நாமம் என்றும் நம்மண்ணில் நின்று நிலைக்குமென்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதர் வீ. வ. நல்லதம்பி



பண்டிதர் நல்லதம்பி அல்லது சேர்மன் நல்லதம்பி என்று யாவராலும் அன்பாக அழைக்கப்பட்டவர். கல்விப்பணி, தமிழ்ப்பணி, சமயப்பணி, சமூகப் பணியாற்றிப் புகழ்பெற்றவர். மிக இளம் வயதிலேயே சமூகப் பணிகளில் முன்னின்றுழைத்த இவர் முப்பதாவது வயதிலேயே புங்குடுதீவின் கிராமசபைத் தலைவராகத் தெரிவாகிப் பணியாற்றியவர்.

யாழ். மாவட்ட கிராமசபைகளின் சமாசத் தலைவராகவும் (1954) தெரிவு செய்யப்பட்டு யாவரினதும் மதிப்பினைப் பெற்றவர்.

அரசியல் துறையிலும் ஈடுபட்டுழைத்தவர். 1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது வடபகுதியில் பல தொகுதிகளிலும் லங்கா சமசமாஜக் கட்சி போட்டியிட்டது. அவ்வேளை அக்கட்சியின் சார்பில் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளராக இவர் போட்டியிட்டார்.

தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்கத் தலைவராக, அகில இலங்கை பெற்றோர் ஆசிரியர் சங்க சம்மேளனத் தலைவராக, யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச உபதலைவராகவும் பணியாற்றியவர்.

1973-ஆம் ஆண்டு புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையேற்று அங்கு க. பொ. த. உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்க ஆவன செய்தார். இருமாடிக் கட்டிடத்தை அமைத்து, அதிக ஆசிரியர்களைச் சேவைளக்குப் பெற்று மகாவித்தியாலயத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்தரத்தை உயர்த்தினார். அத்துடன் வித்தியாலயத்தின் வெள்ளிவிழாவைச் சிறப்புற நடாத்தி இலக்கியத்தரம் மிக்க வெள்ளி விழா மலரையும் வெளியிட்டார்.

கவிதைகள், சிறுவர் பாடல்கள் பலவும் இவர் எழுதியுள்ளார்.

இறுதிக் காலத்தில் புலம் பெயர்ந்து கனடா நாட்டில் வசித்து போதும் சைவசமயப் பணிகளில் ஈடுபட்டுழைத்தார். கனடா இந்து மாமன்றத்தை நிறுவிய பெருமையும் இவருக்குண்டு.

1999ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 23ஆம் திகதி இவருக்குக் கனடாவில் இலக்கியத்திற்கான மிக உயர்ந்த விருது மாநகர மேயரால் வழங்கப்பட்டது. இவ்விருது பெற்ற முதல் தமிழர் என்ற பெருமைக்கும் இவரே உரியவரானார்.

சைவநீதி என்னும் மலரை வெளியிட்டார். மொறிசியஸ் நாட்டில் நடைபெற்ற எட்டாவது உலக சைவ மாநாட்டில் சைவ சித்தாந்தக் கலாநிதி பட்டம் இவருக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

பண்டிதர் நல்லதம்பியின் நற்பணிகளை எம்மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி க. சிவராமலிங்கம்



பட்டிமன்றம், வழக்காடுமன்றம் என்றால் அவற்றுக்குத் தலைமை வகிப்பதற்கு இவரைவிட யாருளர் எனத் தமிழன்பர்களால் விதந்து போற்றப்பட்டவர் கலாநிதி சிவராமலிங்கம். அத்துடன் ஆங்கிலப் பேச்சுக்களையும் அழகாக மொழிபெயர்த்துப் பாராட்டுக்கள் பெற்றவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பல்லாண்டுகள் தமிழ்ப் பேராசானாகவும், பதில் அதிபராகவும் கடமையாற்றியவர்.

தமிழர் வாழும் நாடெங்கும் போற்றப்படும் சிறந்த தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள், சைவத் தமிழ்ப் பேச்சாளர்கள் பலரும் இவரது மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறள் மாநாடுகள், பாரதி விழாக்கள், கம்பன் விழாக்கள், சேக்கிழார் விழாக்கள் எதிலும் இவரது தலைமையில் பட்டிமன்றம், வழக்காடு மன்றம் அல்லது இவரது உரை இடம்பெறுவது யாவரும் அறிந்ததே.

சென்னை கிறிஸ்தவ கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கற்றுப் பட்டதாரியாக நாடு திரும்பிய இவரை யாழ். இந்துக் கல்லூரி அரவணைத்துக் கொண்டது. நாற்பது ஆண்டுகள் இங்கு கடமையாற்றி நீண்ட மாணவர் பரம்பரையையே உருவாக்கினார். வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணியாற்றியவர். நல்லதொரு கல்விப் பாரம்பரியத்தை உருவாக்கியவர். அதன்வழி பல மாணவர்கள் அறிஞர்களாக, ஆய்வாளர்களாக, பேராசிரியர்களாக உருவாகி நாட்டிலும் சர்வதேசத்திலும் பிரகாசிக்க உதவியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பேராசானுக்குப் பல பட்டங்களை மக்கள் அமைப்புகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. யாழ். பல்கலைக்கழகம் இவரது சமய, இலக்கிய, சமூகப் பணிகளைப் பாராட்டி 'இலக்கிய கலாநிதி' பட்டத்தினை தேகாந்த நிலையில் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவர் பல்வேறு சஞ்சிகைகள், விழா மலர்கள், பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவை நூலுருவாக்கம் பெற வேண்டும். தன் வாழ்நாளைத் தமிழ்ப்பணிக்கே அர்ப்பணித்த பேராசான் க. சிவராமலிங்கம் என்றும் தமிழன்பர் மனதில் நிறைந்திருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின்
## ஏனைய சில நூல்கள்...

- இளங்கோவன் கதைகள்
  *(இலங்கை இலக்கியப் பேரவை – இலக்கிய வட்ட விருது பெற்றது)*
- இப்படியுமா...? *(சிறுகதைகள்)*
  *(தமிழ்நாடு கு. சின்னப்பாரதி இலக்கிய அறக்கட்டளை விருது பெற்றது)*
- பிரான்ஸ் மண்ணிலிருந்து தமிழ்க் கதைகள்
  *(இளங்கோவன் கதைகள் – இந்தி மொழி பெயர்ப்பு)*
- Tamil Stories From France
  *(இளங்கோவன் கதைகள் – ஆங்கில மொழி பெயர்ப்பு)*
- அழியாத தடங்கள் – *(கட்டுரைகள்)*
- மண் மறவா மனிதர்கள்
- கரும்பனைகள் *(கவிதைகள்)*
- சிகரம் *(கவிதைகள்)*
- இது ஒரு வாக்குமூலம் *(கவிதைகள்)*
- ஒளிக்கீற்று *(கவிதைகள்)*
- நல்ல மனிதத்தின் நாமம் டானியல்
- கே. டானியல் வாழ்க்கைக் குறிப்புகள்
- மண் மறவாத் தொண்டர் திரு
- மலை நாட்டுத் தமிழர்க்குத் துரோகமிழைத்தது யார்..?
- நோய் நீக்கும் மூலிகைகள்
- ஆரோக்கிய வாழ்வுக்குச் சில ஆலோசனைகள்
- தமிழர் மருத்துவம் அழிந்துவிடுமா..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளங்கோவனுடைய கருத்துக்களும், செயல்பாடுகளும் கிட்டத்தட்ட என்னுடன் இசைந்திருப்பதை உணர்ந்தேன். எங்கள் நட்புணர்வு என்பது மார்க்சிய புரிதலின் அடிப்படையில் வளரக்கூடியது என்பதை அப்பொழுதே உணரத் தலைப்பட்டேன்.

சித்தாந்த வழித் தொடர்பு எவ்வளவு வலிமையும் நேசிப்புத் தன்மையும், உதவும் சேவா மனப்பான்மையையும் வளர்த்தெடுக்கிறது என்பதற்கு அவர் ஒரு முன் உதாரணமாக விளங்குகிறார் என்றால் மிகையாகாது.

நட்பில் தோழமை நட்பென்பதே அலாதியானதுதான். அப்படியொரு நட்பை பெருமைப்படுத்துபவர்தான் தோழர் பாரிஸ் இளங்கோவன்.

- பிரபல நாவலாசிரியர் **கு. சின்னப்பபாரதி**

தமிழ்ப் புகலிட இலக்கிய வரலாற்றில் பிரான்சுக்கு மிகக் காத்திரமான ஓர் இடம் உண்டு. தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கப்பால் நின்று நோக்கும் பொழுது பிரான்சின் புகலிடத் தமிழ் இலக்கியத்தில் ஓர் ஆழமான பன்முகப்பாடு உண்டென்பது மறுப்பதற்கு இல்லை. அந்தப் பன்முகப்பாட்டுக்கு இளங்கோவனின் படைப்புகள் ஓர் விஸ்தரிப்பைக் கொடுக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

- பேராசிரியர் **கா. சிவத்தம்பி**
(2006)

இளங்கோவன் மிகவும் முக்கியமான எழுத்தாளர். புலச்சிதறல் புலம் பெயர்ந்தோரின் சிந்தனையை விரிவுபடுத்தியுள்ளது. அது மேலதிகப் பரிமாணமாகிவிட்டது. எழுதப்படாத சில ஆளுமைகள் பற்றியும் இளங்கோவன் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்துக் கருத்தியல் கோலங்களைக் காண வைக்கிறார்.

- பேராசிரியர் **சபா. ஜெயராசா**

**தழல் பதிப்பகம்**
மதுரை - 625 018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org